
உ
சிவமயம்

# தோத்திரப் பாமாலை



வெளியீடு:

சைவத்திரு. குழந்தைவேல் நமசிவாயம்

பிரான்ஸ்

2018

உ
சிவமயம்

# தோத்திரப் பாமாலை



வெளியீடு:

சைவத்திரு. குழந்தைவேல் நமசிவாயம்

பிராண்ஸ்

2018

ப[illegible]
ஒ[illegible]
கு[illegible]
புரி[illegible]


உ
சிவமயம்



# ஸ்ரீ ஞானவைரவர்

## வைரவர் துதி

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு மகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.




"தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

உ

சிவமயம்



# விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

முன்னவனே யானை முகத்தவனே முத்தி நலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகந்தவனே மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின் தாள் சரண்.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக்கரி முகத்து தூமணியே - நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா.

உ

சிவமயம்

# பஞ்சபுராணங்கள்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

அப்பன்நீ அம்மை நீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரு ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ அம்முத் தும்நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடியோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டேனவர்திருப் பாதங்
கண்டறியாதன கண்டேன்.

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்வாய்
செங்கயலார்புனற் செல்வமல்கு
சீர்கொள் செங்காட்டங்குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்திடுயாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

நிரைகழ லரவஞ் சிலம்பொலி
யலம்பு நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே

அம்மையே அப்பா, ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்த ஆரமுதே!
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெருமானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அணையாய் என்னைஆட் கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்டோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்தனவே.

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

அன்ன நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில் தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
சிற்றம் பலம் தன்னுள்
பொன்னும் மணியும் நிறைந்த தலத்துப்
புலித்தோல் பியற்கு இட்டு
மின்னின் இடையாள் காண
விகிர்தன் ஆடுமே.

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
முன்னம்மா லறியா ஒருவனாம் இருவா!
முக்கணா! நாற்பெருந் தடந்தோள்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகுங் கழற உளறி
உமைமண வாளனுக்(கு) ஆம்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே
புகுந்து புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி
மிகு திருவாரூரின்
மழ விடையார்க்கு வழி வழி ஆளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடியாரொடும் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண் டசுரு திப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க வென்றார்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக் கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்

ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்பொழில் தில்லையுள்
மாந டஞ்செய் வரதர்பொற் றாள்தோழ.

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்ப்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே.

செப்ப லுற்ற பொருளின் சிறப்பினால்
அப்பொ ருட்குஉரை யாவரும் கொள்வரால்
இப்பொ ருட்குஎன் உரைசிறிது ஆயினும்
மெய்ப்பொ ருட்குஉரி யார்கொள்வர் மேன்மையால்.

அருளின் நீர்மைத் திருத்தொண்டு அறிவரும்
தெருள்இல் நீர்இது செப்புதற்கு ஆம்எனின்
வெருள்இல் மெய்ம்மொழி வான்நிழல் கூறிய
பொருளின் ஆகும்எனப் புகல்வாம் அன்றே.

பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவு அரியான் என்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை.

கையில்மான் மழுவர் கங்கைசூழ் சடையில்
கதிர்இளம் பிறைநறுங் கண்ணி
ஐயர்வீற் றிருக்கும் தன்மையி னாலும்
அளப்பரும் பெருமையி னாலும்
மெய்யொளி தழைக்கும் தூய்மையி னாலும்
வென்றிவெண் குடைஅந பாயன்
செய்யகோல் அபயன் திருமனத்து ஓங்கும்
திருக்கயி லாயநீள் சிலம்பு.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி! போற்றி!

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித்திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்துக் கொரு வித்துக்குருபர - எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்திருவரும்
முப்பத்து மூவர்க்கத் தமரரும் - அடிபேண
பத்துத்தலை தத்தக் கருணைதொரு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் - இரவாகப்
பத்தற்க் கிரதத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் - ஒருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக் கொக்கு நடக்க கழுகொடு - கழுகாட
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் திரிகடக - எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென -முதுகூகை
கொப்புற்றெழ நட்பற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக்குவ, சிரி
குத்துப்பட வொத்துப் பொரவல - பெருமாளே.

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெரு வாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குண நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்தி நிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே!
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே!
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே!
குன்று உருவவேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே!
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே!
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே!
ஆறுமுகம் ஆனபொருள் நீ அருள வேண்டும்!
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே!

உம்பர்தருத் தேநுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியாய் ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்குந் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி.

## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பை
கூறு செய் தணிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேல்
ஏறிய மஞ்ஞை வாழ்க
ஆனை தன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீர் அடியாரெல்லாம்.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

# காரியசித்தி மாலை

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறைஆ கமலங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம். 1

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன்அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம். 2

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும்அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம். 3

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத்
திறத்தி னானும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான்எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 4

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம். 5

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன்எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 6

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன்அக் கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம். 7

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன்அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம். 8

இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினமும் எமைச்
சந்தி களில்தோத் திரஞ்செயினும்
சகல கருமம் சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறும் எண்
தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும்.

திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ் ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத் தொருமுறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச்செப் பினர்மறைந்தார்.

பாராயண பலன்:

(இவ்வெட்டுப் பாடல்களும் "தோத்திராட்டகம்" என வழங்கப்பெறும். இவற்றை மூன்று நாட்கள் முப்பொழுதும் ஓதினோர் எல்லாப் பேறுகளையும் பெறுவர். எட்டு நாட்கள் ஓதினோரும், சதுர்த்தியன்று எட்டுமுறை ஓதினோரும் அட்டமாசித்திகளை அடைவர். நாள்தோறும் பத்துமுறையாக இரண்டு மாதம் ஓதினோர்க்கு அரசர் வசியமாவர். அவ்வாறு இருபத்தொரு முறை ஓதினோர் மக்கட்பேறு, கல்வி, செல்வம் முதலிய எல்லா நலன்களையும் அடைவர். என்று விநாயகப் பெருமான் காசிபர் முதலியோர்க்கு அருளினமை, விநாயக புராணத்துள் கூறப்பட்டது.)

# விநாயகர் கவசம்

வளர்ச்சியைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க: வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேகம்
மதோற்கடர்தாம் அமர்ந்து காக்க:
விளரறநெற் றியைஎன்றும் விளங்கியகா
சிபர்காக்க: புருவம் தம்மைத்
தளர்வில் மகோதரர்காக்க: தடவிழிகள்
பாலச் சந்திரனார் காக்க: 1

கவின் வளரும் அதரங்கச முகர்காக்க:
தால் அங்கணக் கீரிடர் காக்க:
நலில் சிபுகங் கிரிசைசுதர் காக்க: நனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க:
அவிர் நகைதுன் முகர்காக்க: அள்ளெழிற்செஞ்
செவிபாச பாணி காக்க:
தவிதலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச் சிந்தி தார்த்தர் காக்க: 2

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்க: களங்கணேசர் காக்க:
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம் மகிழ்ந்து காக்க:
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
யகன்காக்க: இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க: அகட்
டினைத் துலங்கே ரம்பர் காக்க: 3

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க:
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினக வன்காக்க: விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க:
தக்குய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்க: சகனத்தை அல்லல்
உக்ககண பன்காக்க: ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க: 4

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்க: இரு
பதம் ஏக தந்தர் காக்க:
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க:
முன்கையை வணங்குவார் நோய்

ஆழ்தரச்செய் ஆசாபூ ரகர்காக்க:
விரல்பதும அத்தர் காக்க:
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர்காக்க:
கிழக்கினிற்புத் தீசர் காக்க: 5

அக்கினியில் சித்தீசர் காக்க:
உமாபுத்திரர் தென்திசை காக்க:
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க:
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க: வாயுவிற்கசகன்
னர்காக்க: திகழ்உ தீசி
தக்கநிதி பன்காக்க: வடகிழக்கில்
ஈசநந் தன்ரே காக்க: 6

ஏகதந்தர் பகல்முழுதும் காக்க: இர
வினும்சந்தி இரண்டன் மாட்டும்
ஒகையின்விக் கினகிருது காக்க: இராக்
கதர்பூதம் உறுவே தாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்த்திற த்தால்
வருந்துயரும், முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபு பா
சாங்குசர்தாம் விரைந்து காக்க: 7

மதி, ஞானம், தவம், தானம், மானம், ஒளி,
புகழ், குலம், வண்சரீரம், முற்றும்
பதிவான தனம், தானியம், கிரகம்
மனைவி, மைந்தர், பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்துசர்வா யுதர்காக்க:
காமர்பவுத் திரர்முன் னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க: 8

வென்றி, சீவிதங் கபிலர் காக்க: கரி
யாதியெலாம் விகடர் காக்க:
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்
ஓதிடின் நும்பால் இடையூ றொன்றும்
ஒன்றுறா: முனிவர்கள்: அறிமின்கள்:
யார் ஒருவர் ஓதினாலும்
மன்றவாங் கவர்தேகம் பிணியற: வச்
சிரதேகம் ஆகி மன்னும். 9

# விநாயகர் அகவல்

சீதக் களபச்செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன
இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முகச் சூட்சமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

(விநாயகர் அகவல் முற்றிற்று)

# 108 கணபதி போற்றி

அருள்மிகு முகனே அழகா போற்றி
அரனின் மகனே குழகா போற்றி
ஆனை முகத்தவா அருளே போற்றி
ஆதி பரம்பொருள் ஆனாய் போற்றி
இகபர சுகமது அருள்வாய் போற்றி
உடுக்குல பதியைக் கடிந்தாய் போற்றி
உமையின் சீர்பெறும் மைந்தா போற்றி
ஊரும் ஆகு வாகனா போற்றி
எழில்நடம் புரியும் இறைவா போற்றி
ஏரம் பனெனும் பொருளே போற்றி

ஐங்கர முடைய ஐயா போற்றி
ஒப்பிலா மணியே உயர்வே போற்றி
ஒடித்த கொம்பினை யுடையாய் போற்றி
ஓரெழுத் தாகிய தாரக போற்றி
கணபதி யெனும்கண நாதா போற்றி
கரியுருக் கொண்டாய் கண்ணே போற்றி
காவிய பாரதம் வரைந்தாய் போற்றி
காவிரி தோன்றக் காரணா போற்றி
கைலையை ஔவைக் கீந்தாய் போற்றி
கரும்பினை விரும்பும் கண்ணே போற்றி

முப்பழ மதிரசம் கொள்வாய் போற்றி
அப்பம் அவல்பொரி விழைந்தாய் போற்றி
கைத்தலம் நிறைகனி யுடையாய் போற்றி
உத்தமி புதல்வர் உறவே போற்றி
பந்த மனைத்தும் தகர்ப்பாய் போற்றி
தேரச்சது பொடிசெய் தீரா போற்றி
தீராப் பிணியும் தீர்ப்பாய் போற்றி
ஆராத இன்பம் அருள்வாய் போற்றி
பக்தருக் கருளும் பரமா போற்றி
பன்னிரு கரத்தவன் முதல்வா போற்றி

பாம்பணை யானின் மருகா போற்றி
சக்கரம் மாலுக் கீந்தாய் போற்றி
சடுதியில் வரமருள் இறைவா போற்றி
சுந்தர ரூபா சிறுவா போற்றி
சீதப் பனிமதி முடியாய் போற்றி
ஈசனின் மைந்தா உயிரே போற்றி
மூலப் பொருளே முதல்வா போற்றி
முக்கணான் மைந்தா பாலா போற்றி
தொப்பண குட்டு முகப்பாய் போற்றி
தற்பர சிற்ப சுகத்தாய் போற்றி

செம்ப வளக்குன் றனையாய் போற்றி
வேதமும் தாங்கும் பாதா போற்றி
நாதமும் கடந்து நிறைந்தாய் போற்றி
இன்னருள் புரியும் நின்னருள் போற்றி
என்னரும் பொருளே அரசே போற்றி
வல்லபக் கணேச குருவே போற்றி
திருவுங் கல்வியும் தருவாய் போற்றி
திருவடி பணிவோர்க் கருள்வாய் போற்றி
விளங்கு சித்தி விநாயகா போற்றி
கருங்குழி விளங்கும் கண்ணே போற்றி

குருவும் தெய்வமும் ஆனாய் போற்றி
பாம்பினை நூலாய்க் கொண்டாய் போற்றி
பரம பதமதுன் பதமே போற்றி
அட்க்ஷ மாலையது உகந்தாய் போற்றி
வல்லமை அனைத்தும் தருவாய் போற்றி
வாதாபி கணபதி நாதா போற்றி
வரமருள் தயாள குருவே போற்றி
வருத்தும் துயரது துடைப்பாய் போற்றி
வந்த வினையது போக்குவாய் போற்றி
நினைத்ததை முடிக்கும் நிமலா போற்றி

அறிவாய் ஒளிரும் நின்னுரு போற்றி
மாதுளை மாங்கனி உவந்தாய் போற்றி
என்றும் இளையாய் இறைவா போற்றி
அரக்கனைப் போரில் கொன்றாய் போற்றி
மங்களம் புரியும் மன்னா போற்றி
திங்களைக் கடிந்த பாலா போற்றி
வித்தக மருப்புடை பெருமா போற்றி
மத்தள வயிறினை யுடையாய் போற்றி
உலகுக்கு உயிராய் நிறைந்தாய் போற்றி
செய்ப்பதி மேவிய புண்ணியா போற்றி 70

சிற்றடி போற்றினேன் தலைவா போற்றி
கழலிணை சேர வருள்வாய் போற்றி
சம்புவின் குமரா அமரா போற்றி
அறுகினை முடிமேல் அணிவோய் போற்றி
எருக்கினை விரும்பிச் சேர்ப்பாய் போற்றி
தும்பை துலங்கும் மார்பா போற்றி
அம்பை அருளிய சேயே போற்றி
கம்பை மேவும் கணபதி போற்றி
நம்பினார்க் கருள்புரி மூர்த்தியே போற்றி
திக்கெல்லாம் புகழ்பெறு தீரா போற்றி 80

தியான மூர்த்தியே வீரா போற்றி
மந்த்ர மூர்த்தியே மூலா போற்றி
தந்த்ர மூர்த்தியே தலைவா போற்றி
யந்த்ர மூர்த்தியே தேவா போற்றி
யோக மூர்த்தியே நாதா போற்றி
வேண்டுவ தருளும் வீரா போற்றி
வெற்றியை அருளும் கருணை போற்றி
புத்தியை வளர்க்கும் புனிதா போற்றி
அத்தி முகத்தவா அருள்வாய் போற்றி
ஆறு முகத்தனுக் கண்ணா போற்றி 90

மூவுல காளும் முதல்வா போற்றி
முக் குணங் கடந்த நாதா போற்றி
மூன்று கண்ணுடை இறைவன் போற்றி
கற்பகக் களிறே குருவே போற்றி
நாலிரு புயத்தாய் நாயகா போற்றி
நாற்றிசை போற்றும் தலைவா போற்றி
நானற்ற விடமே நிற்பாய் போற்றி
அல்லல் களையும் அன்பே போற்றி
எல்லாம் வல்ல இறைவா போற்றி
அஞ்சக் கரத்தின் பொருளே போற்றி 100

அனைத்தும் ஆனாய் போற்றி
வேத நான்கின் பொருளே போற்றி
நாத முடிவின் முடிவே போற்றி
முடிவும் வடிவும் இல்லாய் போற்றி
அடியும் முடியும் நீயே போற்றி
கடிமலர் பூசை ஏற்பாய் போற்றி
வடிவ மனைத்தும் ஆனாய் போற்றி
வேத முதல்வா விநாயகா போற்றி 108

வேழ முகத்தரசே போற்றி சயபோற்றி

# பிள்ளையார் நாமாவளி

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

ஆற்றங்கரை மீதிலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)

யானைமுகம் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர் பக்தர் குறை தீர்ப்பவர்
(பிள்ளையார்)

அவல்கடலை சுண்டலும் அரிசிக்கொழுக்கட்டையும்
கவலையின்றி தின்னுவார் கண்ணைமூடித் தூங்குவார்
(பிள்ளையார்)

கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
(பிள்ளையார்)

ஓம் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்

ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் ஓம் நமசிவாய

ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
சிவ சிவ சிவ சிவ சிவாய நம ஓம்

ஹர ஹர ஹர ஹராய நமஓம்
சிவாய நம ஓம் ஓம் நமசிவாய

ஓம் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்

ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீக்கிவைக்கும் பிள்ளையார்

கலியுகத்தில் எம்மையும் காக்க வேண்டி வரினும்
எலியின் மீது ஏறியே இஷ்டம்போல சுற்றுவார்.
(பிள்ளையார்)

# சிவபுராணம்

தொல்லை யிரும்பிறவி சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன்அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத வின்பம் மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற வதனால்
அவனரு ளாலே யவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் மோய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்து ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கும் நல்லறிவே
ஆக்க மளவுறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் யழிப்பாய் யருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய்நின் றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன்றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெட
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாம் யல்லையுமாம்
சோதியனே நுண்ணிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே!
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே!
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாளென்னே யென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போ திப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமி டமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உளநெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோமென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

அன்னே யிவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான்ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையேயெமக் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோ மேலோர் எம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.

மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடி யோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடி மேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைக்குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்பரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறெமக் கேலோர் எம்பாவாய்.

போற்றி! அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி! அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி! யெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி! யெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி! யெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி! மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி! யாம்உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி! யாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.

(முற்றிற்று)

# திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் றிருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யேற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 1

அருணனிந் திரன்றிசை யணுகினன் னிருள்போய்
யகன்றது வுதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழ வெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்
திரணிரை யறுபத முரல்வன விவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருணிதி தரவரு மானந்த மலையே
அலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுக ளியம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரு மறிவரியாய் யெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையரி யாழின ஒருபாற்
விருக்கொடு தோத்திர மியம்பின ரொருபாற்
றுன்னிய பிணைமலர்க் கையின ரொருபாற்
றொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபாற்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபாற்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 4

பூதங்கள் டோறுநின் றாயெனி னல்லாற்
போக்கிலன் வரவிவ னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லாற்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாயெங்கண் முன்வந்
தேதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரு
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கண் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென வமுதென வறிதற்
கரிதென வெளிதென வமரரு மறியா
ரிதுவவன் திருவுரு விவனவ னெனவே
யெங்களை யாண்டுகொண் டிங்கெழுந் தருளு
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
வெதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 7

முந்திய முதனடு விறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியு நீயுநின் னடியார்
பழங்குடி தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
யந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 8
விண்ணகத் தவரு நண்ணவு மாட்டா

விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கண்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியா
ரெண்ணகத் தாயுல குக்குயிரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையினாணாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலா
மவன்விருப் பெய்தவு மலரவ னாசைப்
படவுநின் னலர்ந்தமெய்க் கருணையு நீயு
மவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

## திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபநல் தீபம்வைம்மின்
சக்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரி யும்பார்ப் பதியுங்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணமிடித்து நாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டு
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணமிடித்து நாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்து நாமே. 3

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 4

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடைய மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 5

உலக்கை பலவோச்சு வார்பெரியார்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்து நாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் ஆர்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 7

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சேர்த்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. 8

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்து றையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 10

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 11

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குன் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்த கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவி ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்தியவெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்து நாமே. 16

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதருக்குச் சுண்ணம் இடித்து நாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்து நாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயி னர்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்
காதியும் அந்தமும் ஆயி னாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 20

திருச்சிற்றம்பலம்

## ஸ்ரீ மஹா லிங்காஷ்டகம்

1. ப்ரஹ்மமுராரி ஸுரார்சித லிங்கம்
நிர்மலபாஸித ஸோபித லிங்கம்
ஜந்மஜதுக்க விநாசக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

2. தேவமுநி ப்ரவ ரார்ச்சித லிங்கம்
காமதஹம் கருணாகர லிங்கம்
ராவணதர்ப்ப விநாசந லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

3. ஸர்வஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்திவிவர்த்தன காரண லிங்கம்
ஸித்தஸுராஸுர வந்தித லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

| | | | |
|---|---|---|---|
| 4. | கணகமஹாமணி | பூஷித | லிங்கம் |
| | பணிபதிவேஷ்டித | ஸோபித | லிங்கம் |
| | தக்ஷஸுயக்ஞ | விநாசன | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 5. | குங்குமசந்தன | லேபித | லிங்கம் |
| | பங்கஜஹாரஸு | ஸோபித | லிங்கம் |
| | ஸஞ்சிதபாப | விநாசக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 6. | தேவகணார்ச்சித | ஸேவித | லிங்கம் |
| | பாவைர்பக்திபிர் | ஏவச | லிங்கம் |
| | திநகர கோடி | ப்ரபாகர | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 7. | அஷ்டதளோபரி | வேஷ்டித | லிங்கம் |
| | ஸர்வஸமுத்பவ | காரண | லிங்கம் |
| | அஷ்டதரித்ர | விநாசித | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| 8. | ஸுரகுருஸுரவர | பூஜித | லிங்கம் |
| | ஸுரவந புஷ்ப | ஸதார்சித | லிங்கம் |
| | பராத்பரம் | பரமாத்மக | லிங்கம் |
| | தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |

"லிங்காஷ்டகம் இதம் ஸ்தோத்திரம்
ய..படேத் சிவசந்நிதௌ
சிவலோக மவாப் றோதி
சிவனே ஸஹ மோததே"

## நந்தீஸ்வரர் பெருமை

நந்திஎம் பெருமான் தன்னை
நாடோறும் வணங்கு வோர்க்குப்
புந்தியில் ஞானம் சேரும்
பொலிவுறு செல்வம் கூடும்
சிந்தையில் அமைதி தோன்றும்!
சிறப்புறு மக்கள் சேர்வர்!
இந்திர போகம் கிட்டும்!
இணையிலா வாழ்வு தானே!

## நலம் தரும் நந்தி

கந்தனின் தந்தையைத் தான் சுமந்து செல்வாய்
நந்தனார் வணங்குதற்கு நடையினில் விலகி நின்றாய்
அந்தமாய் ஆதியாகி அகிலத்தைக் காக்க வந்தாய்
நந்தியே உனைத்துதித்தேன் நாடி வந்தெம்மைக் காப்பாய்
ஒன்பது கோள்களுக்கும் உயரியபலம் கொடுப்பாய்
பொன் பொருள் குவிய வைப்பாய் புகழையும் வளர்த்துவைப்பாய்

சிந்தனை வளம்கொடுப்பாய் சிகரத்தில் தூக்கி வைப்பாய்
நந்தியே உனைத்துதித்தேன் நாடிவந்தெம்மைக் காப்பாய்
மாலைகள் ஏற்க வைப்பாய் மழலைகள் பிறக்க வைப்பாய்
வேலைகள் கிடைக்கவைப்பாய் விதியையும் மாற்றி வைப்பாய்
நாளும் நான் உனை துதித்தேன் நாடி வந்தெம்மை காப்பாய்

தஞ்சையில் பெரிய நந்தி தளிருடல்வெண்ணெய் சாத்தி
அஞ்சாத வேந்தன் நந்தி அழகிய நெகமம் நந்தி
குஞ்சர முகத்தான் தந்தை குந்திடும் ரிஷப நந்தி
தஞ்சமாய் உனையடைந்தேன் தயங்காது எமைக் காப்பாய்

# நலம் சேர்க்கும் நந்தீஸ்வரா

சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி
சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி
கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி
கயிலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி

பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி
பார்வதியின் சொல்கேட்டுச் சிரிக்கும் நந்தி
நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி
நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி
செங்கரும்பு உணவு மாலை அணியும் நந்தி
சிவனுக்கே உறுதுணையாய் விளக்கும் நந்தி
மங்களங்கள் அனைத்தையும் கொடுக்கும் நந்தி
மனிதர்களின் துயர் போக்க வந்த நந்தி

அறுகம்புல் மாலையையும் அணியும் நந்தி
அரியதொரு வில்வமே ஏற்ற நந்தி
வரும் காலம் நலமாக வைக்கும் நந்தி
வணங்குகிறோம் எமைக்காக்க வருக நந்தி

பிரதோஷ காலத்தில் பேசும் நந்தி
பேரருளை மாந்தருக்கு வழங்கும் நந்தி
வரலாறு படைத்து வரும் வல்ல நந்தி
வறுமையினை எந்நாளும் அகற்றும் நந்தி

கெட்டகனா அத்தனையும் மாற்றும் நந்தி
கீர்த்தியுடன் குலம் காக்கும் இனிய நந்தி
வெற்றிவரும் வாய்ப்பளிக் உதவும் நந்தி
விதியினைத்தான் மாற்றிவிட விளையும் நந்தி

வேந்தன் நகர் நெய்யினிலே குளிக்கும் நந்தி
வியக்க வைக்கும் தஞ்சையிலே பெரிய நந்தி
சேர்ந்த திருபுன் கூரிலே சாய்ந்த நந்தி
செவி சாய்த்து அருள் கொடுக்கும் செல்வ நந்தி

கும்பிட்ட பக்தர் துயர்நீக்கும் நந்தி
குடம்குடமாய் அபிஷேகம் பார்த்த நந்தி
பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்விக்க எம் இல்லம் வருக நந்தி!

## நமசிவாய மாலை

ஓம் நமசிவாயஓம் ஓம் நமசிவாய
ஓம் நமசிவாயஓம் ஓம் நமசிவாய

ஆதியான அஞ்சிலும் அனாதியான நாலிலும்
சோதியான மூன்றிலும் சொரூபமற்ற ரெண்டிலும்
நீதியான தொன்றிலும் நிறைந்து நின்ற வஸ்துவை
ஆதியான தொன்றுமே யற்றதஞ் செழுத்துமே.

சக்தி நீ தயவு நீ தயங்கு சங்கினோசை நீ
சித்தி நீ சிவனும் நீ சிவாய மாமெழுத்து நீ
முத்தி நீ முதலும் நீ மூவரான தேவர் நீ
அத்திபுர மும்முனை யறிந்துணர்ந்து கொள்ளுமே.

ஆறு நாடு தேடினும் ஆனை சேனைதேடினும்
கோடிவாசி தேடினும் குறுக்கே வந்து நிற்குமோ
ஓடி இட்ட பிச்சையும் உகந்து செய்த தர்மமும்
சாடிவிட்ட குதிரைபோல் தர்மம் வந்து நிற்குமே.

கண்ணிலே இருப்பவனே கருங்கடல் கடந்துமால்
விண்ணில் இருப்பவனே மேவியங்கு நிற்பனே
தன்னுளே இருப்பவனே தராதலம் படைத்தவன்
என்னுளே இருப்பவனே எங்குமாகி நிற்பனே.

அண்டமேழு முழலவே யணிந்தயோனி யுழலவே
பண்டு மாலயனுடன் பரந்து நின்றுழலவே
எண்டிசை கடந்து நின்றிருண்ட சக்தியுழலவே
அண்டரண்ட மொன்றதாய் ஆதி நடமாடுமே.

## சிவலிங்க தியான அர்ச்சனை மாலை

### தியானம்

தவளமய சரீரம் சர்ப்பசூலாஹ பாசம்
பரமகல கண்டம் கண்டகம் வஜ்ரயுக்தம்
அபயவரத கஸ்தம் பஞ்சவக்த்ரம் திறிநேத்ரம்
நதிசசி மௌலி சாபாலிங்கமூர்த்திம் நமாமி

ஓம் சிவ லிங்காய நமக
ஓம் அற்புத லிங்காய நமக
ஓம் அநுகத லிங்காய நமக
ஓம் அவ்யக்த லிங்காய நமக
ஓம் அர்த்த லிங்காய நமக
ஓம் அச்சுத லிங்காய நமக
ஓம் அநாதக லிங்காய நமக
ஓம் அநந்த லிங்காய நமக
ஓம் அகிலேச லிங்காய நமக
ஓம் அந்தக நாசக லிங்காய நமக
ஓம் அந்தக சம்கார லிங்காய நமக
ஓம் அகநிக குண லிங்காய நமக
ஓம் அதர்வ லிங்காய நமக
ஓம் அஷ்டதிகீஸ்வரபூஜித லிங்காய நமக
ஓம் அனாதி லிங்காய நமக
ஓம் அகோர லிங்காய நமக
ஓம் அப்பு லிங்காய நமக
ஓம் அமிர்த லிங்காய நமக
ஓம் ஆதி லிங்காய நமக

ஓம் ஆநந்த லிங்காய நமக
ஓம் ஆசிறித ரக்ஷக லிங்காய நமக
ஓம் ஆர்ச்சிதபாப விநாச லிங்காய நமக
ஓம் ஆகம லிங்காய நமக
ஓம் ஆத்ம லிங்காய நமக
ஓம் ஆகாச லிங்காய நமக
ஓம் இந்து கலாதர லிங்காய நமக
ஓம் இந்ர சாப விமோசன லிங்காய நமக
ஓம் ஈச லிங்காய நமக
ஓம் ஈசாந லிங்காய நமக
ஓம் உரக விபூஷண லிங்காய நமக
ஓம் ஊர்த்வ லிங்காய நமக
ஓம் இருக்வேத சுறுதி லிங்காய நமக
ஓம் இலுவந்ய லிங்காய நமக
ஓம் லூதபவபாச பிரஞ்சந லிங்காய நமக
ஓம் ஏக லிங்காய நமக
ஓம் ஐஸ்வர்ய லிங்காய நமக
ஓம் ஓங்காராதிப லிங்காய நமக
ஓம் ஔரஸலாலித லிங்காய நமக
ஓம் அம்புஜாச நஸ்துத லிங்காய நமக
ஓம் அக்ஷணதொஜொ லிங்காய நமக
ஓம் கனக லிங்காய நமக
ஓம் கருணாலய லிங்காய நமக
ஓம் காசி லிங்காய நமக
ஓம் காந்திமதிப்பிரிய லிங்காய நமக
ஓம் கேதீச லிங்காய நமக
ஓம் கேதார லிங்காய நமக
ஓம் கோணேச லிங்காய நமக
ஓம் குமார லிங்காய நமக
ஓம் கண்டபரசு மிருகடங்கதநுர்தர லிங்காய நமக
ஓம் கங்காதர லிங்காய நமக
ஓம் கண லிங்காய நமக
ஓம் கிரீச லிங்காய நமக

| | | |
|---|---|---|
| ஓம் | குணகித | லிங்காய நமக |
| ஓம் | கண்டாநாதபிரிய | லிங்காய நமக |
| ஓம் | நப்பிரிய | லிங்காய நமக |
| ஓம் | சந்தன லேபந | லிங்காய நமக |
| ஓம் | சிதம்பர | லிங்காய நமக |
| ஓம் | சின்மய | லிங்காய நமக |
| ஓம் | சத்திரி கிறுதயசோ | லிங்காய நமக |
| ஓம் | சின்னபாய கிறுத | லிங்காய நமக |
| ஓம் | ஜல | லிங்காய நமக |
| ஓம் | ஜோதி | லிங்காய நமக |
| ஓம் | ஜரிதாசேஷபாதக | லிங்காய நமக |
| ஓம் | ஞாய | லிங்காய நமக |
| ஓம் | ஞானக்ஞான விநாச | லிங்காய நமக |
| ஓம் | டங்கி தாகிலலோக | லிங்காய நமக |
| ஓம் | டஸ்வரூப | லிங்காய நமக |
| ஓம் | டமருகபிரிய | லிங்காய நமக |
| ஓம் | டக்காநாதபிரித | லிங்காய நமக |
| ஓம் | ணத | லிங்காய நமக |
| ஓம் | ணகம்ய | லிங்காய நமக |
| ஓம் | தத்வரூப | லிங்காய நமக |
| ஓம் | தாப சநிவாரண | லிங்காய நமக |
| ஓம் | தேஜோமய | லிங்காய நமக |
| ஓம் | த்ரயம்பக | லிங்காய நமக |
| ஓம் | தரூப | லிங்காய நமக |
| ஓம் | தமஸ்தரூப | லிங்காய நமக |
| ஓம் | தாநவநாசக | லிங்காய நமக |
| ஓம் | தநதார்ச்சித | லிங்காய நமக |
| ஓம் | தநஞ்சயவர | லிங்காய நமக |
| ஓம் | நந்திவாகன | லிங்காய நமக |
| ஓம் | நகுலேச | லிங்காய நமக |
| ஓம் | நாத | லிங்காய நமக |
| ஓம் | நாகேச | லிங்காய நமக |
| ஓம் | நியமார்ச்சித | லிங்காய நமக |

ஓம் நிர்மல லிங்காய நமக
ஓம் பரேச லிங்காய நமக
ஓம் பாதாள லிங்காய நமக
ஓம் பூர்ண லிங்காய நமக
ஓம் பிருதுவி லிங்காய நமக
ஓம் பாலவிலோசந லிங்காய நமக
ஓம் பந்த விமோசந லிங்காய நமக
ஓம் பாண லிங்காய நமக
ஓம் பகார லிங்காய நமக
ஓம் பஸ்மவிலேபந லிங்காய நமக
ஓம் பீமசங்கர லிங்காய நமக
ஓம் புவநவ்யாபக லிங்காய நமக
ஓம் பைரவ லிங்காய நமக
ஓம் மங்களபிரத லிங்காய நமக
ஓம் மகாபல லிங்காய நமக
ஓம் மாகான லிங்காய நமக
ஓம் மூர்த்தி லிங்காய நமக
ஓம் யக்ஞாங்க லிங்காய நமக
ஓம் யதிஸேவித லிங்காய நமக
ஓம் ரமணிய லிங்காய நமக
ஓம் ரகஸ்ய லிங்காய நமக
ஓம் ராமேச லிங்காய நமக
ஓம் ராவணார்ச்சித லிங்காய நமக
ஓம் ருத்ர லிங்காய நமக
ஓம் லங்கேச லிங்காய நமக
ஓம் லாவண்ய லிங்காய நமக
ஓம் வன்னி லிங்காய நமக
ஓம் வாயுபூதகாளஸ்திச லிங்காய நமக
ஓம் விபீஷண லிங்காய நமக
ஓம் வேத லிங்காய நமக
ஓம் சங்கர லிங்காய நமக
ஓம் ஸ்ரீசைல லிங்காய நமக
ஓம் ஷண்முக லிங்காய நமக

ஓம் ஷாட்குண்யாதீத லிங்காய நமக
ஓம் சம்சாரார்ணவதாரண லிங்காய நமக
ஓம் சர்வபாபநாசக லிங்காய நமக
ஓம் சாக்ஷி லிங்காய நமக
ஓம் சோமேச லிங்காய நமக
ஓம் ஹாரூப லிங்காய நமக
ஓம் ளகலீச லிங்காய நமக
ஓம் க்ஷமக்ஷேஷ்தர லிங்காய நமக

## ஸ்ரீ சிவாஷ்டோத்திரம்

1. ஓம் சிவாய நம:
2. ஓம் மஹேஸ்வராய நம:
3. ஓம் சம்புவே நம:
4. ஓம் பிநாகிநே நம:
5. ஓம் சசிசேகராய நம:
6. ஓம் வாமதேவாய நம:
7. ஓம் விருபாக்ஷாய நம:
8. ஓம் கபர்த்திநே நம:
9. ஓம் நீலலோஹிதாய நம:
10. ஓம் சங்கராய நம:
11. ஓம் ஸூலபரணயே நம:
12. ஓம் கட்வாங்கிநே நம:
13. ஓம் விஷ்ணு வல்லபாய நம:
14. ஓம் சிபிவிஷ்டாய நம:
15. ஓம் அம்பிகா நாதாய நம:
16. ஓம் ஸ்ரீகண்டாய நம:
17. ஓம் பக்தவத்ஸலாய நம:
18. ஓம் பாவாய நம:
19. ஓம் சர்வாய நம:
20. ஓம் த்ரிலோகேசாய நம:
21. ஓம் சிதிகண்டலா நம:
22. ஓம் சிவாப்ரியாய நம:

23. ஓம் உக்ராய நம:
24. ஓம் கபர்த்திநே நம:
25. ஓம் காமாரயே நம:
26. ஓம் அந்தாகஸுதநாய நம:
27. ஓம் கங்காதரயா நம:
28. ஓம் லலாடாஷாய நம:
29. ஓம் கால காலாய நம:
30. ஓம் கிருபாநிதியே நம:
31. ஓம் பீமாய நம:
32. ஓம் பரசுஹஸ்தாய நம:
33. ஓம் ம்ருகபாணயே நம:
34. ஓம் ஜடாதராய நம:
35. ஓம் கைலாஸ வாஸிதே நம:
36. ஓம் கவசினே நம:
37. ஓம் கடோராய நம:
38. ஓம் த்ரிபுராந்தகாய நம:
39. ஓம் வ்ருஷாங்காய நம:
40. ஓம் வ்ருஷபாரூடாய நம:
41. ஓம் பஸ்மோத்தூ ளி நம:
42. ஓம் தவிக்ரவஹாய நம:
43. ஓம் ஸாமப்ரியாய நம:
44. ஓம் ஸ்வரமயாய நம:
45. ஓம் த்ரயீ மூர்த்தயே நம:
46. ஓம் அநீச்வராய நம:
47. ஓம் ஸர்வஞ்ஞாய நம:
48. ஓம் பரமாத்மனே நம:
49. ஓம் ஸோமசூரிய நம:
50. ஓம் யாக்னிலோ சயை நம:
51. ஓம் ஹவிஷே நம:
52. ஓம் யஞ்ஞமயாய நம:
53. ஓம் கஸாமாய நம:
54. ஓம் பஞ்சவக்த்ராய நம:

55. ஓம் ஸதாசிவாய நம:
56. ஓம் விச்வேச்வராய நம:
57. ஓம் வீரபத்ராய நம:
58. ஓம் கணநாதாய நம:
59. ஓம் ப்ரஜாபதயே நம:
60. ஓம் ஹிரண்யரே தஸே நம:
61. ஓம் துர்தர்ஷாய நம:
62. ஓம் கிரசாய நம:
63. ஓம் அநகாய நம:
64. ஓம் பஜங்க பூஷணாய நம:
65. ஓம் பர்க்காய நம:
66. ஓம் கிரிப்ரியாய நம:
67. ஓம் க்ருத்தி வாஸிஸே நம:
68. ஓம் புராராதயே நம:
69. ஓம் பகவதே நம:
70. ஓம் ப்ரமதாதிபாய நம:
71. ஓம் ம்ருத்யுஞ்ஜயாய நம:
72. ஓம் ஸூக்ஷ்மதநவே நம:
73. ஓம் ஜகத்வ்யாபிநே நம:
74. ஓம் ஜகத்குருவே நம:
75. ஓம் வ்யோமகேசாய நம:
76. ஓம் மஸாஸே நஜநகாய நம:
77. ஓம் சாருவிக்ரமாய நம:
78. ஓம் ருத்ராய நம:
79. ஓம் பூதபதயே நம:
80. ஓம் ஸ்தாணவே நம:
81. ஓம் அஹிர்ப்புத்ந்யாய நம:
82. ஓம் திகம்பராய நம:
83. ஓம் அஷ்டமூர்த்தியே நம:
84. ஓம் அநேகாத்மநே நம:
85. ஓம் ஸாத்விகாய நம:
86. ஓம் சுத்தவிக்ரஹாய நம:

87. ஓம் சாஸ்வதாய நம:
88. ஓம் கண்ட பரசவே நம:
89. ஓம் அஜாய நம:
90. ஓம் பாசவிமோசகாய நம:
91. ஓம் ம்ருடாய நம:
92. ஓம் பசுபதயே நம:
93. ஓம் தேவாய நம:
94. ஓம் மஹாதேவாய நம:
95. ஓம் கிரிசா நம:
96. ஓம் அவ்யயாய நம:
97. ஓம் ஹரயே நம:
98. ஓம் பூஷாதந்தபிதே நம:
99. ஓம் தக்ஷாத்வர ஹராய நம:
100. ஓம் ஹராய நம:
101. ஓம் பகநேத்ரபிதே நம:
102. ஓம் அவ்யக்தாய நம:
103. ஓம் ஸஹஸ்ராஷிய நம:
104. ஓம் ஸஹஸ்ரபதே நம:
105. ஓம் அபவர்க்கப்ரதாய நம:
106. ஓம் அனந்தாய நம:
107. ஓம் தாரகாய நம:
108. ஓம் பரமேசுவராய நம:

ஓம் நானாவித மந்தர புஷ்பாணி ஸமர்ப்பயாமி நம:

# கௌரி காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீ இருந்தாய்
அரனைநினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழி வழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக்காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம்ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு

காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நாம் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பலவகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினை காக்கும் காப்பவளே
என் தாயே வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்திழையே தாயாரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்குத் தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்பினைக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் கொழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்

ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொரு நாள்வரையில் இசையும் விரதமொடு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
இச்சகத்தி லுள்ளோர் எல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவிட
ஞானம் கிளர்ந்து வர நல்லருளைச் செய்திடுவாய்
தெவிட்டாத தீங்கனியே தேவி பராசக்தியம்மா
காளியாய் வந்தமர்ந்த கௌரியம்மா காப்பருள்வாய்.

## அபிராமி அந்தாதி

### காப்பு

தாரமர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே உலகேழும் பெற்ற
சீரபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே நிற்கக் கட்டுரையே

### நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமத் தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே! 1

துணையும் தொழுந்தெய்வமும் பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரியாவது அறிந்தனமே 2

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே திருவே வெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே 3

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே 4

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர் முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே 5

சென்னியது உன் பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திருமந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே
பன்னியது என்றும் உன்றன் பரமாகம பத்ததியே 6

ததியுறு மத்திற் சுழலும் என் ஆவிதளர் விலதோர்
கதியுறு வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும்மாலும் வணங்கியென்றும்
துதியுறு சேவடியாய் சிந்துரானை சுந்தரியே 7

சுந்தரி எந்தை துணைவி என் பாசத்தொடரை யெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
சுந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே 8

கருத்தன எந்தைதன் கண்ணன் வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம்மே வந்தென் முன் நிற்கவே 9

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே 10

ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடிவுடையாள் மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணாரவிந்தத் தவளநிறக்
கானந்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக்கண்ணியதே 11

கண்ணியதுன்புகழ் கற்பதுன் நாமம் கசிந்து பத்தி
பண்ணியதுன் இரு பாதம் புயத்தில் பகல் இரவா
நண்ணிய துன்னை நயந்தோர் அவையத்து நான் முன்செய்த
புண்ணியம் ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே 12

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே 13

வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர் நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே 14

தண்ணளிக்கென்று முன்னே பல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார் மதிவானவர்தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே 15

கிளியே இளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே 16

அதிசயமான வடிவுடையாள் அரவிந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி துணை இரதி
பதிசயமானது அபசயமாக முன் பார்த்தவர்தம்
மதிசயமாக வன்றோ வாம பாகத்தை வவ்வியதே 17

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகி வந்து
வெவ்விய காலன் என் மேல் வரும்போது வெளிநிற்கவே 18

வெளிநின்ற நின்திரு மேனியைப்பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றதென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே 19

உறைகின்ற நின்திருக்கோயில் நின்கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோ முடியோ அமுதம்
நிறைகின்ற வெண் திங்களோ கஞ்சமோ என்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதியோ பூரணாசல மங்கலையே 20

மங்கலை செங்கலசம் முலையாள் மலையாள் வருணச்
சங்கலை செங்கைச் சகலகலா மயில்தாவு கங்கை
பொங்கலை தங்கும் புரிசடையோன் புடையாள் உடையாள்
பிங்கலை நீலி செய்யாள் வெளியாள் பசும் பெண் கொடியே 21

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே மறையின் பரிமளமே பனிமால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்திங்கு இனிப்பிறவாமல் வந்து ஆண்டுகொள்ளே 22

கொள்ளேன் மனத்தில்நின் கோலமல்லா தன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன்மூவுலகுக்கு
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே களிக்கும் களியே அளிய என் கண்மணியே 23

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே 24

பின்னே திரிந்துன் அடியாரைப்பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனியுன்னை யான்மறவாமல் நின்று ஏத்துவனே 25

ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம் கமழ்பூங்கடம்பு
காத்தும் குழல் அணங்கே மணம் நாறும் நின் தாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே 26

உடைத்தனை வஞ்சப்பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்தழுக்கையெல்லாம் நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே 27

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே 28

சித்தியும் சித்தி தரும் தெய்வமாகித் திகழும் பரா
சக்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே 29

அன்றே தடுத்தென்னை ஆண்டுகொண்டாய் கொண்டல்லா என்கை
நன்றே உனக்கினி நான் என்செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே
ஒன்றே பல உருவே யருவே என் உமையவளே 30

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கன்பு செய்யவைத்தார் இனி எண்ணுதற்குச்
சமயங்களும் இல்லை ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே 31

ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல் பட இருந்தேனை நின்பாதமென்னும்
வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டுகொண்ட
நேசத்தை என் சொல்லுவேன் ஈசர்பாகத்து நேரிழையே 32

இழைக்கும் வினைவழியே அடுங்காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக்குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பவன் ஓடிவந்தே 33

வந்ததே சரணம் புகும் அடியாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கற் கருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே 34

திங்கள் பகவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்துமோ தரங்கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே 35

பொருளே பொருள் முடிக்கும் போகமே அரும்போகம் செய்யும்
மருளே மருளில் வரும் தெருளே என்மனத்து வஞ்சத்து
இருளேது மின்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்றன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே 36

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்துமாலை விட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக்கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடையானிடம் சேர்பவளே 37

பவளக்கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையாய் எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணை முலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே 38

ஆளுகைக்கு உந்தன் அடித்தாமரைகளுண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உந்தன் விழியின் கடையுண்டு மேல் இவற்றில்
மூளுகைக்கு என்குறை நின்குறையே அன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாள்நுதலே 39

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதை நெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே 40

புண்ணியம் செய்தனமே மனமே புதுப்பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்
நண்ணியிங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே 41

இடங்கொண்டு விம்மி இணைகொண்டு இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலை கொண்டு இறைவா வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே 42

பரிபுரச்சீறடிப் பாசாங்குசை பஞ்சபாணி யின்சொல்
திருபுரசுந்தரி சிந்துர மேனியள் தீமை நெஞ்சில்
பரிபுரவஞ்சரை அஞ்சக்குனி பொருப்புச் சிலைக்கை
எரிபுரைமேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே 43

தவளே இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினன் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனியொரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே 44

தொண்டு செய்யாது நின்பாதந்தொழாது துணிந்திச்சையே
பண்டு செய்தார் உளரோ இலரோ அப்பரிசடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ அன்றிச் செய்தவமோ
மீண்டு செய்தாலும் பொறுக்கை நன்றேபின் வெறுக்கையன்றே 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடியாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புதுநஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யான் உன்னை வாழ்த்துவனே 46

வாழும் படியொன்று கண்டு கொண்டேன் மனத்தே ஒருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை யெட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே 47

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே 48

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்து அரிவையர் சூழவந்து அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசை வடிவாய் நின்ற நாயகியே 49

நாயகி நான்முகி நாராயணி கை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கியென்று
ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே 50

அரணம் பொருளென்று அருள் ஒன்றிலாத அசுரர்தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே 51

வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே 52

சின்னஞ்சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும் முத்தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங்கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில் வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே 53

இல்லாமை சொல்லி ஒருவர் தம் பாற் சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே 54

மின் ஆயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்ற(து)
அன்னாள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும் உன்னிலும் வேண்டுவ தொன்றில்லையே 55

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள் என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா இப்பொருளறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே 56

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம் செயும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே 57

அருணாம் புயத்தும் என் சித்தாம்புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல் நல்லாள் தகைசேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும் அல்லால் கண்டிலேன் ஒரு தஞ்சமுமே 58

தஞ்சம் பிறிதில்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒன்றை நீள்சிலையும்
அஞ்சு அம்பும் இக்கு அலராக நின்றாய் அறியாரெனினும்
பஞ்சு அஞ்சு மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே 59

பாலினுஞ் சொல் இனியாய் பனிமாமலர்பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்க நின்றோன் கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சால நன்றோ அடியேன் முடை நாய்த்தலையே 60

நாயேனையும் இங்கொரு பொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய் நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவு தந்தாய் என்ன பேறு பெற்றேன்
தாயே மலை மகளே செங்கண்மால் திருத்தங்கச்சியே 61

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்து மத
வெங்கண் கரியுரி போர்த்த செஞ்சேவகன் மெய் அடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என்சிந்தையதே 62

தேறும்படி சில ஏதுவும் காட்டி முன்செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றில் கொட்டும் தறிகுறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயமுண்டென்று கொண்டாடிய வீணருக்கே 63

வீணே பலிகவர் தெய்வங்கள் பால் சென்று மிக்க அன்பு
பூணேன்உனக்கு அன்பு பூண்டு கொண்டேன் நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒரு பொழுதும் திருமேனிப்பிரகாசமன்றிக்
காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே 64

ககனமும் வானும் புவனமும் காணவில் காமன் அங்கம்
தகனம் முன்செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனும் முந்நான்கு இரு மூன்று எனத்தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயதன்றோ வல்லி நீ செய்த வல்லபமே 65

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றொன்றிலேன் பசும்பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல் அவமாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே 66

தோத்திரம் செய்து தொழுது மின்போலும் நின்தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில் வையாதவர் வண்மை குலம்
கோத்திரம் கல்வி குணம் குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலா நிற்பர் பாரெங்குமே 67

பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர்விசும்பும்
ஊரும் உருகு சுவையொளி ஊறொளி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவம் உடையார் படையாத தனம் இல்லையே 68

தனம் தரும் கல்விதரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே 69

கண்களிக்கும்படி கண்டு கொண்டேன் கடம்பாடவியல்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே 70

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பாதாம் புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழிவுற்று நின்ற நெஞ்சே இரங்கேல் உனக்கு என்குறையே 71

என்குறை தீரநின்று ஏத்துகின்றேன் இனியான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார்குறை காண் இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்கறை தீர எங்கோன் சடைமேல் வைத்த தமரையே 72

தாமம் கடம்பு படைபஞ்சபாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடிச் செங்கைகள் நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே 73

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன் என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே 74

தங்குவர் கற்பகத் தருவின் நிழலில் தாயாரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே 75

குறித்தேன் மனத்தில் நின் கோலமெல்லாம் நின்குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டு கிண்டி
வெறித்தேன் அவிழ் கொன்றை வேணிப்பிரான் ஒரு கூற்றை மெய்யில்
பறித்தேன் குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே 76

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே 77

செப்பும் கனக கலசமும் போலுந் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதி வைத்தேன் என் துணை விழிக்கே 78

விழிக்கே அருள் உண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டு இனியே 79

கூட்டியவா என்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டியவா என்கண் ஓடியவா தன்னை உள்ள வண்ணம்
காட்டியவா கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டியவா நடமாடகத் தாமரை ஆரணங்கே 80

அணங்கே அணங்குகள் நின்பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவு ஒன்றிலென் என்கண் நீ வைத்தபேரொளியே 81

அளியார் கமலத்தில் ஆரணங்கே அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுந்தொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ஙனே மறப்பேன் நின் விரகினையே 82

விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக் கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல்லார் இமையோர் எவரும்
பரவும் பதமும் அயிராவதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக்காவும் உடையவரே 83

உடையாளை ஒல்கு செம்பட்டுடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளைத் தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள் பெம்மானிடையாளை இங்கு என்னையினிப்
படையாளை உங்களையும் படையா வண்ணம் பார்த்திருமே 84

பார்க்குந் திசைதொறும் பாசாங்குசமும் பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும் என் அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலையும் முலைமேல் முத்து மாலையுமே 85

மால் அயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திருமூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால் விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படி ஒரு பாகங் கொண்டாளும் பராபரையே 87

பரமென்று உனை யடைந்தேன் தமியேனும் உன் பக்தருக்குள்
தரமன்று இவனென்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரமன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில் அயன்
சிரமொன்று செற்றகையான் இடப்பாகம் சிறந்தவளே 88

சிறக்கும் கமலத் திருவே நின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும் நின் துணைவரும் நீயும் துரியமற்ற
உறக்கந்தர வந்து உடம்போடு உயிர்உறவு அற்ற அறிவு
மறக்கும் பொழுது என் முன்னே வரல் வேண்டும் வருந்தியுமே 89

வருந்தா வகையென் மனத்தாமரையினில் வந்து புகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனி எனக்குப்
பொருந்தாது ஒரு பொருள் இல்லை விண்மேவும் புதல்வருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே 90

மெல்லிய நுண்ணிடை மின்னனையாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன் அனையாளைப் புகழ்ந்து மறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழும் அவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம் தருமே 91

பதத்தே உருகிநின் பாதத்திலே மனம்பற்றி உன்றன்
இதத்தே ஒழுக அடிமை கொண்டாய் இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன் அவர்போன வழியும் செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே 92

நகையே இஃதிந்த ஞாலமெல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ் முலைமானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே 93

விரும்பித்தொழும் அடியார் விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பி ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடுமாறி முன் சொன்ன எல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால் அபிராமி சமயம் நன்றே 94

நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவது
ஒன்றேயுமில்லை உனக்கேபரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட்டேன் அழியாதகுணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே 95

கோமளவல்லியை அல்லியந் தாமரைக் கோயில் வைகும்
யாமள வல்லியை ஏதமிலாளை எழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே 96

ஆதித்தன் அம்புலி அங்கி, குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதிய முனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே 97

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறுங் கரந்த தெங்கே
மெய்வந்த நெஞ்சின் அல்லால் ஒருகாலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல் அறியா மடப் பூங்குயிலே 98

குயிலாய் இருக்கும் கடம்பா அடவியிடைக் கோலவியல்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே 99

குழையத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்தோளும் கரும்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண் நகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றதே 100

### நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்குச பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே

## அபிராமி துதி

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி யிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரோடு கூட்டு கண்டாய்!
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

## சகலகலாவல்லி மாலை

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாதுகொ
லோசகமேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 01

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே. 02

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே. 03

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக்கடலே
சகல கலாவல்லியே. 04

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்திருந்தாய்
சகல கலாவல்லியே. 05

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலுங் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 06

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந்தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப்பேடே
சகல கலாவல்லியே. 07

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தத் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே. *08*

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே. *09*

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே. *10*

## இலக்குமி துதி

சித்தம் தெளிந்திடும், செய்வினை யாவும் திருத்தமுறும்
நித்தம் மறந்தெழு செல்வமும் தங்கி நிலைபெறும் நல்
முத்தர்க்குரிய பெரும்பதம் வாய்க்கும், இம்மூதுலகில்
பக்தர்க் கருளும் திருமகள் பாதம் பணிபவர்க்கே.

நித்தமுனை வேண்டி மனம்
நினைப்பதெல்லாம் நீயாய்ப்
பித்தனைப் போல் வாழ்வதிலே
பெருமையுண்டோ? திருவே!
சித்தவுறுதி கொண்டிருந்தார்
செய்கையெல்லாம் வெற்றி கொண்டே
உத்தமநிலை சேர்வரென்றே
உயர்ந்த வேதமுரைப்ப தெல்லாம்
சுத்த வெறும் பொய்யோடி?
சுடர் மணியே! திருவே!
மெத்தமையல் கொண்டுவிட்டேன்
மேவிடுவாய் திருவே!

பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி
மின்னு நவரத்தினம் போல் மேனியழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீ தேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

## தன விருத்தி மாலை

### 1. தனலெக்ஷ்மி

பொங்கு தனக்கரத்தாள் பொற்புடைய சக்கரத்தாள்
எங்குநலம் தருகின்ற எழிற்கரத்துத் தாமரையாள்
தங்குகின்ற கமலத்தில் தளிரடிகள் தாம்வைத்தாள்
தங்கரத்தால் தண்மைதரு தனமகளே போற்றியம்மா!

### 2. ஆதிலெக்ஷ்மி

சோதிமிக வுடையாள் சோம்பற்ற மனமுடையாள்
தாதியரின் புடைசூழத் தாவிவரும் தார்மிகத்தாள்
பூதிமிகு மலர்பய பூரணநல் வரதத்தாள்
ஆதியிலும் ஆதியளே ஆதித்திரு போற்றியம்மா!

### 3. தான்யலெக்ஷ்மி

எண்கரத்தில் ஏற்புடைய எழிற்படைகள் ஏற்றவளே
பண்புடைய பகவதியே பலக்கதையும் பெற்றவளே
கண்படைத்த பயனாகக் களிப்படைய வந்தவளே
மண்செழிக்கத் தானியநல் மணிதந்தாய் போற்றியம்மா!

### 4. வீரலெக்ஷ்மி

சூலமொடு அபயத்தாள் சூழ்ச்சியற்ற வரதத்தாள்
காலனவன் கால்நடுங்க கதிர்ஒளியின் சக்கரத்தாள்
நீலத்திரை யமுதத்தாள் நீற்காநற் புகழுடையாள்
மாலவனார் மனமகிழும் வீரத்திரு போற்றியம்மா!

### 5. கஜலெக்ஷ்மி

தடாகத் தாமரையாள் தண்மைமிகு தவவடிவாள்
அடாஅத் துயரமதை அழிக்கின்ற அருளடியாள்
வீடாநற் றனமழையாள் விளங்கானைத் துதியடியாள்
படாகக் கரியிலர்வாள் பண்ணடிகள் போற்றியம்மா!

### 6. சந்தானலெக்ஷ்மி

அன்புடையாள் அறுகரத்தாள் அன்னையிலும் அன்னையவள்
இன்புடையாள் கேடகத்தாள் இடர்நீக்கு வாளுடையாள்
மன்புகழின் மலர்க்கரத்தே மகவுடனே யாதுடையாள்
சந்தனத்தாய் சந்தானப் பெருக்குடையாய் போற்றியம்மா!

### 7. விஜயலெக்ஷ்மி

வாளுடனே சாரங்கம் வார்புகழின் சுதர்சனமும்
ஆளுடைய கேடயமும் ஆண்டருளும் எண்கரத்தி
நாளுடனே நாற்புகழும் நாரணர்க்குத் தாமளித்த
தாள்மலரும் தனிவெற்றித் தாயேநீ போற்றியம்மா!

8. ஐஸ்வர்யலெக்ஷ்மி

நாற்கரத்து நாயகியாள் நாற்றிசையின் நல்வினையாள்
கார்மேகம் போல் தனத்தைக் காத்திடவே பெய்திடுவாள்
நூற்புலவர் தம்முகத்தாள் நூதனத்தின் ஒருவடிவாள்
பாற்பணியும் அயிசுவரியப் பாவையளே போற்றியம்மா!

## பலன் மொழி

அட்டத்திரு மகளாய் அருள்வீசும் அன்னைபுகழ்
இட்டவெள்ளிமங்களத்தில் இருந்தபடி இரந்துரைப்பார்
துட்டத்துயர் தொலைவேகும் துணிவுபுகழ் அருகாகும்
முட்டமுட்டப் பொருள்குவித்து முன்னின்று வாழ்ந்திடுவார்!

# ஸ்ரீ லலிதா நவரத்ன மாலை

## காப்பு

ஆக்கும் தொழில் ஐங்கரனற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேஸ்வரியால்
சேர்க்கும் நவரத்ன மாலையினைக்
காக்கும் கணநாயக வாரணமே.

## வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்
கண்மூடி நெடுங்கனவான தவம்
பெற்றும் தெரியார் நினையென்னில் அவம்
பெருகும் பிழையேன் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படையிவள் வயிரப்
பகைவர்க் கெமனாக எடுத்தவளே
வற்றாத அருட்சுனையே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

## நீலம்

மூலக்கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக்கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக்குவையே சரணம்
நீலத் திருமேனியிலே நினைவாய்
நினைவற்றெளியேன் நின்றேன் அருள்
வாலைக்குமரீ வருவாய் வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

## முத்து

முத்தேவரும் முத்தொழிலாற்றிடவே
முன் நின் றருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவாசினியே சரணம்
தத்தேறியநான் தனயன் தாய் நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேறுததிக்கிணை வாழ்வடையேன்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

## பவளம்

அந்தி மயங்கிய வானவிதானம்
அன்னை நடம் செய்யும் ஆனந்த மேடை
சிந்தநிறம் பவளம் பொழிபாரே
தேன் பொழிலாமிது செய்தவள் யாரோ
எந்தவிடத்தும் மனத்தும் இருப்பாய்
எண்ணுபவர்க்குள் எண்ணமிகுந்தாள்
மந்திர வேதமாயப்பொருளானாள்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

## மாணிக்கம்

காணக்கிடையாக் கதியானவளே
கருதக்கிடையாக் கலையானவளே
பூணக்கிடையாய் பொலிவானவளே
புதுமைக்கிடையாய்ப் புதுமைத்தவளே
நாணித்திரு நாமமும் நின் துதியும்
நவிலாதவரை நாடாதவளே
மாணிக்க ஒளிக்கதிரே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

## மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரிதபதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதிஜதி லயமே இசையே சரணம்
அர ஹர சிவ என்றடியார் குழும
அவரருள் பெற அருளமுதே சரணம்
வர நவநிதியே சரணம் சரணம்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## கோமேதகம்

பூமேவிய நான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெயசக்தி எனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமேதகமே குளிர்வான் நிலவே
குழல்வாய் மொழியே வருவாய் தருவாய்
மாமேருவிலே வளர் கோகிலமே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

## பதும ராகம்

ரஞ்சனி நந்தினி அங்களி பதும
ராக விகாஸ வியாபிணி அம்மா
சஞ்சல ரோக நிவாரணிவாணீ
சாம்பவி சந்த்ர கலா தரி ராணி
அஞ்சன மேனி அலங்க்ருத பூரணி
அம்ருத ஸொவடிவமானவள் நித்ய கல்யாணி
மஞ்சுள மேரு ச்ருங்க நிவாஸினி
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

## வைடூரியம்

விலையொத்த வினை கலையொத்த மனம்
மருளப் பறையா றொலியொத்தவிதால்
நிலையெற்றெளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலைவற் றசைவற் றநுபூதி பெறும்
அடியார் முடிவாள் வைடூ ரியமே
மலையத்துவசன் மகளே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

## பயன்

எவர் எத்தினமும் இசைவாய் லலிதா
நவரத்தின மாலை நவின்றிடுவார்
அவர் அற்புத சக்தி எல்லாம் அடைவார்
சிவரத்தின மாய் திகழ்வா ரவரே.

# ஸ்ரீ ராகு கால துர்க்கா அஷ்டகம்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

உலகை ஈன்றவள் துர்க்கா உமையு மானவள்
உண்மை யானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

செம்மை யானவள் துர்க்கா ஜபமு மானவள்
அம்மை யானவள் அன்புத் தந்தை யானவள்
இம்மை யானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மை யானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

உயிரு மானவள் துர்க்கா உடலுமானவள்
உலக மானவள் எந்தன் உடமை யானவள்
பயிரு மானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

துன்ப மற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையு மானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு ஊற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தாங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

குருவு மானவள் துர்க்கா குழந்தை யானவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவு மானவள் துர்க்கா திருசூலி யானவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

கன்னி துர்க்கையே இதயக் கமலத் துர்க்கையே
கருணைத் துர்க்கையே வீரக் கனகத் துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும்துர்க்கையே
அன்புத் துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

## ஓம் சக்தி
## ஆதிபராசக்தி 108 போற்றி திருவுரு

ஓம் சக்தியே போற்றி ஓம்
ஓம் ஓங்கார ஆனந்தியே போற்றி ஓம்
ஓம் உலக நாயகியே போற்றி ஓம்
ஓம் உறவுக்கும் உறவானவளே போற்றி ஓம்
ஓம் உள்ளமலர் உவந்தவளே போற்றி ஓம்
ஓம் ஓதரிய பெரும் பொருளே போற்றி ஓம்
ஓம் உண்மைப் பரம் பொருளே போற்றி ஓம்
ஓம் உயிராய் நின்றவளே போற்றி ஓம்
ஓம் மருவத்தூர் அமர்ந்தாய் போற்றி ஓம்
ஓம் மனமாசைத் துடைப்பாய் போற்றி ஓம் 10
ஓம் கவலை தவிர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் ககனவெளி ஆனாய் போற்றி ஓம்

ஓம் புற்றாகி வந்தவளே போற்றி ஓம்
ஓம் பாலாகி வடிந்தவளே போற்றி ஓம்
ஓம் பாமரர் துயர் துடைப்பாய் போற்றி ஓம்
ஓம் பண்ணாக இசைந்தாய் போற்றி ஓம்
ஓம் பாமலர் உவந்தாய் போற்றி ஓம்
ஓம் பாம்புரு ஆனாய் போற்றி ஓம்
ஓம் சித்துரு அமைந்தாய் போற்றி ஓம்
ஓம் செம்பொருள் நீயே போற்றி ஓம் 20
ஓம் சக்தியே தாயே போற்றி ஓம்
ஓம் சன்மார்க்க நெறியே போற்றி ஓம்
ஓம் சமதர்ம விருந்தே போற்றி ஓம்
ஓம் ஓங்கார உருவே போற்றி ஓம்
ஓம் ஒருதவத்துக் குடையாய் போற்றி ஓம்
ஓம் நீள்பசி தவிர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் நிம்மதி தருவாய் போற்றி ஓம்
ஓம் அகிலமே ஆனாய் போற்றி ஓம்
ஓம் அண்டமே விரிந்தாய் போற்றி ஓம்
ஓம் ஆன்மிகச் செல்வமே போற்றி ஓம் 30
ஓம் அனலாக ஆனாய் போற்றி ஓம்
ஓம் நீராக நிறைந்தாய் போற்றி ஓம்
ஓம் நிலனாகத் திணிந்தாய் போற்றி ஓம்
ஓம் தூறாக வளர்ந்தாய் போற்றி ஓம்
ஓம் துணிபொருள் நீயே போற்றி ஓம்
ஓம் காராக வருவாய் போற்றி ஓம்
ஓம் கனியான மனமே போற்றி ஓம்
ஓம் மூலமே முதலே போற்றி ஓம்
ஓம் முனைச்சுழி விழியே போற்றி ஓம்
ஓம் வீணையே இசையே போற்றி ஓம் 40
ஓம் விரைமலர் அணிந்தாய் போற்றி ஓம்
ஓம் தத்துவங் கடந்தாய் போற்றி ஓம்
ஓம் சகலமறைப் பொருளே போற்றி ஓம்
ஓம் உத்தமி ஆனாய் போற்றி ஓம்
ஓம் உயிர்மொழிக் குருவே போற்றி ஓம்
ஓம் நெஞ்சம் நீ மலர்வாய் போற்றி ஓம்
ஓம் நீள் நிலத் தெய்வமே போற்றி ஓம்
ஓம் துரிய நிலையே போற்றி ஓம்

ஓம் துரியா தீத வைப்பே போற்றி ஓம்
ஓம் ஆயிர இதழ் உறைவாய் போற்றி ஓம் 50
ஓம் அகிலமெலாம் ஆட்டுவிப்பாய் போற்றி ஓம்
ஓம் கருவான மூலம் போற்றி ஓம்
ஓம் உருவான கோலம் போற்றி ஓம்
ஓம் சாந்தமே உருவாய் போற்றி ஓம்
ஓம் சரித்திரம் மறைத்தாய் போற்றி ஓம்
ஓம் சின்முத்திரை தெரிப்பாய் போற்றி ஓம்
ஓம் சினத்தை வேரறுப்பாய் போற்றி ஓம்
ஓம் கையிரண்டு உடையாய் போற்றி ஓம்
ஓம் கரைபுரண்ட கருணை போற்றி ஓம்
ஓம் மொட்டுடைக் கரத்தாய் போற்றி ஓம் 60
ஓம் மோனநல தவத்தாய் போற்றி ஓம்
ஓம் யோகநல் உருவே போற்றி ஓம்
ஓம் ஒளியென ஆனாய் போற்றி ஓம்
ஓம் எந்திரத் திருவே போற்றி ஓம்
ஓம் மந்திரத் தாயே போற்றி ஓம்
ஓம் பிணி தவிர்த்திடுவாய் போற்றி ஓம்
ஓம் பிறவிநோய் அறுப்பாய் போற்றி ஓம்
ஓம் மாயவன் தங்கையே போற்றி ஓம்
ஓம் சேயவன் தாயே போற்றி ஓம்
ஓம் திரிபுரத்தாளே போற்றி ஓம் 70
ஓம் ஒருதவம் தெரிப்பாய் போற்றி ஓம்
ஓம் வேம்பினை ஆள்வாய் போற்றி ஓம்
ஓம் வினையெலாம் தீர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் அஞ்சனம் அருள்வாய் போற்றி ஓம்
ஓம் ஆருயிர் மருந்தே போற்றி ஓம்
ஓம் கண்ணொளி காப்பாய் போற்றி ஓம்
ஓம் கருத்தொளி தருவாய் போற்றி ஓம்
ஓம் அருள்ஒளி செய்வாய் போற்றி ஓம்
ஓம் அன்பொளி கொடுப்பாய் போற்றி ஓம்
ஓம் கனவிலே வருவாய் போற்றி ஓம் 80
ஓம் கருத்திலே நுழைவாய் போற்றி ஓம்
ஓம் மக்களைக் காப்பாய் போற்றி ஓம்
ஓம் மனநோயைத் தவிர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் எத்திசையும் ஆனாய் போற்றி ஓம்

ஓம் இதயமாம் வீணை போற்றி ஓம்
ஓம் உருக்கமே ஒளியே போற்றி ஓம்
ஓம் உள்ளுறை விருந்தே போற்றி ஓம்
ஓம் மலப்பிணி தவிர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் மனங்கனிந்து அருள்வாய் போற்றி ஓம்
ஓம் நாதமே நலமே போற்றி ஓம் 90
ஓம் நளின மலர் அமர்வாய் போற்றி ஓம்
ஓம் ஒற்றுமை சொல்வாய் போற்றி ஓம்
ஓம் உயர்நெறி தருவாய் போற்றி ஓம்
ஓம் நித்தமுங் காப்பாய் போற்றி ஓம்
ஓம் நேரமும் ஆழ்வாய் போற்றி ஓம்
ஓம் பத்தினி பணிந்தோம் போற்றி ஓம்
ஓம் பாரமே உனக்கே போற்றி ஓம்
ஓம் விந்தையே விளக்கே போற்றி ஓம்
ஓம் வித்தையே தாயே போற்றி ஓம்
ஓம் ஏழையர் அன்னை போற்றி ஓம் 100
ஓம் ஏங்குவோர் துணையே போற்றி ஓம்
ஓம் காலனைப் பகைத்தாய் போற்றி ஓம்
ஓம் கண்மணி ஆனாய் போற்றி ஓம்
ஓம் சத்தியப் பொருளே போற்றி ஓம்
ஓம் சங்கடந் தவிர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் தத்துவச் சுரங்கமே போற்றி ஓம்
ஓம் தாய்மையின் விளக்கமே போற்றி ஓம்
ஓம் ஆறாதார நிலையே போற்றி ஓம் 108

*ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!*
*ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!*
*ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!*
*ஓம்! ஓம்! ஓம்!*

## ஸ்ரீ மஹாலட்சுமி அஷ்டகம்

நமஸ்தேஸ்துமஹாமாயே
ஸ்ரீபீடேஸுரபூஜிதே
ஸங்க சக்ர கதாஹஸ்தே
மஹாலஷ்மி நமோஸ்துதே.

நமஸ்தே கருடாரூடே
கோலாஸுர பயங்கரி
ஸர்வபாப ஹரே தேவி
மஹாலஷ்மி நமோஸ்துதே.

ஸர்வஜ்ஞே ஸர்வ வரதே
ஸர்வதுஷ்ட பயங்கரி
ஸர்வதுக்க ஹரே தேவி
மஹாலஷ்மி நமோஸ்துதே.

ஸித்தி புத்தி ப்ரதே தேவி
புக்தி முக்தி ப்ரதாயிநி
மந்த்ர மூர்த்தே ஸதா தேவி
மஹாலஷ்மி நமோஸ்துதே.

ஆத்யந்த ரஹிதே தேவி
நித்ய சக்தே மஹேஸ்வரி
யோகஜ்ஞே யோகஸம்பூதே
மஹாலஷ்மி நமோஸ்துதே.

ஸ்த்தூல ஸுக்ஷ்ம மஹா ரௌத்ரே
மஹா ஸக்தி மஹோதரே
மஹா பாப ஹரே தேவி
மஹாலஷ்மி நமோஸ்துதே.

பத்மாஸன ஸ்த்திதே தேவி
பரப்ரஹ்ம ஸ்வரூபிணி
பரமேஸி ஜகன்மாதா:
மஹாலஷ்மி நமோஸ்துதே.

ஸ்வேதாம் பரதேரே தேவி
நாநாலங்கார பூஷிதே
ஜக ஸ்திதே ஜகன்மாதா:
மஹாலஷ்மி நமோஸ்துதே.

## பலச்ருதி

மஹாலக்ஷ்ம்யஷ்டக ஸ்தேத்ரம்
ய: படேத் பகதி மான் நர:
ஸர்வஸித்தி மவாப்னோதி
ராஜ்யம் ப்ராபனோதி ஸர்வதா:

ஏககாலே படேன் நித்யம்
மஹாபாப வினாஸனம்
த்விகாலே ய: படேன் நித்யம்
தனாதான்ய ஸமன்வித:

திரிகாலம் ய: படேன் நித்யம்
மஹாஸத்ரு வினாஸனம்
மஹால க்ஷ்மீர் பவேன் நித்யம்
ப்ரஸந்தா வரதா ஸுபா.

## தனலட்சுமி ஸ்தோத்திரம்

கிரீட மகுடோபேதாம் ஸ்வர்ண வர்ண ஸமன்விதாம்
ஸர்வாபரண ஸம்யுக்தாம் ஸுகாஸரஸமன்விதம்
பரிபூர்ணம் சகும்பஞ்ச தக்ஷுணேந கரேணது
சக்ரம் பாணம் சதாம்பூலம் ததா வாம கரணேது
சங்கம் பத்மஞ்ச சாபம்சகண்டிகா மபீ தாரீணீம்ம
ஸத் கஞ்சுக ஸ்தனீம் த்யாயேத் தனலக்ஷ்மீம் மநோஹராம்

(தினமும் பாராயணம் செய்தால் தனலட்சுமி அருள் கிடைக்கும்)

## மஹாலட்சுமி காயத்ரி

ஓம்: மகாதேவ்யை ச வித்மஹே
விஷ்ணுபத்ந்யை ச தீமஹி
தந்நோ லக்ஷ்மீ: ப்ரசோதயாத்

ஐஸ்வர்யலக்ஷ்மி உபாஸனா மந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஐம்..
ஞானாயை, கமலதாரிண்யை
சக்தியை, ஸிம்ஹவாஹின்யை
பலாயை நமஹ.

## தேவி பாகவதத்தில் தனந்தரும் சக்தி

ஸஹஸ்ரதள பத்மஸ்த கர்ணீகா வாஸிநீம்பராம்
சரத்பார்வண கோடீந்து ப்ரபாமுஷ்டி கராம்பராம்
ஸ்வதேஜஸா ப்ரஜ்லந்தீம் ஸீகத்ருச்சாம் மநோகராம்
பரதப்த காஞ்சந்திப சோபாம்மூர்த்தி மதீம் ஸதீம்
ரத்ணபூஷண பூஷாட்யாம் சோபிதாம் பீதவாஸஸா
இஷத்தாஸ்யாம் ப்ரஸந்நாஸ்யாம் சச்வத்
ஸீஸ்திரயௌவநாம்
ஸர்வ ஸம்பத் ப்ரதாத்ரீம்ச மஹாலக்ஷ்மீம் பஜேசுபாம்.

## மஹா லட்சுமி மந்திரம்

ஓம்-ஸ்ரீம்-ஹ்ரீம்-க்லீம்-மஹா
லக்ஷ்மி ஏஹ்யேஹி ஸர்வஸௌ
பாக்யம் தேஹிமே ஸ்வாஹா!
மஹா லக்ஷ்மியம்மா.

## ஸ்ரீ மஹாலஷ்மி திரிசதி நாவமளி

ஓம் அஜாயை நம:
ஓம் அஜராயை நம:
ஓம் அமலாயை நம:
ஓம் அனந்தாயை நம:
ஓம் அணிமாத்யஷ்டஸித்திதாயை நம:
ஓம் அசிந்த்ய சக்தியை நம:
ஓம் அநகாயை நம:
ஓம் அதுவ்யாவை நம:
ஓம் அசிந்த்யாயை நம:
ஓம் அம்ருதப்பிரதாயை நம:
ஓம் அத்யுதாரயை நம:
ஓம் அபரிச்சின்னாயை நம:
ஓம் அநதா பீஸிட் தோஹின்யை நம:
ஓம் அபிராமாத்ம மஹிமாயை நம:
ஓம் அனந்த சௌக்ய பிரதாயின்யை நம:

ஓம் ஆத்யாயை நம:
ஓம் ஆதிலக்ஷ்ம்யை நம:
ஓம் ஆதார சக்த்யை நம:
ஓம் அகண்டலார்ச்சிதாயை நம:
ஓம் ஆரோக்கியதாயை நம:
ஓம் ஆனந்ததாத்ர்யை நம:
ஓம் ஆபந்நார்த்தி விநாசின்யை நம:
ஓம் இந்திராயை நம:
ஓம் இந்து முக்யை நம:
ஓம் இச்சாயை நம:
ஓம் இந்கோடி பிரபாவத்யை நம:
ஓம் இலாயை நம:
ஓம் இந்து பிம்ப மத்யஸ்தாயை நம:
ஓம் இஷ்டாயூர்த்தபலப்ரதாயை நம:
ஓம் இந்தித்திராய சிகுராயை நம:
ஓம் இந்திராதித் தரவந்தியாயை நம:
ஓம் ஈஸ்வர்யை நம:
ஓம் ஈட்யகுணோத்கர்யை நம:
ஓம் உத்க்ருஷ்டாயை நம:
ஓம் உதாராயை நம:
ஓம் உத்ஸாகவர்த்தின்யை நம:
ஓம் உதரஸ்தாகில ஜனாயை நம:
ஓம் உந்தஸ்தன மண்டலாயை நம:
ஓம் உத்பத்தி ஸ்திதி ஸம்ஹார காரின்யை நம:
ஓம் உத்ஸாக ரூபிண்ணை நம:
ஓம் ஊடாயை நம:
ஓம் ஊர்ஜித ஜௌவர்ண சமபோரவே நம:
ஓம் ஊர்மிகா யுகாயை நம:
ஓம் ருக் ய்ஜீஸ்சாம சம்வேத் யாயை நம:
ஓம் ருஜூஸ்சாம சம்வேத் யாயை நம:
ஓம் ருத்திப் பிரதாயை நம:
ஓம் ருக்ஸ்வரூபாயை நம:
ஓம் ருஜூமார்க்கபிரதாஸின்யை நம:
ஓம் ஏகாயை நம:
ஓம் ஏகாந்த ஸம்வேத்யை நம:

ஓம் ஏரோரன்ய குடாரிதாயை நம:
ஓம் ஏலாப்ரஸூந ஸௌரப்யாயை நம:
ஓம் ஏணுங்காமுருத சோதராயை நம:
ஓம் ஐந்த வோபல ப்ரயாங்காயை நம:
ஓம் ஐசுவரிய பலதாயின்யை நம:
ஓம் ஓங்கார ரூபிண்யை நம:
ஓம் ஓதனதாயை நம:
ஓம் ஓஜஸ்வின்யை நம:
ஓம் ஒஷ்டவித்ருமாயை நம:
ஓம் ஔதார்யகுணகம்பீராயை நம:
ஓம் ஔந்நத்யாகார ஸம்ஸ்தி தாயை நம:
ஓம் அம்புஜாஷ்யை நம:
ஓம் அம்ஸூம்த்யை நம:
ஓம் அங்கீக்ருத ஜகத்ரயாயை நம:
ஓம் அத்புத ரூபாயை நம:
ஓம் அகஸாரின்யை நம:
ஓம் அவ்யாயயை நம:
ஓம் அச்சுதாயை நம:
ஓம் கமலாயை நம:
ஓம் கருணாபாங்க்யை நம:
ஓம் கமலோத்பல கந்தின்யை நம:
ஓம் கல்யாண காரின்யை நம:
ஓம் காந்தாயை நம:
ஓம் கர்மபந்தவி பேதின்யை நம:
ஓம் கம்புஹ்ரீவாயை நம:
ஓம் கம்ரபுஜாயை நம:
ஓம் கருணாயத விக்ஷணாயை நம:
ஓம் காமின்யை நம:
ஓம் காம ஜனன்யை நம:
ஓம் கலக்வணித நூபுராயை நம:
ஓம் காலநீரத ஸங்காசக சாயை நம:
ஓம் கர்ணாந்த லோசனாயை நம:
ஓம் கர்ணகுண்டல ஸம்ராஜத் கபோலயை நம:
ஓம் காமதோஹின்யை நம:
ஓம் காமரூபாயை நம:

ஓம் கமலின்யை நம:
ஓம் கனகாம்பரதாரின்யை நம:
ஓம் கர்ணாவதம்ஸ் கல்ஹரயை நம:
ஓம் கஸ்தூரி திலகான் விதாயை நம:
ஓம் கரத்வயிதிருத ஸ்வர்ண கமலாயை நம:
ஓம் அக்ஷராயை நம:
ஓம் கலபாக்ஷண்யை நம:
ஓம் கலண்ட்யை நம:
ஓம் கலாபூர்ணாயை நம:
ஓம் காஷ்மீராரஸ லேபனாயை நம:
ஓம் கல்பவல்லி ஸம்புஜாயை நம:
ஓம் கனகாம்புஜ பீடிகாயை நம:
ஓம் கமடகார சரணாயை நம:
ஓம் கரிகும்ப பயோதாரயை நம:
ஓம் கட்கின்யை நம:
ஓம் கேசரீவந்ந்யாயை நம:
ஓம் க்யேத்யை நம:
ஓம் க்ஸாதிப்பிரதாயின்யை நம:
ஓம் கண்டிதா சேஷக்ருபணாயை நம:
ஓம் ககாதிபதி வாஹனாயை நம:
ஓம் கலபுத்தி பிரசத்யை நம:
ஓம் கபாகாதீர சாரிண்யை நம:
ஓம் கம்பீர நாபி கமலாயை நம:
ஓம் கந்த ஸிந்தூர காமினியை நம:
ஓம் குணாக்ரண்யை நம:
ஓம் குணாதீதாயை நம:
ஓம் குரகோத்ர பிரவர்தன்யை நம:
ஓம் கஜகண்டாத்ருத ஸ்வர்ண கலசாம்ருத ஸேசநாயை நம:
ஓம் கூடபாவாயை நம:
ஓம் குணவத்யை நம:
ஓம் கோவிந்தாங்ச்ரிய பஜ்ஜீவநாயை நம:
ஓம் கதிர்ப்பிரதாயை நம:
ஓம் குணமய்யை நம:
ஓம் கோப்தர்யை நம:
ஓம் கௌரவதாயின்யை நம:

ஓம் கர்ம ஹந்தர்யை நம:
ஓம் கநாநந்தாயை நம:
ஓம் கடிதாசேஷ மங்கலாயை நம:
ஓம் கநவர்ண பிரமரகாயை நம:
ஓம் கநவாஹன சேவிநாயை நம:
ஓம் க்ருணாவத்தை நம:
ஓம் கோஷாயை நம:
ஓம் குஸ்ருணசர்த்திதாயை நம:
ஓம் சந்திரிகா காஸவதநாயை நம:
ஓம் சந்திரகோடி ஸமர்ப்ரமாயை நம:
ஓம் சாம்பேயஸூநஸௌரப் யாயை நம:
ஓம் சின்மையை நம:
ஓம் சித்ரூபிண்யை நம:
ஓம் சந்திரகாந்த விதர்கிஸ்தாயை நம:
ஓம் சார்வங்த்யை நம:
ஓம் சாருகாமின்யை நம:
ஓம் சந்தோ வேத்யபதாம் போஜாயை நம:
ஓம் சக்மகந்தயை நம:
ஓம் சலஹரியின்யை நம:
ஓம் சேதிதாசேஷ துரிதாயை நம:
ஓம் சத்ரச்சாயா நிவாஸிந்யை நம:
ஓம் ஜகத்ஜோத்யை நம:
ஓம் ஜகத் பர்த்யை நம:
ஓம் ஜகத்காநந்த காரிய்னை நம:
ஓம் ஜாட்ய வித்வம்ஸ் நார்யை நம:
ஓம் ஜகத யோன்யை நம:
ஓம் ஜயாவஹாயை நம:
ஓம் ஜகஜீவாயை நம:
ஓம் ஜகந்மாத்ரே நம:
ஓம் ஜைவாத்ருகஜ ஹேதராயை நம:
ஓம் ஜகத் விசித்ர ஸாமர்த்யாயை நம:
ஓம் ஜநிதக்ஞான விக்ரஹாயை நம:
ஓம் ஜலஞ்ஜலிநமஞ்சீராயை நம:
ஓம் ஜஞ்ஜாமருதசீதலாயை நம:
ஓம் டோலிதாசேஷபவநாயை நம:

ஓம் டோலாலீலா விநோதின்யை நம:
ஓம் டௌகித சேஷ நிர்வாணாயை நம:
ஓம் டக்கா வாத்ய விநோதின்யை நம:
ஓம் தேஜோ ரூபாயை நம:
ஓம் தாராதிபநிபாந நாயை நம:
ஓம் திரைலோக்ய சுந்தர்யை நம:
ஓம் துஷ்ட்யை நம:
ஓம் துஷ்டிதாயை நம:
ஓம் திருப்தி ரூபிண்யை நம:
ஓம் தாபத்ரிதய ஸம்ஹர்த்யை நம:
ஓம் தடித்ஸாஹஸ்ர வர்ணின்யை நம:
ஓம் தேவ தேவப்பிரியாயை நம:
ஓம் தேவ்யை நம:
ஓம் தீநதைன்ய விநாசின்யை நம:
ஓம் தாரித்ர்யாந்த தமோ ஸந்தர்யை நம:
ஓம் திவ்யபூஷணமண்டலாயை நம:
ஓம் நேவமாத்ரே துராலாபாயை நம:
ஓம் திக்பால தீஷ்டதாயியை நம:
ஓம் த்யாவத்தைய நம:
ஓம் தயாதாராயை நம:
ஓம் த க்ஷாயை நம:
ஓம் திவ்யகதிப்பிரதாயை நம:
ஓம் துரிதக்ந்யை நம:
ஓம் துர்விபாவ்யை நம:
ஓம் திவ்யாயை நம:
ஓம் தாந்த ஜனப் பிரியாயை நம:
ஓம் தர்ஸூதாநேக குதுகாயை நம:
ஓம் தாரிதா கௌக ஸந்தத்யை நம:
ஓம் தர்மாதாராயை நம:
ஓம் தர்மஸாராயை நம:
ஓம் தனதான்ய ப்ரதாயின்யை நம:
ஓம் தேனவே நம:
ஓம் தீராயை நம:
ஓம் தர்மகாமார்த்த மோஷதாயை நம:
ஓம் தியான கம்யாயை நம:

ஓம் தர்மசீலாயை நம:
ஓம் தன்யாயை நம:
ஓம் தாந்ரிஸஸேவிதாயை நம:
ஓம் த்யாதரூதாப பிரசன்யை நம:
ஓம் த்யேயாயை நம:
ஓம் தீரஜநாஸ்ரிதாயை நம:
ஓம் நாரயணமந: காந்தாயை நம:
ஓம் நாரதாதி முனிஸ்ததாயை நம:
ஓம் நித்யோத்ஸவாயை நம:
ஓம் நித்ய ரூபாயை நம:
ஓம் நிரவத்யாயை நம:
ஓம் நிரஞ்சனாயை நம:
ஓம் நிர்மலக்ஞான ஜனன்யை நம:
ஓம் நிர்ஹராயை நம:
ஓம் நிஸசயாத்மிகாயை நம:
ஓம் நியதாயை நம:
ஓம் நிர்மலாயை நம:
ஓம் நித்யாயை நம:
ஓம் நாநாஸ்சர்ய மகாநிதயே நம:
ஓம் பாதோதி தநாயாயை நம:
ஓம் பத்மாயை நம:
ஓம் பத்மகிஞ்ஜல்க ஸந்திபாயை நம:
ஓம் பத்மாலயாயை நம:
ஓம் பராசக்த்யை நம:
ஓம் பத்மாஷ்யை நம:
ஓம் பத்மமாலின்யை நம:
ஓம் பரமானந்த நிஷயந்தாயை நம:
ஓம் ப்ரணதஸ்வாந்தவாஸின்யை நம:
ஓம் பத்மநாதபங்க பாகஸ்வதாயை நம:
ஓம் பரமாத்ஸ்வரூபிண்யை நம:
ஓம் பாலலோசன சமஸ்துதாயை நம:
ஓம் புல்லாம் போரு லோசனாயை நம:
ஓம் பலஹஸ்தாயை நம:
ஓம் பாலிதை னஸே நம:
ஓம் புல்ல பஞ்கஜ கந்தின்யை நம:

| | |
|---|---|
| ஓம் பிரஹ்மவிதே | நம: |
| ஓம் பிரஹ்மஜநந்தயை | நம: |
| ஓம் பிரஹமிஷ்டாயை | நம: |
| ஓம் புரம்புமவாதின்யை | நம: |
| ஓம் பார்க்வ்யை | நம: |
| ஓம் பாரத்யை | நம: |
| ஓம் பாத்ராயை | நம: |
| ஓம் பதரதாயை | நம: |
| ஓம் பக்தி முக்தி பிரதாயை | நம: |
| ஓம் பவ்யாயை | நம: |
| ஓம் பஜநீய பதாம் புஜாயை | நம: |
| ஓம் பக்தா பவர்கதாயை | நம: |
| ஓம் பூத்யை | நம: |
| ஓம் பாத்யவத்திருஷ்டிகோசாராயை | நம: |
| ஓம் மாயாயை | நம: |
| ஓம் மனோச்ஞரதனாயை | நம: |
| ஓம் மஞ்முலாதர பல்லவாயை | நம: |
| ஓம் மஹா வித்யாயை | நம: |
| ஓம் மஹா மாயாயை | நம: |
| ஓம் மஹா முதாயை | நம: |
| ஓம் மஹா மத்யை | நம: |
| ஓம் மகாகாருண்ய சம்பூர்ணாயை | நம: |
| ஓம் மஹா பாக்யாநாஸ் திரிதாளய | நம: |
| ஓம் மஹா ப்ரபாவாயை | நம: |
| ஓம் மஹத்யை | நம: |
| ஓம் மகாக்ஷ்மியை | நம: |
| ஓம் மகோத்யாயை | நம: |
| ஓம் யமாத்யஷடாங்கஸம்வேத்யாயை | நம: |
| ஓம் யோக சித்திப்பிரதாயின்யை | நம: |
| ஓம் யக்ஞேஸ்யை | நம: |
| ஓம் யக்ஞபலதாயை | நம: |
| ஓம் யக்ஞேச பரிபூதயை | நம: |
| ஓம் யஸஸ்வின்யை | நம: |
| ஓம் யோகயோன்யை | நம: |
| ஓம் யோக்யை | நம: |

ஓம் யுக்தாத்ம ஸேவிதாயை நம:
ஓம் யஸஸ்கர்யை நம:
ஓம் யசோதாயை நம:
ஓம் யந்ராதிஷ்டான தேவதாயை நம:
ஓம் ரத்ன கர்ப்பாயை நம:
ஓம் ரமாயை நம:
ஓம் ரம்யாயை நம:
ஓம் ரூபலாவண்ய சேவத்யை நம:
ஓம் ரம்யா ராயை நம:
ஓம் ரம்ய ரூபாயை நம:
ஓம் ரமணீய குணான்விதாயை நம:
ஓம் ரத்னாகரோத்பவாயை நம:
ஓம் ராமாயை நம:
ஓம் ரஸக்ஞாயை நம:
ஓம் ரசரூபிண்யை நம:
ஓம் ராஜாதிராஜ கோடீர ரத்னார்ச்சாயை நம:
ஓம் ருசிராக்ருதயே நம:
ஓம் லோகத்ரய ஹிதாயை நம:
ஓம் லக்ஷ்ம்யை நம:
ஓம் லவனாயை நம:
ஓம் லக்ஷணாந்விதாயை நம:
ஓம் லோகபந்தவே நம:
ஓம் லோகவந்த்யாயை நம:
ஓம் ஸோகோத்ர குணோதராயை நம:
ஓம் லீலாவத்யை நம:
ஓம் லோக தாத்ரர்யை நம:
ஓம் லாவாண்யாம்ருத வர்ஷிண்யை நம:
ஓம் வாகீஸ்வர்யை நம:
ஓம் வரதாயை நம:
ஓம் வாஞ்சிதப்பிரதாயை நம:
ஓம் விபஞ்சீவாத்ய குலாயை நம:
ஓம் வசுதாயை நம:
ஓம் விஸ்வதோமுக்த்யை நம:
ஓம் சாகம்பர்யை நம:
ஓம் சரண்யாயை நம:

ஓம் ஸதபத்ர நிகேதநாயை நம:
ஓம் சோபவத்யை நம:
ஓம் சீலவத்யை நம:
ஓம் சாரதாயை நம:
ஓம் சேஷசாயின்யை நம:
ஓம் ஷட்குண்யஸ்வர்யை நம:
ஓம் சம்பன்னா நம:
ஓம் ஷடர்தநயனஸ்ஹதுதாயை நம:
ஓம் ஹௌபாக்ய தாயின்யை நம:
ஓம் ஸௌம்யாயை நம:
ஓம் ஸ்வதாயை நம:
ஓம் ஸ்வாஹாயை நம:
ஓம் ஸீகப்ரதாயை நம:
ஓம் ஹரிமந்யாயை நம:
ஓம் ஹரிமனோஹரின்யை நம:
ஓம் ஹரிணேஷணாயை நம:
ஓம் க்ஷமாவத்யை நம:
ஓம் க்ஷேமதாயை நம:
ஓம் க்ஷராக்ஷர மசாத் மிகாயை நம:
ஓம் ஸ்ரீ மகாலட்சுமியை நம:

## மங்கையர்க்கு ஏற்ற குங்குமக் கவசம்

இல்லத்தில் மாலைப்பொழுதில் விளக்கு ஏற்றி வைத்துக் குங்குமத்தில் திலகம் இட்டுக் கொண்டு படிக்க ஏற்ற கவசம்.

குங்குமமாவது குறைகளைத் தீர்ப்பது
குங்குமமாவது குடியினைக் காப்பது
குங்குமமாவது குணமது அளிப்பது
குங்குமமாவது கொல்வினைத் தீர்ப்பதே

விதிதனை வெல்வது விமலையின் குங்குமம்
நதிகளை ஈவது நிமலையின் குங்குமம்
பதிதனைக் காப்பது பதிவிரதை குங்குமம்
கதிகளை ஆள்வதும் கருத்தான குங்குமம்

தஞ்சமென் றோரைத் தடுத்தாட் கொள்வது
பஞ்சமா பாதகம் பரிந்துமே தீர்ப்பதும்
அஞ்சின பேருக்கு அபய மளிப்பதும்
காஞ்சி காமாஷி கருணைக் குங்குமம்

நற்பத மீவது நாரணிக் குங்குமம்
பொற்பிணை ஈவது பூரணிக் குங்குமம்
சிற்பர மாவது ஸ்ரீசக்ர குங்குமம்
கற்பினைக் காப்பதும் காரிகைக் குங்குமம்

செஞ்சுடர் போன்றது சீரான் குங்குமம்
கொஞ்சும் அழகைக் கொடுப்பதும் குங்குமம்
ஐந்து புலன்கள் அடக்கி யருள்வதும்
காசி விசாலாஷி கனிவாம் குங்குமம்

நோயினைத் தீர்ப்பதும் நுண்ணறி யீவதும்
பேயினைத் தீர்ப்பதும் பெரும் புகழீவதும்
சேயினைக் காப்பதும் செல்வம் தருவதும்
தாயினை அருச்சித்தம் தன்னொளிக் குங்குமம்

சக்தி கொடுப்பதும் சத்தியம் காப்பதும்
பக்தி அளிப்பதும் பரகதி யீவதும்
முக்தி கொடுப்பதும் மும்மலம் தீர்ப்பதும்
சித்தி தருவதும் சிறந்த குங்குமம்

நெஞ்சிற் கவலைகள் நீக்கி யருள்வதும்
செஞ்சொற் கவிபாடும் சீரினை யீவதும்
வஞ்சப் பகைவரை வாட்டி யருள்வதும்
மதுரை மீனாஷி மங்கலக் குங்குமம்

சிவசிவ என்றுமே திருநீறணிந்த பின்
தவமான மேலோருந் தரித்துக் களிப்பதும்
சிவகாமி யேஎன சிந்தித் தணிவதும்
பாவவினை தீர்ப்பதும் பராசக்தி குங்குமம்

எவையெவை கருதிடின் அவையவை யீவதும்
நவவகை சக்தியின் நலனைக் கொடுப்பதும்
குவிசெய் கரத்துடன் கும்பிட்ட பேருக்கு
குவிநிதி யீவதும் குலநலக் குங்குமம்

அஷ்டலெஷ்மி அருள் தந்தளிப்பதும்
இஷ்டங்களீவதும் ஈடற்ற குங்குமம்
கஷ்டம் தவிர்த்தென்னை காத்தருள்வதும்
அஷ்டஸ்ரீசக்ர ஆனந்தக் குங்குமம்

குஷ்ட முதலான மகாரோகந் தீர்ப்பதும்
நஷ்டம் வராதொரு நலனைக் கொடுப்பதும்
எட்டிரண்டோர் அறிவித்தோர் வீடினைக்
கிட்டவே செய்வதும் கேண்மைக் குங்குமம்

பட்ட காலிலே படுமெனக் கஷ்டங்கள்
விட்டி டாமலே வந்து வாட்டினும்
பட்டான பார்வத பாதம் பணிந்தே
இட்டார் இடர்தவிர்க்கும் இனிய குங்குமம்

சித்தந்தனைச் சுத்தி செய்வதர்க் கெளியதோர்
எத்துத் தெரியாதே ஏமாந்த மாந்தரே!
நித்தம் தொழும்அன்னை குங்குமம் தன்னை
நித்தியம் தரித்துமே மேன்மை அடைவோம்

மிஞ்சும் அழகுடன் குங்கும ஆடைகள்
செஞ்சுடர் ஆகுமோர் ஸ்ரீசக்கரம் ஈஸ்வரியின்
கஞ்சமலர் முகம் தன்னில் திகழ்வதும்
பஞ்ச நிதிதரும் பண்புக் குங்குமம்

## ஆறுபடை வீடுகளின்

# கந்த சஷ்டி கவசங்கள்

### முதலாவது கவசம்

## திருப்பரங்குன்றுறை தீரன்

#### காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர்அருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

#### குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

#### நூல்

திருப்பரங் குன்றுறை தீரனே குகனே!
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா!
குறுக்குத் துறையுறை குமரனே! அரனே!
இருக்கும் குருபரா ஏரகப் பொருளே!
வையா புரியில் மகிழ்ந்து வாழ்பவனே!
ஒய்யார மயில்மேல் உகந்தாய் நமோ நமோ!
ஐயா குமரா அருளே நமோ நமோ!
மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ!
பழநியங் கிரிவாழ் பகவா நமோ நமோ!
மழுவுடை முதல்வன் மதலாய் நமோ நமோ!
விராலி மலையுறை விமலா நமோ நமோ!
மராமரம் துளைத்தோன் மருகா நமோ நமோ!
சூரசம் கார துரையே நமோ நமோ!
வீரவேல் ஏந்தும் வேளே நமோ நமோ!
பன்னிரு பரமுடைய பரமா நமோ நமோ!
கண்க ளீராறுடைக் கந்தா நமோ நமோ!
கோழிக் கொடியுடைக் கோவே நமோ நமோ!
ஆழிசூழ் செந்தில் அமர்ந்தாய் நமோ நமோ!

சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம் ரீம்
வவவ வவவ ஆம் ஹோம்
ணணண ணணண வாம் ஹோம்
பபப பபப சாம் சூம்
வவவ வவவ கௌம் ஓம்
லல லிலி லுலு நாட்டிய அட்சரம்
கக கக கக கந்தனே வருக!
இக இக இக ஈசனே வருக!
தக தக தக சற்குரு வருக!
பக பக பகபரந் தாமா வருக!
வருக வருகவென் வள்ளலே வருக!
வருக வருகநிஷ் களங்கனே வருக!
தாயென நின்னிரு தாள்பணிந் தேன்எனைச்
சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே!
அல்லும் பகலும் அனுதினம் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்ல விடங்கள் வராமல் தடுத்து
நல்ல மனத்துடன் ஞான குருஉனை
வணங்கித் துதிக்க மகிழ்ந்து நீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவாஎப் போதும்
கந்தா கடம்பா கார்த்தி கேயா!
நந்தன் மருகா நாரணி சேயே!
எண்ணிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணளி அளிக்கும் சாமி நாதா!
சிவகிரி கயிலை திருப்பதி வேளூர்
தவக்கதிர் காமம் சார்திரு வேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்
விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிகரி ல்லாத் தலங்களைக் கொண்டு
சன்னிதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக்(கு) அன்புடன் தமிழைச்
செகத்தோர் அறியச் செப்பிய கோவே!
சித்துகள் ஆடும் சிதம்பரச் சக்கரம்
நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்
வித்தாய் நின்ற மெய்ப்பொரு ளோனே!
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே!

வெற்றிக் கொடியுடை வேளே போற்றி!
பத்திசெய் தேவர் பயனே போற்றி!
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி!
அத்தன் அரியன் அம்பிகை லட்சுமி
வாணி யுடனே வரையுமாக் கலைகளும்
தானே நானென்று சண்முக மாகத்
தாரணி யுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி!
பூதலத்துள்ள புண்ணிய தீர்த்தங்கள்
ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிஷ்டைகள் பலபல வெல்லாம்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம்
எள்ளினுள் எண்ணெய்போல் எழிலுடை உன்னை
அல்லும் பகலும் ஆசா ரத்துடன்
சல்லாப மாய்உனைத் தானுறச் செய்தால்
எல்லாம் வல்லமை இமைப்பினில் அருளி
பல்லா யிரநூல் பகர்ந்தருள் வாயே
செந்தில் நகர்உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே!
சரணம் சரணம் சரவண பவஓம்!
அரன்மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்!
சரணம் சரணம் சரணம் பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

## இரண்டாவது கவசம்
## திருச்செந்தூர் கந்தவேல்

**(திருச்சீரலைவாய்)**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமி ரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வேலா லெனைக் காக்கவென் றுவந்து
வர வர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக

இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக்குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக்காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்

இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதி யென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகளி ரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளி ரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோடப்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க

வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்!
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத்மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!

எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!
மயினட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவ ஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

## மூன்றாவது கவசம்
## பழநிப் பதியொளிர் பரமன்
**(திருவாவினன் குடி)**

திருவா வினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா!
சரவணை சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழைபங் காளா
பரமேஸ் வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக் கருள்வாய் வாமனன் மருகா!
இரண்டா யிரம்வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திரநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத் துடனே பராசக்தி வேலதாய்
வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூரசம் காரா துஷ்டநிஷ் டூரா
கயிலாய மேவும் கனகசிம் மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக்கு அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முருகாற் றுப்படை சொல்லிய
நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக் குதவா
திருஅரு ணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா
ஆயிரத் தெட்டாம் அநள் சிவ தலத்தில்

பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம்சமண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா
குருவாம் பிரமனைக் கொடுஞ்சிறை வைத்து
உறுபொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
கருதிமெய் யோகம் சொல்லியது ஒருமுகம்
அருள்பெறு மயில்மீது அமர்ந்தது ஒருமுகம்
வள்ளிதெய் வானையை மருவியது ஒருமுகம்
தெள்ளுநான் முகன்போல் சிருஷ்டிப்பது ஒருமுகம்
சூரனை வேலால் துணித்தது ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருமறை யடியார்
தானவர் வேண்டுவ தருள்வது ஒருமுகம்
ஞான முதல்வநக்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோ நம
பொருட்செந்தில் அம்பதி புரப்பாய் நமோ நம
ஏரகம் தனில்வாழ் இறைவா நமோ நம
கூரகம் ஆவினன் குடியாய் நமோ நம
சர்வசங் கரிக்குத் தனயா நமோ நம
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோ நம
எல்லா கிரிக்கும் இறைவா நமோ நம
சல்லாப மாக சண்முகத் துடனே
எல்லாத் தலமும் இனிதெழுந் தருளி
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே
மூல வட்டத்தில் முளைத்தெழு ஜோதியை
சாாவமுக் கோணத் தந்தமுச் சக்தியை
வேலா யுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
மேலும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற்கோ ணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்து செய் அர்ச்சனை
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய்அறு கோணம் மகேசுவரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன்மேல்

ஆகாச வட்டத்து அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை
தந்திர அர்ச்சனை தலைமேல் கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக் கட்டி
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
மிக்கமாய்க் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாவர்
சாகா வகையும் தன்னை அறிந்து
ஐந்து ஜீவனுடன் ஐயஞ்சு கல்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியர் தம்முடன் அக்கினி
அந்தி ரனைக்கண்டு அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவா என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறு முகமாய் அகத்துளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன்விளை யாடி
மேலைக் கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக் குழந்தை வடிவையும் காட்டி
நரைதிரை மாற்றி நாலையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி
மனத்தில் பிரியா வங்கண மாக
நினைத்த படிஎன் நெஞ்சத் திருந்து
அதிசயம் என்றுன் அடியார்க்கு இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறா தாரத்து ஆறு முகமும்
மாறாதிருக்கும் வடிவையும் காட்டி
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்கத்
தனதென வந்து தயவுடன் இரங்கிச்
சங்கொடு சக்கரம் சண்முக தெரிசனம்
எங்குநினைத் தாலும் என்முன்னே வந்து
அஷ்டாவ தானம் அறிந்தவுடன் சொல்லத்
தட்டாத வாக்கும் சர்வா பரணமும்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்

துலக்கிய காவியம் சொற்பிர பந்தம்
எழுத்துச் சொற்பொருள் யாப்பலங் காரம்
வழுத்தும்என் நாவில் வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியார்க்கும் வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென
வச்சிர சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக் உதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி
நல்லஉன் பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தானெனக் கருளி
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்
கிட்டவே வந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அனேக மூர்க்கமாய்
துட்டதேவ தையும் துட்டப் பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் கூனி விடும்பில்லி வஞ்சனை
பேதாளம் துர்க்கை பிடாரி நடுநடுங்க
பதைபதைத் தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித்தங்கு உருட்டி நொருக்கி
சூலத்தாற் குத்தித் தூளுதூள் உருவி
வேலா யுதத்தால் வீசிப் பருகி
மழுவிட் டேவி வடவாக் கினிபோல்
தழுவிஅக் கினியாய்த் தானே எரித்துச்
சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகாம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகரி அக்கினி சக்கரம்
சண்முக சக்கரம் தண்டா யுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்
ஏக ரூபமாய் என்முன்னே நின்று
வாகனத் துடன்என் மனத்துள் இருந்து
தம்பனம் மோகனம் தயவம் வசீகரம்
இன்பமா கருடணம் மேவுமுச் சாடணம்

வம்பதாம் பேதனம் வலிதரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயர்வித் வேடணம்
தந்திர மந்திரம் தருமணி அட்சரம்
உந்தன் விபூதி உடனே சபித்து
கந்தனின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண்டினும்
தந்துரட் சித்தருள் தயாபரா சரணம்!
சந்தம் எனக்கருள் சண்முகா சரணம்!
சரணம் சரணம் சட்கோண இறைவா!
சரணம் சரணம் சத்துரு சம்காரா!
சரணம் சரணம் சரவண பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

## நான்காவது கவசம்

## திருவேரகத்துறை பெருமான்

(சுவாமி மலை)

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே!
ஓங்கார மாக உதயத் தெழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி!
தேராச் சூரரைத் துண்டதுண் டங்களாய்ப்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான்மரு கோனே வள்ளிம ணாளனே!
நானெனும் ஆண்மை நண்ணிடாது என்னைக்
காணநீ வந்து காப்பதுன் கடனே
காளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் முதல்வா புனித குமாரா
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி!
ஏகாட் சரமாய் எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதற் பொருளே!
துதியட் சரத்தால் தொல்லுல கெல்லாம்
அதிசய மாக அமைந்தவா போற்றி
திரியாட் சரத்தால் சிவனயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மையுற் றவனே!

சதுரட் சரத்தால் சாற்றுநல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே!
பஞ்சாட் சரத்தால் பரமன் உருவத்தால்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தென்
நெஞ்சகத் திருக்கும் நித்தனே சரணம்!
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்
ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அமைந்த மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவணை வந்த சடாட்சரப் பொருளே!
அரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரண்டில் கதிரும்ஆ யுதத்தால்

தரங்குலைந்து ஓடத் தாரகா கரன்முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர்திருச் செந்தூர்த் தேவசே னாபதி!
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்ட சித்திகள்அருள் ஈசன் புதல்வா!
துட்டசம் காரா! சுப்பிர மண்யா!
மட்டிலா வடிவே! வையாபுரித் துரையே!
எண்கோ ணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொளாக் காட்சி காட்டிய சடாட்சர
சைவம் வைணவம் சமரச மாக
தெய்வமாய் விளங்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க்கு அருளும் ஈசா போற்றி
ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோடு உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்ரகம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரோடு என்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்!
அண்டர்நா யகனே! அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் கண்டிவே தாளம்
சண்டமா முனியும் தக்கராக் கதரும்

மண்டை வலியோடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சொக்கலும் சயமும்
மூலரோ கங்கள் முடக்குள் வலிப்பு
திட்டு முறைகள் தெய்வத் சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுன் கடனே செந்தில்நா யகனே!
தெய்வநா யகனே தீரனே சரணம்!
சரணம் சரணம் சரணம் சரணம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

## ஐந்தாவது கவசம்
## குன்றுதோறாடும் குமரவேள்
**(திருத்தணிகை)**

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமரா குருபரா
வள்ளி தெய்வானை மருவிய நாயகா
துள்ளிமயிலேறும் சுப்பிர மணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியனு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறு முகவா
சண்முக நதியும் சராபன்றி மலையும்
பன்முகம் நிறைந்த பழநிக்கு இறைவா
ஆராறு நூற்று அட்டமங் களமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா
ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகரகுண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண் ணீறணி திருநுதல் அழகும்
கருணை பொழியும் கண்ணான்கு மூன்றும்

குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப் பிரபைபோல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வ நாயகியாள்
பார்த்தழ கென்னப் பரிந்த கபோலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்
முறுக்கமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கம் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈஸ்வரன் பார்வதி எடுத்து முத்தாடி
ஈஸ்வரன் வடிவை மிகக்கண் டனுதினம்
கையால் எடுத்துக் கனமார்பு அணைத்தே
ஐயா! குமரா! அப்பனே! என்று
மார்பினும் தோளினும் மடியிலும் வைத்துக்
கார்த்திகே யாஎனக் கருணையால் கொஞ்சி
முன்னேகொட்டி முருகா! வருகவென்று!
அந்நேரம் வட்டமிட்டாடி விளையாடி
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக
தாவிய தகரேறும் சண்முகா வருக
ஏவிய வேலேந்தும் இறைவா வருக
கூவிய சேவற் கொடியாய் வருக
பாவலர்க் கருள்சிவ பாலனே வருக
அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணப் புண்ணியா வருக
அழகிற் சிவனொளி ஐயனே வருக
களபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக
திரிபுர பவனெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக
சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர்கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலங்கிய பாதமும்
அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்

சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி
பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திர வாளும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்
ஒருகோடி சூரியன் உதித்த பிரபைபோல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமுடி அணியுமா பரணமும்
வாயில்நன் மொழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலமும் நவரோம பந்தியும்
மார்பில் ஜவ்வாது வாடை குபீரென
புனுகு பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர் கஸ்தூரியும்
வலம்புரிச் சங்கொலி மணியணி மிடறும்
நலம்சேர் உருத்திராக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்
ஆணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணிப் பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்
கருணை பொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நவவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்
ஒருகை நிறைசங்கு ஒருகை சக்ராயுதம்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேற்குடை ஒருகை தண்டாயுதம்
ஒருகை சந்திராயுதம் ஒருகை வல்லாயுதம்
அங்கையில் பிடித்த ஆயுதம் அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
முருக்கம் சிறக்கும் மருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழை பங்காளா
வானவர் முனிவர் மகிழ்ந்து கொண்டாடத்

தானவர் அடியவர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்யச்
சக்திகள் எல்லாம் தாண்டவ மாட
அஷ்ட பவைரவர் ஆனந்த மாட
துஷ்டமிகுஞ் சூளிகள் சூழ்திசை காக்க
சத்த ரிஷிகள் சாந்தக மென்னச்
சித்தர்கள் நின்று சிவசிவா என்னத்
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்த தாரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்
நயமுடன் நின்று நாவால் துதிக்க
அஷ்ட லஷ்மி அம்பிகை பார்வதி
கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த
இடும்பா யுதன்நின் இணையடி பணிய
ஆடும் தேவகன்னி ஆரத்தி எடுக்க
தேவ கணங்கள் ஜெயஜெய என்ன
ஏவற் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தருவர் பாடிக் கவரிகள் வீசிக்
சார்ந்தனம் என்னச் சார்வரும் அனேக
பூதம் அடிபணிந் தேத்த வேதாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்து கொண்டாட
அரகர என்றடியர் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடைவி டாமல்உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் திருப்பாத மேந்த
நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திகே சுவரன்மீது ஏறிய நயமும்
வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்

வீரமயி லேறி வெற்றிவேல் எடுத்துச்
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்க முகாசுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலற்ற சூலத்தை அறுத்துச் சயித்து
விடபவே லாயுதம் வீசிக் கொக்கரித்துத்
தம்ப மெனும்சயத் தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்
திருப்பரங் குன்றம் சீர்ப்பதி செந்தூர்
திருவாவி னன்குடி திருவே ரகமும்
துய்ய பழநி சுப்பிர மணியன்
மெய்யாய் விளங்கும் விராலி மலைமுதல்
அண்ணா மலையும் அருள்மேவும் கயிலை
கண்ணிய மாவுற்று கழுகுமா மலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர்காமம் செங்கோடு கதிர்வேங் கடமும்
பதினா லுலகத்திலும் பக்தர் மனத்திலும்
எங்கும் தானவனாய் இருந்து அடியார்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்டமுடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிக மாய்எனக்கு அருள் சண்முகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

### ஆறாவது கவசம்

## பழமுதிர்ச்சோலைக் கதிரோன்

சங்கரன் மகனே சரவண பவனே!
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே!
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே!
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே!
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே!
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவண பவனே சட்கோணத் துள்ளுறை

அரனருள் சுதனே அய்யனே சரணம்!
கயிலொளி பவனே சடாட்சரத் தோனே!
மயில் வாகனனே வள்ளலே சரணம்!
திரிபுர பவனே தேவ சேனாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்!
திகழொளி பவனே சேவற் கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்!
பரிபுர பவனே பன்னிரு கையனே!
தருணமிவ் வேளை தற்காத் தருளே!
சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே!
பவ்வும் வவ்வுமாய் பழமுதிர் சோலையில்
தவ்வியே ஆடும் சரவண பவனே!
குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்!
தஞ்சமென் றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய்ச் சென்றங்கு
அஞ்சலி செய்தவன் அமுதமும் உண்டு
கார்த்திகை மாதர் கனமார்பு அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே! குகனே!
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடை வீர வாகுவோடு ஒன்பான்
தப்பிமா ராகத் தானையைக் கொண்ட
சம்பிர தாயா! சண்முகா வேலா!
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன்அவ் வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே
மமதையாய் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேகம தாக
உமையுடன் வந்தினி துவந்து பரிந்து
அயனைச் சிறைவிடென்று அன்பாய் உரைக்க!
நயமுடன் விடுத்த ஞான பண் டிதனே!
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லஷ்மி கலைமக ளுடனே
அறுவரோர் அம்சமாய் அரக்கரை வெல்ல

ஆறு முகத்துடன் அவதரித் தோனே!
சிங்க முகாசுரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொடியராக் கதரை
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ் வரர்கள் தமக்குச்
சேனா பதியாய்த் தெய்வீகப் பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புறு பழநி திருவே ரகமுதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்று ஓதினர் சமயம் அறிந்தங்கு
இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா!
கும்பமா முனிக்குக் குருதே சிகனே!
தேன்பொழில் பழநித் தேவ குமாரா!
கண்பார்த் தெனையாள் கார்த்திகேயா! என்
கஷ்டநிஷ் டூரம் கவலைகள் மாற்றி
அஷ்டலஷ்மிவாழ் அருளெனக்கு உதவி
இட்டமாய் என்முன் இருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே!
அருண கிரிதனக்கு அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்குக் கடாட்சித் தருள்வாய்
தேவ ராயன் செப்பிய கவசம்
பூவல யத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டி கவசந் தான்செபிப் போரைச்
சிட்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா!
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்த்திறம் தந்தருள் வோனே!
சரணம் சரணம் சரவண பவஓம்!
சரணம் சரணம் தமிழ்தரும் அரனே!
சரணம் சரணம் சங்கரன் சுதனே!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

திருச்சிற்றம்பலம்

ஆறு கவசங்கள் முற்றிற்று.

வேலும் மயிலும் துணை

## சண்முக கவசம்

அண்டமாய் அவனியாகி அறியொணாப் பொருளதாகித்
தொண்டர்கள் குருவு மாகித்துகள் அறுதெய்வமாகி
எண்திசை போற்றநின்ற என் அருள்ஈசனான
திண்திறல் சரவணத்தான், தினமும் என் சிரசைக் காக்க 1

ஆதியாம் கயிலைச் செல்வன் அணிநெற்றி தன்னைக் காக்க
தாது அவிழ் கடப்பந்தாரான் தானிரு நுதலைக் காக்க
சோதியாஞ் தணிகை யீசன், துரிசிலா விழியைக் காக்க
நாதனாம் கார்த்திகேயன் நாசியை நயந்து காக்க. 2

இருசெவிகளையும் செவ்வேள் இயல்புடன் காக்க
வாயை முருகவேள் காக்க நாப்பல் முழுமுதற் குமரன் காக்க
துரிசறு கதுப்பை யானைத்துண்டனார் துணைவன் காக்க,
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்பிரமணியன் காக்க. 3

ஈசனாம் வாகுலேயன், யெனது தரத்தைக் காக்க
தேசுறு தோள்விலாவும், திருமகள் மருகன் காக்க
ஆசிலாமார்பை யீராறாயுதன் காக்க என்தன்
ஏசிலா முழங்கைதன்னை யெழிற்குறிஞ்சிக்கோன் காக்க 4

உறுதியாய் முன்கைதன்னை உமையிளமதலை காக்க
தறுகணே றிடவே என்கைத் தலத்தை மாமுருகன் காக்க
புறங்கையை அயிலோன்காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்குமால் மருகன் காக்க பின்முதுகைச் சேய் காக்க 5

ஊணிறை வயிற்றை மஞ்சை ஊர்தியோன் காக்க வம்புத்
தோணிமிர்சுரேசன் உந்திச் சுழியினைக் காக்க குய்ய
நாணினை யங்கிகௌரி நந்தனன் காக்க பீஜ
ஆணியை கந்தன் காக்க ஆறுமுகன் குதத்தைக் காக்க 6

எஞ்சிடா திடுப்பை வேலுக்கிறைவனார் காக்க காக்க
அஞ்சக னமொரிரண்டும் அரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருட்காங்கேயன் விளரடித் தொடையை காக்க
செஞ்சரணேசவாசான் திமிரு முன் தொடையைக் காக்க 7

ஏரகத் தேவன் என்தாள் இருமுழங்காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலை வாய்த்தே காக்க
நேருடைப் பரடிரண்டு நிகழ பரங்கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க 8

ஐயுறு மலையன் பாதத்து அமர்பத்து விரலும் காக்க
பையுறு பழநி நாதவரன் அகங்காலைக் காக்க
மெய்யுடன் முழுதும் ஆதி விமலசண்முகவன் காக்க
தெய்வநாயகவி சாகன் தினமும் என்னெஞ்சைக் காக்க 9

ஒலியெழ வுரத்த சத்தத்தொடு வரு பூதப்ரேதம்
பலிகொள்இராக்க தப்பேய் பலகணத்து எவையானாலும்
கிலிகொள வெனைவேல் காக்க கெடுபரர்செய்யும் சூன்யம்
வலியுள மந்த்ரதந்த்ரம் வருத்திடாது அயில்வேல் காக்க 10

ஓங்கிய சீற்றமே கொண்டு உவணியில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம் எ஡கந்தடி பரசு ஈட்டி யாதி
பாங்குடை யாயுதங்கள் பகைவர் என் மேலே யோச்சின்
தீங்கு செய்யாமல் என்னைத் திருக்கை வேல் காக்க காக்க 11

ஔவிய முளர் ஊன் உண்போர் அசடர் பேய் அரக்கர் புல்லர்
தெவ்வர்கள் எவரானாலும் திடமுடனெனை மற்கட்டத்து
அவ்வியே வருவாராயில் சராசரமெ லாம்புரக்கும்
கவ்வுடைச் சூரசண்டன் கையயில் காக்க காக்க 12

கடுவிடப் டாந்தள் சிங்கம் கரடி நாய் புலிமா யானை
கொடியகோணாய் குரங்கு கோலமார்ச்சாலம் சம்பு
நடையுடை யெதனாலேனு நானிடர்ப் பட்டிடாமல்
சடிதியில் வடிவேல் காக்க சானவி முளைவேள் காக்க 13

தகரமே போற்றழீஇ ஞானவேல் காக்க வன்புள்
சிகரிதேள் நண்டுக்காலி செய்யன் ஏறுஆலப் பல்லி
நகமுடை ஓந்தி பூரான் அறிவண்டு புலியன் பூச்சி
உகமிசை யிவையால் ஏற்கோர் ஊறிலாதுஐவேல் காக்க 14

சலத்திலுய் வன்மீனேறு தண்டுடைத் திருக்கை மற்றும்
நிலத்திலும் சலத்திலும் தான் நெடுந்துயர் தரற்கேயுள்ள
குலத்தினால் நான்வருத்தங் கொண்டிடாது அவ்வவ்வேளை
பலத்துடனிருந்து காக்க, பாவகி கூர்வேல் காக்க 15

ஞமலியம் பரியன் கைவேல், நவக்கிரகக்கோள் காக்க,
சுமவிழி நோய்கள், தந்தசூலை, யாக்கிராணரோகம்,
திமிர்சுழல் வாதம் சோகை, சிரமடி கர்ணரோகம்,
எமையணு காமலே, பன்னிருபுயன் சயவேல் காக்க. 16

டமருகத்தடிபோனைக்குந், தலையிடி, கண்டமாலை,
குமுறுவிப் புறுதி, குன்மம், குடல்வலி, ஈழை, காசம்,
நிமிரொணா திருத்தும் வெட்டை, நீர்ப்பிர மேகமெல்லாம்,
எமையடையாமலே, குன்றெறிந்தவன் கைவேல் காக்க. 17

இணக்கமில்லாத பித்த வெரிவு மாசுரங்கள், கைகால்
முணக்கவே குறைக்குங் குஷ்டம் மூலவெண்முளை, தீமந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி, சாலமென்றறைமிந்தப்
பிணிக்குலம் எனையாளாமல், பெருஞ்சக்தி வடிவேல் காக்க. 18

தவனமாரோகம், வாதம், சயித்தியம், அரோசகம், மெய்
சுவறே செய்யுமூலச்சூடு, யிளைப்புவுடற்று விக்கல்,
அவதி செய் பேதி, சீழ் நோய், அண்டவாதங்கள் சூலை
எவையும் என்னிடத்து யெய்தாமல், யெம்பிரான் திணிவேல் காக்க. 19

நமைப்புறு கிரந்தி வீக்கம் நணுகிடு பாண்டு சோபம்,
அமர்ந்திடு கருமை வெண்மை யாகுமஃ. தொழுநோய் கக்கல்
இமைக்கு முன்னுறுவலிப்போடு யெழுபுடைப் பகந்தராதி,
இமைப்பொழுதேனும் என்னை, எய்தாமல்ருள் வேல் காக்க. 20

பல்லது கடித்து மீசைபடபடென்றேதுடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சங் காட்டியே யுருட்டி நோக்கி,
எல்லினும், கரியமேனி, எம படர்வரினு மென்னை
ஓல்லையில் தாரகாரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க. 21

மண்ணிலும், மரத்தின் மீதும் மலையிலும், நெருப்பின் மீதும்
தண்ணிறை சலத்தின் மீதும், கார்செய்யூர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தினுள்ளும், வேறெந்த விடத்து மென்னை
நண்ணிவந் தருளார் சஷ்டி நாதன் வேல் காக்க காக்க. 22

யகரமே போல், சூலேந்து நறும்புயன் வேல்முன் காக்க
அகரமே முதலாம், ஈராறு அம்பகன் வேல்பின் காக்க
சகரமோ டாறுமானோன், தன்கைவேல் நடுவிற் காக்க
சிகரமின் தேவ மோலி திகழை வேல் கீழ்மேல் காக்க. 23

ரஞ்சித மொழிதேவானை நாயகன் வள்ளிபங்கன்,
செஞ்சயவேல் கிழக்கில் திறமுடன் காக்கஅங்கி
விஞ்சிடு திசையின், ஞானவீரன் வேல்காக்க தெற்கில்
எஞ்சிடா கதிர்காமத்தோன் இகலுடைக் கரவேல்காக்க. 24

லகரமே போல், காளிங்க னல்லுட னெளிய நின்று
தகரமர்த்தனமே செய்த, சங்கரி மருகன் கைவேல்
நிகழெனைநிருதி திக்கில், நிலைபெறக்காக்க, மேற்கில்,
இகலயில் காக்க, வாயுவினில், குகன் கதிர்வேல் காக்க. 25

வடதிசைதன்னில், ஈசன் மகன் அருள் திருவேல் காக்க
விடையுடை ஈசன்திக்கில், வேதபோதகன் வேல் காக்க
நடக்கையில் இருக்குஞான்றும் நவில்கையில் நிமிர்கையில், கீழ்க்
கிடக்கையில் தூங்குஞான்றும் கிரிதுளைத்துளவேல் காக்க 26

இழந்து போகாத வாழ்வை ஈயுமுத் தையனார்கைவேல்
வழங்கு நல்ஊண்உண்போதும், மால்விளையாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்துநெஞ் சடக்கும்போதும்
செங்குணத்தோடே காக்க, திடமுடன் மயிலும் காக்க 27

இளமையில், வாலிபத்தில் ஏறிடு வாயோதிகத்தில்
வளர்அறுமுகச்சி வன்தான், வந்தெனைக் காக்க காக்க
ஒளியெழு காலை முன்எல், ஓம் சிவசாமி காக்க
தெளிநடு பிற்பகற்கால், சிவகுருநாதன் காக்க. 28

இறகுடைக் கோழித் தோகைக்கிறை, முன்இராவிற், காக்க
திறலுடைச் சூர்ப்ப கைத்தே திகழ்பின் இராவிற் காக்க
நறவு சேர்தாள் சிலம்பன், நடுநிசி தன்னிற் காக்க
மறைதொழு குழகன் எங்கோன், மாறாது காக்க காக்க. 29

இனம் எனத் தொண்டரோடும் இணங்கிடும் செட்டிகாக்க
தனிமையில் கூட்டந்தன்னில், சரவணபவனார் காக்க
நனியனுபூதி சொன்ன நாதர்கோன் காக்க, இத்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுள் தான் காக்க வந்தே. 30

## ஸ்கந்தகுரு கவசம்

கலியுகத் தெய்வமே கந்தனுக்கு மூத்தோனே
மூஷிக வாகனனே மூலப்பொருளோனே
ஸ்கந்தகுருகவசத்தை கலிதோஷம் நீங்கிடவே
திருவடியுன் திருவருளால் செப்புகிறேன் காத்தருள்

சித்தி வினாயக ஜயமருள் போற்றுகிறேன்
சிற்பர கணபதே நற்கதியும் தந்தருள்வாய்
கணபதி தாளினையைக் கருத்தினிலே வைத்திட்டேன்
அச்சம் தீர்த்தென்னை ரட்ஷித்திடுவீரே
ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரவணபவ குஹா சரணம் சரணம்
குருகுகா சரணம் குருபரா சரணம்
குருகுகா சரணம் குருபரா சரணம்
சரண மடைந்திட்டேன் கந்தா சரணம்
தனைத்தா னறிந்து நான் தன்மய மாகிடவே
ஸ்கந்தகிரி குருநாதர் தந்திடுவீர் ஞானமுமே
தத்தகிரி குருநாதா வந்திடுவீர் வந்திடுவீர்
அவதூத ஸ்கந்தகுருவாய் ஆண்டவனே வந்திடுவீர்
அன்புருவாய் வந்தென்னை ஆட்கொண்ட குருபரனே
அறம் பொருளின்பம் வீடுமே தந்தருள்வாய்
தந்திடுவாய் வரமதனை ஸ்கந்தகுருநாதா
சண்முகா சரணம் ஸ்கந்த குரோ
காத்திடுவாய் காத்திடுவாய் ஸ்கந்தகுரு நாதா
போற்றிடுவேன் போற்றிடுவேன் புவனகுரு நாதா

போற்றி போற்றி ஸ்கந்தா போற்றி
போற்றி போற்றி முருகா போற்றி
அறுமுகா போற்றி அருட்பதம் அருள்வாய்
தகப்பன் சாமியே என் இதயத்துள் தங்கிடுவாய்
ஸ்வாமி மலைதனில் சொன்னதைச் சொல்லிடுவாய்.
சிவகுரு நாதா செப்பிடுவாய் ப்ரணவமதை
அகக்கண் திறக்க அருள்வாய் உபதேசம்
திக்கெல்லாம் வென்று திருச்செந்தில் அமர்ந்தோனே
ஆறுமுக ஸ்வாமி யுன்னை அருட்ஜோதியாய்க் காண
அகத்துள்ளே குமரா நீ அன்புமயமாய் வருவாய்
அமரத்தன்மையினை அனுகிரஹித்திடுவாயே
வேலுடைக் குமரா நீ வித்தையும் தந்தருள்வாய்
வேல்கொண்டு வந்திடுவாய் காலனை விரட்டிடவே
தேவரைக் காத்த திருச்செந்தி லாண்டவனே
திருமுருகன் பூண்டியில் திவ்ய ஜோதியான கந்தா
பரஞ்ஜோதியுங்காட்டி பரிபூர்ண மாக்கிடுவாய்
திருமலை முருகா நீதிட ஞான மருள்புரிவாய்
செல்வமுத்துக் குமரா அருணகிரிக் கருளியவா
திருப்பரங் கிரிகுஹனே தீர்த்திடுவாய் வினை முழுதும்
திருத்தணி வேல்முருகா தீரனாய் ஆக்கிடுவாய்
எட்டுக்குடி குமரா ஏவல்பில்லி சூனியத்தை
பகைவர் சூதுவாதுகளை வேல்கொண்டு விரட்டிடுவாய்
எல்லாப் பயன்களும் எனக்குக் கிடைத்திடவே
எங்கும் நிறைந்த கந்தா என்கண் முருகா நீ
என்னுள் ளறிவாய் நீ உள்ளொளியாய் வந்தருள்வாய்
திருப்போரூர் மாமுருகா திருவடியே சரணமய்யா
அறிவொளியாய் வந்துநீ அகக்கண்ணைத் திறந்திடுவாய்
திருச்செந்தூர் ஷண்முகனே ஜகத்குருவிற்கருளியவா
ஜகத்குரோ சிவகுமரா சித்தமல மகற்றிடுவாய்
செங்கோட்டு வேலவனே சிவானுபூதிதாரும்
சிக்கல் சிங்கார ஜீவனைச்சிவ னாக்கிடுவாய்
குன்றக குடிகுமரா குருகுகனாய் வந்திடப்பா
குமரகிரிப் பெருமானே மனத்தையும் மாய்த்திடுவீர்
பச்சைமலை முருகா இச்சையைக் களைந்திடப்பா
பவளமலை ஆண்டவனே பாவங்களைப் போக்கிடப்பா
விராலிமலை ஷண்முகனே விரைவில்நீ வந்திடப்பா

வயலூர் குமாரகுரோ ஞானவரமெனக்கருள்வீரே
வெண்ணெய் மலைமுருகா மெய்வீட்டைத் தந்திடுவீர்
கதிர்காம வேலவனே மனமாயை அகற்றிடுவாய்
காந்த மலைக்குமரா கருத்துள் வந்திடுவீர்
மயிலத்து முருகாநீ மனத்தகத்துள் வந்திடுவீர்
கஞ்சமலை சித்தகுரோ கண்ணொளியாய் வந்திடுவீர்
குமரமலை குருநாதா கவலையெல்லாம் போக்கிடுவீர்
வள்ளிமலை வேல்முருகா வேல்கொண்டு வந்திடுவீர்
வடபழனி யாண்டவனே வல்வினைகள் போற்றிடுவீர்
ஏழுமலை யாண்டவனே எத்திக்கும் காத்திடுவீர்
ஏழ்மை யகற்றிகந்தா எமபயம் போக்கிடுவீர்
அசையாத நெஞ்சத்தில் அறிவாக நீ அருள்வாய்
ஆறுபடைக் குமரா மயிலேறி வந்திடுவாய்
பணிவதே பணியென்று பணித்தனை நீ எனக்கு
பணிந்தேன் கந்தா உன்பாதம் பணிந்துவப்பேன்
அருட்பெருஞ் ஜோதியே அன்பெனக் கருள்வாயே
படர்ந்த அன்பினைநீ பரப்பிரம்மம் என்றனையே
உலகெங்கு முள்ளது ஒரு பொருள் அன்பேதான்
உள்ளுயிராகி இருப்பதும் அன்பென்றாய்
அன்பே குமரன் அன்பே ஸ்கந்தன்
அன்பே ஓமெனும் அருள்மந்திரம் என்றாய்
அன்பே உள்ளத்திலே அசையாது அமர்த்திடுமோர்
சக்தியைத் தந்து தடுத்தாட் கொண்டிடவும்
வருவாய் அன்பனாய் வந்தருள் ஸ்கந்தகுரோ
யாவர்க்கும் இனியனேநீ யாவர்க்கும் எளியன்நீ
யாவர்க்கும் வலியன் நீ யாவர்க்கு மானோய் நீ
உனக்கொரு கோயில் என் அகத்துள்ளே புனைவேனே
சிவசக்திக் குமரா சரணம் சரணமையா
அபாயம் தவிர்த்து தடுத்தாட் கொண்டருள்வாய்
நிழல்வெயில் நீர்நெருப்பு மண்காற்று வானதிலும்
பகைமையை அகற்றி அபயதமளித் திடுவீர்
உணர்விலே ஒன்றி என்னை நிர்மல மாக்கிடுவாய்
யானென தற்றமெய்ஞ் ஞானம் அருள்வாய்நீ
முக்திக்கு வித்தான முருகா கந்தா.
சதுர்மறை போற்றும்ஷண்முக நாதா
ஆகமம் ஏத்தும் அம்பிகை புதல்வா

ஏழையைக் காக்கநீ வேலேந்தி வந்திடுவாய்
தாயாய்த் தந்தையாய்முருகா தக்கணம்நீ வருவாய்
சக்தியும் சிவனுமாய்ச் சடுதியில்நீ வருவாய்
பரம்பொருளான பாலனே ஸ்கந்தகுரோ
ஆதிமூலமே அருவாய் உருவாய்நீ
அடியனைக் காத்திட அறிவாய்வந் தருள்வாய்
உள்ளொளியாய் முருகா உடனேநீ வா வா வா
தேவாதி தேவா சிவகுரோ வா வா வா
வேலாயுதத்துடன் குமரா விரைவில் வந்திடப்பா
காண்பன யாவுமாய்க் கண்கண்ட தெய்வமாய்
வேதச் சுடரோய் மெய்கண்ட தெய்வமே
மித்தையாம் இவ்வுலகை மித்தையென றறிந்திடச் செய்
அபயம் அபயம் கந்தா அபயமென்றலறுகிறேன்
அமைதியை வேண்டி அறுமுகவா வாவென்றவன்
உன்துணை வேண்டினேன் உமையவள் குமரா கேள்
அச்சம் அகற்றிடுவாய் அமைதியைத் தந்திடுவாய்
வேண்டிய துன்னருளே அருள்வதுன் கடனே யாம்
உன் அருளாலே உன் தாள் வணங்கிட்டேன்
அட்டதமா சித்திகளை அடியனுக்கருளிடப்பா
அஜபை வழியிலே அசையாம லிருத்திவிடு
சித்தர்கள் போற்றிடும் ஞானசித்தியும் தந்துவிடு
சிவானந்தத் தேனில் திளைத்திடவே செய்துவிடு
அருள் ஒளிக் காட்சியை அகத்துள்ளே காட்டிவிடு
அறிவை அறிந்திடும் அவ்வருளையும்நீ தந்துவிடு
அனுக்ரஹித் திடுவாய் ஆதிதரு நாதாகேள்
ஸ்கந்தா குருநாதா ஸ்கந்த குருநாதா
தத்துவம் மறந்து தன்னையும் நான் மறந்து
நல்லதும் கெட்டதும் நானென்பதும் மறந்து
பாவபுண் ணியத்தோடு பரலோகம் மறந்திடச் செய்
அருள்வெளி விட்டிடவனை அகலா திருத்திடுவாய்
அடிமையைக் காத்திடுவாய் ஆறுமுகக் கந்தகுரோ
சித்தியிலே பெரிய ஞானசித்த நீ அருள
சீக்கிரமே வருவாய் சிவானந்தம் தருவாய்
சிவானந்தம் தந்தருளி சிவசித்தி ராக்கிடுவாய்
சிவனைப் போலென்னைச் செய்திடுவ துன்கடனே
சிவசத் குரு நாதா சிவசத் குருநாதா

ஸ்கந்த குரு நாதா கதறுகிறேன் கேட்டிடுவாய்
தாளினைப்பிடித்தேன் தந்திடு வரமெனுக்கு
திருவருட்சக்தியை தந்தாட் கொண்டிடுவாய்
சத்ரு பகைவர்களை ஷண்முகா ஒழித்திட்டு
கிழக்கு திசையிலிருந்து க்ருபாகரா காப்பாற்றும்
தென்கிழக்கு திசையிலிருந்து தீனபந்தோ காப்பாற்றும்
தென்திசை யிலுமென்னைத் திருவருளால் காப்பாற்றும்
தென்மேற் கிலுமென்னைத் திறல் வேலால் காப்பாற்றும்
மேற்குத் திக்கிலென்னை மால் மருகா ரக்ஷிப்பாய்
வடமேற்கிலுமென்னை மயிலோனே ரக்ஷிப்பாய்
வடக்கிலென்னைக் காப்பாற்ற வந்திடுவீர் சத்குருவாய்
வடகிழக்கில் எனக்காக மயில்மீது வருவீரே
பத்துதிககுத் தோறுமென பறந்து வந்து ரக்ஷிப்பாய்
என் சிகையையும் சிரசினையும் சிவகுருரோ ரக்ஷிப்பாய்
நெற்றியும் புருவமும் நினதருள் காக்கட்டும்
புருவங்களுக் கிடையே புருஷோத்தமன் காக்கட்டும்
கண்களிரண்டையும் கந்தவேல் காக்கட்டும்
நாசிகளிரண்டையும் நல்லவேல் காக்கட்டும்
செவிகளிரண்டையும் சேவற்கொடி காக்கட்டும்
கன்னங்களிரண்டையும் காங்கேயன் காக்கட்டும்
உதட்டினையும்தான் உமாசுதன் காக்கட்டும்
நாக்கை நம் முருகன் நயமுடன் காக்கட்டும்
பற்களை கந்தன் பலம்கொண்டு காக்கட்டும்
கழுத்தை ஸ்கந்தன் கைகளால் காக்கட்டும்
தோள்க ளிரண்டையும் தூயவேல் காக்கட்டும்
மார்பையும் வயிற்றையும் வள்ளிமணாளன் காக்கட்டும்
மனத்தை முருகன்கை மாத்தடிதான் காக்கட்டும்
ஹ்ருதயத்தில் ஸ்கந்தன் இனிதுநிலைத் திருக்கட்டும்
உதரத்தை யெல்லாம் உமைமைந்தன் காக்கட்டும்
நாபிகுஹ்யம் லிங்கம் நவையுடைக் காக்கட்டும்
இடுப்பை முழங்காலை இணையான கால்களையும்
புறங்கால் விரல்களையும் பொருந்தும் உகிர் அனைத்தையுமே
உரோமத் வாரமெல்லாம் உமைபாலா ரக்ஷிப்பாய்
தோல்ரத்தம் மஜ்ஜையையும் மாம்ஸ்மென்பு மேதஸையும்
அறுமுகவா காத்திடுவீர் அமரர் தலைவா காத்திடுவீர்
என் அஹங்காரமுமகற்றி அறிவொளியாயிருந்தும்

முருகா வெனைக்காக்க வேல்கொண்டு வந்திடுவீர்
பாபத்தைப் பொசுக்கிப் பாரெல்லாம் சிறப்புறவே
ஓம் ஸௌம் சரவணபவ ஸ்ரீம் ஹ்ரீம்க்லீம் என்றும் நாள்தோறும்
ஓமிருந்து நமஹவரை ஒன்றாகச் சேர்த்திடடா
ஒன்றாகக் கூட்டியுமே உள்ளத்திலே இருத்தி
ஒருமனத் தோடுநீ உருவையும் ஏத்திடடா
முருகனின் மூலமிது முழிமனத்தோ டேத்திட்டால்
மும்மல மகன்றுவிடும் முக்தியுந்தன் கையிலுண்டாம்
முக்தியை வேண்டியுமே எத்திக்கும் செல்ல வேண்டாம்
முருகன் இருப்பிடமே முக்தித்தல மாகுமப்பா
ஹ்ருதயத்தில் முருகனை இருத்திவிடு இக்கணமே
இக்கணமே மூலமந்த்ரம் ஏத்திவிடு ஏத்திவிடு
மூலமதை ஏத்துவோர்க்குக் காலபய மில்லையடா
காலனை நீஜயிக்க கந்தனை பற்றிடடா
சொன்னபடிச் செய்தால் சுப்ரமண்ய குருநாதன்
தன்னொளிப் பெருஞ்சுடராய் உன்னுள்ளே தானிருப்பான்
ஜகமாயை ஜயித்திடவே செப்பினேன் மூலமுமே
மூலத்தை நீஜபித்தே முக்தனு மாகிடடா
அக்ஷர லக்ஷமிதை அன்புடன் ஜபித்துவிடில்
எண்ணிய தெலாம்கிட்டும் எமபய மகன்றோடும்
மூவுலகும் பூஜிக்கும் முருகனருள் முன்னிற்கும்
பூவுலகில் இணையற்ற பூஜ்யனு மாவாய்நீ
கோடித்தரம் ஜபித்து கோடிகாண வேண்டுமப்பா
கோடிகாணச் சொன்னதைநீ நாடிடுவாய் மனமே
ஜன்மம் கடைத்தேற ஜபித்திடுவாய் கோடியுமே
வேதாந்த ரகசியமும் வெளியாகு முன்னுள்ளே
வேத சூக்குமத்தை விரைவாகப் பற்றிடலாம்
சுப்ரயமண்ண குரு ஜோதியாயுள் தோன்றிடுவான்
அருட்பெருஞ் ஜோதியான ஆறுமுக ஸ்வாமியுமே
அந்தர் முகமிருந்து ஆட்கொள்வான் சத்தியமாய்
சித்தியையும் முக்தியையும் ஸ்கந்தகுரு தந்திடுவான்
நின்னையே நான்வேண்டி நித்தமும் ஏத்துகிறேன்
மெய்யறிவாகக் கந்தா வந்திடுவாய் இவனுளே நீ
வந்திடுவாய் மருவிடுவாய் பகுத்தறி வாகவே நீ
பகுத்தறி வோடிவனைப் பார்த்திடச் செய்திடப்பா
பகுத்தறி வானகந்தன் பரங்குன்றில் இருக்கின்றாய்

பழனியில் நீயும் பழம்ஜோதி யானாய் நீ
பிரமனுக் கருளியவா பிரணவப் பொருளோனே
பிறவா வரமருளி பிரம்மமய மாக்கிடுவாய்
திருச்செந்தூரில்நீ சக்திவேல் தாங்கிவிட்டாய்
பழமுதிர்ச் சோலையில் பரஞ்ஜோதி மயமானாய்
சுவாமி மலையிலே சிவசுவாமிக் கருளியநீ
குன்றுகள் தோறும் குருவாய் அமர்ந்திட்டோய்
ஸ்கந்த கிரியைநீ சொந்தமாக்கிக் கொண்டனையே
ஸ்கந்த குருநாதா ஸ்கந்தாஸ்ரம ஜோதியே
பிறப்பையும் இறப்பையும் பெயர்த்துக் காத்திடுவாய்
பிறவாமை என்கிற பெருவரம்நீ தந்திடுவாய்
தத்துவக் குப்பையை மறந்திடச் செய்திடுவாய்
எந்த நினைப்பையும் எரித்துநீ காத்திடுவாய்
ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரண மடைந்திட்டேன் சடுதியில் வாருமே
சரவண பவனே சரவண பவனே
உன்னரு ளாலேதான் உயிரோடிருக்கின்றேன்
உயிருக்குயிரானகந்தா உன்னிலென்னைக் கரைத்திடப்பா
என்னி லுன்னைக்காண எனக்கு வரமருள்வாய்
சீக்கிரம் வந்து சிவசித்தியும் தந்தருள்வாய்
இடகலை பிங்கலை ஏதும் அறிந்திலேன் நான்
இந்திரிய மடக்கி இருந்து மறிகிலேன் நான்
ஸ்கந்தா உன் திருவடியைப்பற்றினேன் சிக்கெனவே
சிக்கெனப் பற்றினேன் செப்பிடுவீர் உபதேசம்
காமச் கசடுகள் யாவையும் களைந்திடுவாய்
சித்த சுத்தியும் ஜபமும் தந்திடுவாய்
நினைப்பெல்லாம் நின்னையே நினைத்திடவே
திருவருள் தந்திடுவாய் திருவருள்தான் பொங்கிடவே
திருவருள் ஒன்றிலே நிலைபெறச் செய்திடுவாய்
நிலைபெறச் செய்திடுவாய் நித்யா னந்தமதில்
நித்யா னந்தமே நின்னுரு வாகையினால்
அத்வை தானந்தத்தில் இமைப்பொழுது ஆழ்த்திடுவாய்
ஞான பண்டிதா நான்மறை வித்தகாகேள்
ஸ்கந்த குருநாதா ஸ்கந்தகுரு நாதாகேள்
மெய்ப்பொருள் காட்டி மேன்மை அடைந்திடச் செய்
வினைகள் யாவையுமே வேல்கொண்டு விரட்டிடுவாய்

தாரித் திரியங்களையும் தடிகொண்டு விரட்டிடுவாய்
துக்கங் எனைத்தையும் தொலைதூரம் போக்கிடுவாய்
பாப உடலைப் பரிசுத்த மாக்கிடுவாய்
இன்ப துன்பத்தை இருவிழியால் விரட்டிடுவாய்
ஆசைப் பேய்களை அறவே நசுக்கிடுவாய்
அகந்தைப் பிசாசை அழித்து ஒழித்திடடா
மெய்யருளாம் உன்னருளில் முருகா இருத்திடுவாய்
கண்டகண்ட தெய்வமே கலியுக வரதனே
ஆறுமுக மானகுரோ அறிந்திட்டே னுன்மஹிமை
இக்கணமே வருவாய் என்ஸ்கந்த குருவேநீ
என்னைக் காத்திடவே எனக்குநீ அருளிடவே
அரைக் கணத்தில் நீயும் ஆடிவரு வாயப்பா
வந்தெனைத் தடுத்து வலிய ஆட்கொள் வரதகுரோ
அன்புத் தெய்வமே ஆறுமுக மானவனே
சுப்ர மண்யனே சோகம் அகற்றிடுவாய்
ஞான ஸ்கந்தரே ஞானம் அருள் வாய்நீ
ஞான தண்டபாணியே என்னை ஞானபண்டிதனாக்கிடுவாய்
அகந்தையெலா மழித்து அன்பினை ஊட்டிடுவாய்
அன்பு மயமாக்கி ஆட்கொள்ளு வாயப்பா
அன்பை என் உள்ளத்தில் அசைவின்றி நிறுத்திவிடு
அன்பையே கண்ணாக ஆக்கிக் காத்திடுவாய்
உள்ளும் புறமும் உன்னருளாம் அன்பையே
உறுதியாக நானும் பற்றிட உவந்திடுவாய்
எல்லையில்லாத அன்பே இறைவெளி என்றாய்நீ
அங்கிங் கெனாதபடி எங்கும் அன்பென்றாய்
அன்பே சிவமும் அன்பே சக்தியும்
அன்பே ஹரியும் அன்பே பிரமனும்
அன்பே தேவரும் அன்பே மனிதரும்
அன்பே நீயும் அன்பே நானும்
அன்பே சாந்தம் அன்பே ஆனந்தம்
அன்பே மௌனம் அன்பே மோக்ஷம்
அன்பே பிரமமும் அன்பே அனைத்துமென்றாய்
அன்பிலாத இடம் அங்குமிங்கு மில்லையென்றாய்
எங்கும் நிறைந்த அன்பே என் குருநாதனப்பா
அன்பில் உறையும் அருட்குரு நாதரே தான்
ஸ்கந்தாஸ் ரமத்தில் ஸ்கந்தகுரு வானான் காண்

மூவரும் தேவரும் முனிவரும் போற்றிடவே
ஸ்கந்தாஸ் ரமந்தன்னில் ஸ்கந்த ஜோதியுமாய்
ஆத்ம ஜோதியுமாய் அமர்ந்திட்ட ஸ்கந்தகுரு
இருளை அகற்றவே எழுந்திட்ட எங்கள்குரு
எல்லை யில்லாதஉன் இறைவெளியைக் காட்டிடுவாய்
முக்தியைத் தந்திடுவாய் மூவரும் போற்றிடவே
நம்பினேன் உன்னையே நம்பினேன் ஸ்கந்தகுரோ
உனையன்றி இவ்வுலகில் ஒன்றுமில்லை என்றுணர்ந்தேன்
நன்கறிந்து கொண்டேன் நானும் உனதருளால்
விட்டிட மாட்டேன் கந்தா வீட தருள்வீரே
நடுநெற்றித் தானத்து நானுனைத் தியானிப்பேன்
பிரம மந்திரத்தைப் போதித்து வந்திடுவாய்
கழுமுனை மார்க்கமாய் ஜோதியைக் காட்டிடுவாய்
சிவயோகி யாக எனைச் செய்திடும் குருநாதா
ஆசை அறுத்து அரனடியைக் காட்டிவிடும்
மெய்யடிய ராக்கி மெய்வீட்டில் இருத்திவிடும்
கொங்கு நாட்டிலே கோயில்கொண்ட ஸ்கந்தகுரோ
கொல்லிமலை மேலே குமரகுரு வானவனே
கஞ்சமலை சித்தர் போற்றும் ஸ்கந்தகிரி குருநாதா
கருவூரா போற்றும் காங்கேயா கந்தகுரோ
மருதமலைச் சித்தன் மகிழ்ந்துபணி பரமகுரோ
சென்னி மலைக்குமரா சித்தர்க் கருள்வோனே
சிவபாக்கிய சித்தருனைச் சிவன்மலையில் போற்றுவரே
பழனியில் போகருமே பாரோர் வாழப் பிரதிஷ்டித்தான்
புலிப்பாணி சித்தர்களால் புடைசூழ்ந்த குமரகுரோ
கொங்கில் மலிந்திட்ட ஸ்கந்த குருநாதா
கள்ளம் கபடமற்ற வெள்ளையுள்ளம் அருள்வீரே
கற்றவர் களோடென்னைக் களிப்புறச் செய்திடுமே
உலகெங்கும் நிறைந்திருக்கும் கந்தகுரு உள்ள இடம்
ஸ்கந்தகிரி என்பதைநான் கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்
நால்வர் அருணகிரி நவமிரண்டு சித்தர்களும்
பக்தர்களும் போற்றும் பழனிமலை முருகாகேள்
கொங்குதேசத்தில் குன்றுதோறும் குடிகொண்டோய்
சீலம் நிறைந்த சேலம்மா நகரத்தில்
கன்னிமார் ஓடையின்மேல் ஸ்கந்தகிரி அதனில்
ஸ்கந்தாஸ் ரமத்தினிலே ஞானஸ்கந்த சத்குருவாய்

அமர்ந்திருக்கும் ஜோதியே ஆதிமூலமானகுரோ
அயர்ச்சியை நீக்கிடுவாய் என் தளர்ச்சியை அகற்றிடுவாய்
சுகவனேசன் மகனே சுப்ரமண்ய ஜோதியே
பேரின்ப மகிழ்ச்சியையும் பெருகிடச் செய்திடப்பா
பரமா னந்தமதில் எனைமறக்கப் பாலிப்பாய்
மால் மருகா வள்ளிமணவாளா ஸ்கந்தகுரோ
சிவகுமாரா உன்கோயில் ஸ்கந்தகிரி என்றுணர்ந்தேன்
ஜோதிப் பிழம்பான சுந்தரனே பழனியப்பா
சிவஞானப் பழமான ஸ்கந்த குருநாதா
பழம்நீ என்றதினால் பழனிமலை யிருந்தாயோ
திருவா வினன்குடியில் திருமுருக னானாயோ
குமரா முருகா குருகுகா ஆட்கொண்டாய் தமிழகத்தை
கலியுக வரதனென்று கலசமுனி உனைப் புகழ்ந்தான்
ஔவைக்கு அருள் செய்த அறுமுகவா ஸ்கந்தகுரோ
ஒழுக்கமோடு கருணையும் தவத்தையும் தந்தருள்வாய்
போகருக் கருள்செய்த புவன சுந்தரனே
தண்டபாணித் தெய்வமே தடுத்தாட்கொண்டிடப்பா
ஆண்டிக் கோலத்தில் அணைத்திடுவாய் தண்டுடனே
தெய்வங்கள் போற்றிடும் தண்டாயுத ஜோதியே
ஸ்கந்தகிரி மேலே ஸ்கந்தஜோதி யானவனே
கடைக்கண்ணால் பார்த்திடப்பா கருணையுள்ள ஸ்கந்தகுரோ
ஏழையைக் காத்திடப்பா ஏத்துகிறேன் உன் நாமம்
உன்னையன்றி வேறொன்றை ஒருபோதும் நம்புகிலேன்
கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே
கந்தனென்ற பேர் சொன்னால் கடிதாக நோய் தீரும்
புவனேஸ்வரி மைந்தா போற்றிடுவேன் திருவடியை
திருவடியை நம்பினேன் திருவடி சாக்ஷியாக
புவனமாதா மைந்தனே புண்ணிய மூர்த்தியே கேள்
நின் நாமம் ஏத்துவதே நான் செய்யும் தவமாகும்.
தாத்தமும் பேறவே ஏத்திடுவேன் நின் நாமம்
முருகா முருகாவென்றேமூச் செல்லாம் விட்டிடுவேன்
உள்ளும் புறமும் ஒருமுருகனையே காண்பேன்
அங்கிங் கெனாதபடி எங்குமே முருகனப்பா
முருகன் இலாவிட்டால் மூவுலக மேதப்பா
அப்பப்பா முருகாநின் அருளே உலகமப்பா
அருளெல்லாம் முருகன் அன்பெல்லாம் முருகன்

தாவர சங்கமமாய் ஸ்கந்தனாய் அருவுருவாய்
முருகனாய் முதல்வனாய் ஆனவன் ஸ்கந்தகுரு
ஸ்கந்தாஸ் ரமமிருக்கும் ஸ்கந்தகுரு அடிபற்றிச்
சரணம் அடைந்தவர்கள் ஸாயுஜ்யம் பெற்றிடுவர்
சத்தியம் சொல்கின்றேன் சந்தேகமில்லையப்பா
வேதங்கள் போற்றிடும் வடிவேலன் முருகனை நீ
சந்தேக மில்லாமல் சத்தியமாய் நம்பிடுவாய்
சத்திய மானதெய்வம் ஸ்கந்த குருநாதன்
சத்தியம் காணவே நீ சத்தியமாய் நம்பிடப்பா
சத்தியம் வேறல்ல ஸ்கந்தகுரு வேறல்ல
சத்தியமாய்ச் சொன்னதை சத்தியமாய் நம்பியே
சத்தியமாய் ஞானமாய் சதானந்த மாகிவிடு
அழிவற்ற பிரம்மமாய் ஆக்கிவிடுவான் முருகன்
திருமறைகள் திருமுறைகள் செப்புவதும் இதுவேதான்
ஸ்கந்தகுரு கவசமதை சொந்தமாக்கிக் கொண்டு நீ
பொருளுணர்ந்து ஏத்திடாப்பாளுபொல்லாப்பு வினையகலும்
பிறவிப் பிணியகலும் இமையோருன்னைப் போற்றிடுவர்
மூவருமே முன்னிற்பர் யாவருமே பூஜிப்பர்
அனுதினமும் கவசத்தை அன்புடன் ஏந்திடப்பா
சிரத்தா பக்தியுடன் சிந்தையொன்றிச் செப்பிடப்பா
கவலைய கன்றிடும் கந்தனருள் பொங்கிடுமே
பிறப்பும் இறப்பும் பிணிகளும் தொலைந்திடுமே
கந்தன் கவசமே கவசமென்று உணர்த்திடுவாய்
கவசம் ஏத்துவீரேல் கலியை ஜயித்திடலாம்
கலியென்ற அரக்கனைக் கவசம் விரட்டிடுமே
சொன்னபடி செய்து சுகமடைவாய் மனமே நீ
ஸ்கந்தகுரு கவசத்தைக் கருத்தொன்றி ஏத்துவோர்க்கு
அஷ்டைஸ் வர்யந்தரும் அர்த்தமில்லா இன்பந்தரும்
ஆல்போல் தழை திடுவன் அறுகுபோல் வேரோடிடுவேன்
வாழையடி வாழையைப்போல் வம்சத்தைப் போற்றிடுவேன்
பதினாறும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்திடுவன்
சாந்தியும் சௌக்கியமும் ஸர்வமங்களமும் பெருகிடுமே.

ஸ்கந்தகுரு கவசமிதைக் கருத்திருத்தி ஏற்றுவீரேல்
கர்வம் காமக்ரோதம் கலிதோஷ மகற்றுவிக்கும்
முன்செய்த வினையகன்று முருகனருள் கிட்டிவிடும்
அறம்பொருள் இன்பம்வீடு அதிசுலப மாய்க்கிட்டும்

ஆசாரம் சீலமுடன் ஆதிநே நிஷ்டையுடன்
கள்ளமிலா வுளத்தோடு கந்தகுரு கவசந்தன்னை
திருமுருகன் பக்தியுடன் சிவகுமர னைநினைத்துப்
பாராயணம் செய்வீரேல் பார்க்கலாம் கந்தனையும்

கந்தகுரு கவசமிதை மண்டலம் நிஷ்டையுடன்
பகலிரவு பாராமல் ஒருமனதாய்ப் பகருவீரேல்
திருமுருகன் வேல்கொண்டு திக்குகள் தோறும்நின்று
காத்திடுவான் கந்தகுரு நிச்சயமாய்

ஞான ஸ்கந்தனின் திருவடியை நம்பியே
கந்தகுரு கவசத்தினை ஓதுவதே தவமெனவே
உணர்ந்துகொண்டு ஓதுவையேல் உனக்குப் பெரிதான
இகபர சுகமுண்டாம் என்னாளும் துன்பமில்லை.

துன்பம் அகன்றுவிடும் தொந்தரவு நீங்கிவிடும்
இன்பம் பெருகிவிடும் இஷ்டசித்தி கூடிவிடும்
பிறவிப் பிணியகற்றி பரமநிஷ்டை யும்தந்து
காத்து ரக்ஷிக்கும் கந்தகுரு கவசமே.

கவலையை விட்டுநீ கந்தகுரு கவசமிதை
இருந்தபடியிருந்து ஏத்திவிடு ஏத்தினால்
தெய்வங்கள் தேவர்கள் சித்தர்கள் பக்தர்கள்
போற்றிடுவர் ஏவலுமே புரிந்திடுவர் நிச்சயமாய்

ஸ்கந்தகுரு கவசம் சம்சயப் பேயோட்டும்
அஞ்ஞானமும் அகற்றி அருள் ஒளியும் காட்டும்
ஞான ஸ்கந்தகுரு நானென்று முன்நிற்பன்
உள்ளொளி யாயிருந்து உன்னிலவ னாகிடுவன்

தன்னில் உனைக்காட்டி உன்னில் தனைக்காட்டி
எங்கும் தனைக்காட்டி எங்குமுனைக் காட்டிடுவன்
ஸ்கந்தஜோதி யானகந்தன் கந்தகிரி யிருந்து
தண்டாயுதம் தாங்கித் தருகிறான் காட்சியுமே

கந்தன் புகழ்பாடக் கந்தகிரி வாருமினே
கந்தகிரி வந்துநிதம் கண்டுய்ம்மின் ஜகத்தீரே
கலிதோஷ மகற்றுவிக்கும் கந்தகுரு கவசமிதை
பாராயணம் செய்து பாரில் புகழ்பெறுமின்.

கந்தகுரு கவசபலன் பற்றறுத்துப் பரம் கொடுக்கும்
ஒருதரம் கவசமோதின் உள்ளுழுக்குப் போகும்
இருதரம் ஏத்துவிரேல் எண்ணியதெலாம் கிட்டும்
மூன்றுதர மோதின் முன்னிற்பன் ஸ்கந்தகுரு
நான்முறை யோதி தினம் நல்லவரம் பெறுவீர்
ஐந்துமுறை தினமோதி பஞ்சாக்ஷரம் பெற்று
ஆறு முறையோதி ஆறுதலைப் பெற்றிடுவீர்
ஏழுமுறை தினமேத்தின் எல்லாம் வசமாகும்
எட்டுமுறை ஏத்தில் அட்டமா ஸித்திகிட்டும்
ஒன்பது தரமோதின் மரண பயமொழியும்
பத்துதர மேத்திநித்தம் பற்றறுத்து வாழ்வீரே
கன்னிமார் ஓடையிலே நீராடி நீறுபூசிக்
கந்தகுரு கவசமோதி கந்தகிரி ஏறிவிட்டால்
முந்தை வினையெல்லாம் கந்தன் அகற்றிடுவான்
நிந்தைகள் நீங்கிவிடும் நிஷ்டையுமே கைகூடும்
கன்னிமார் ஓடைநீரைக் கைகளிலே நீ எடுத்துக்
கந்தனென்ற மந்திரத்தைக் கண்மூடி யுரு வேற்றி
உச்சியிலும் தெளித்து உட்கொண்டு விட்டால் உன்
சித்த மலம் ஒடுக்கும் சித்தசுத்தியும் கொடுக்கும்
கன்னிமார் தேவிகளைக் கன்னிமார் ஓடையிலே
கண்டு வழிபட்டு கந்தகிரி யேறிடுவர்
கந்தகிரி யேறிஞான ஸ்கந்தகுரு கவசமதை
பாராயணம் செய்துலகில் பாக்யமெலாம் பெற்றிடுவீர்.

# ஸ்கந்த அஷ்டோத்தர சதநாமார்ச்சனை

ஓம் ஸ்கந்தாய நம:
ஓம் குஹாய நம:
ஓம் ஷண்முகாய நம:
ஓம் பாலநேத்ர ஸுதாய நம:
ஓம் ப்ரபவே நம:
ஓம் பிங்கலாய நம:
ஓம் கிருத்திகா ஸுநவே நம:
ஓம் ஸிகி வாஹநாய நம:
ஓம் த்விஷட்புஜாய நம:
ஓம் த்விஷண்ணேத்ராய நம: 10

ஓம் ஸக்திதராய நம:
ஓம் பிஸிதாஸாய நம:
ஓம் ப்ரபஞ்சநாய நம:
ஓம் தாரகாஸுர ஸம்ஹாராய நம:
ஓம் ரக்ஷோபலவிமர்த்தநாய நம:
ஓம் மத்தாய நம:
ஓம் ப்ரமத்தாய நம:
ஓம் உந்மத்தாய நம:
ஓம் ஸுரஸைந்ய ஸுரக்ஷகாய நம:
ஓம் தேவ ஸேநாபதயே நம: 20
ஓம் ப்ராக்ஞாய நம:
ஓம் க்ருபாளவே நம:
ஓம் பக்தவத்ஸலாய நம:
ஓம் உமாஸுதாய நம:
ஓம் ஸக்தி தராய நம:
ஓம் குமாராய நம:
ஓம் க்ரௌஞ்சதாரணாய நம:
ஓம் ஸேநாநயே நம:
ஓம் அக்நி ஜந்மநே நம:
ஓம் விஸாகாய நம: 30
ஓம் ஸங்கராத்மஜாய நம:
ஓம் ஸிவ ஸ்வாமினே நம:

ஓம் கணஸ்வாமியே நம:
ஓம் ஸர்வஸ்வாமிநே நம:
ஓம் ஸநாதநாய நம:
ஓம் யஸக்தவே நம:
ஓம் அசேஷாப்யாய நம:
ஓம் பார்வதீப்ரிய நந்த நாய நம:
ஓம் கங்கா ஸுதாய நம:
ஓம் ஸரோத் பூதாய நம: 40
ஓம் ஆஹுதாய நம:
ஓம் பாவக ஆத்மஜாய நம:
ஓம் ஜ்ரும்பாய நம:
ஓம் ப்ரஜ்ரும்பாய நம:
ஓம் உஜ்ஜ்ரும்பாய நம:
ஓம் கமலாஸநஸம்ஸ்துதாய நம:
ஓம் ஏகவர்ணாய நம:
ஓம் த்விவர்ணாய நம:
ஓம் த்ரிவர்ணாய நம:
ஓம் ஸுமநோஹராய நம 50
ஓம் சதுர்வர்ணாய நம:
ஓம் பஞ்ச வர்ணாய நம:
ஓம் ப்ரஜாபதயே நம:
ஓம் அஹஸ்பதயே நம:
ஓம் அநிகர்பாய நம:
ஓம் ஸமீகர்பாய நம:
ஓம் விஸ்வரேதஸே நம:
ஓம் ஸுராரிக்நே நம:
ஓம் ஹரித்வர்ணாய நம:
ஓம் ஸுப கராய நம: 60
ஓம் வாஸவாய நம:
ஓம் வடுவேஷ் ப்ருதே நம:
ஓம் பூஷ்ணே நம:
ஓம் கபஸ்தயே நம:
ஓம் கஹநாய நம:
ஓம் சந்த்ர வர்ணாய நம:

ஓம் கலாதராய நம:
ஓம் மாயாதராய நம:
ஓம் மஹாமாயிநே நம:
ஓம் கைவல்யாய நம: 70
ஓம் ஸங்கராத்மஜாய நம:
ஓம் விஸ்வயோநயே நம:
ஓம் அமேயாத்மநே நம:
ஓம் தேஜோநிதயே நம:
ஓம் அநாமயாய நம:
ஓம் பரமேஷ்டிநே நம:
ஓம் பரப்ரஹ்மனே நம:
ஓம் வேதகர்பாய நம:
ஓம் விராட்ஸுதாய நம:
ஓம் புளிந்தகந்யாபர்த்ரே நம: 80
ஓம் மஹாஸாரஸ்வத வ்ரதாய நம:
ஓம் ஆஸ்ரிதா கிலதாத்ரே நம:
ஓம் சோரக்நாய நம:
ஓம் ரோகநாஸநாய நம:
ஓம் அநந்த மூர்த்தயே நம:
ஓம் ஆநந்தாய நம:
ஓம் ஸிகண்டிக்ருதகேதநாய நம:
ஓம் டம்பாய நம:
ஓம் பரம டம்பாய நம:
ஓம் மஹா டம்பாய நம: 90
ஓம் வ்ருஷாகபயே நம:
ஓம் காரணோபாத்ததேஹாய நம:
ஓம் காரணாதீத விக்ரஹாய நம:
ஓம் அநீஸ்வராய நம:
ஓம் ம்ருதாம்ருதாய நம:
ஓம் ப்ராணாய நம:
ஓம் ப்ராணாயாம பராயணாய நம:
ஓம் விருத்த ஹந்த்ரே நம:
ஓம் வீரக்நாய நம:
ஓம் ரக்தஸ்யாமகலாய நம: 100

ஓம் மஹதே நம:
ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:
ஓம் குஹப்ரீதாய நம:
ஓம் ப்ரஹ்மண் யாய நம:
ஓம் ப்ராஹ்மண ப்ரியாய நம:
ஓம் வம்ஸவ்ருத்தி கராய நம:
ஓம் வேதவேத்யாய நம:
ஓம் அக்ஷயபலப்ரதாய நம:
ஸுப்ரஹ்மண்ய ஸதநாமாவளி: ஸம்பூர்ணம்.

## குமாரஸ்தவம்

ஓம் ஆறுமுகத் தலைவனே போற்றி போற்றி
ஓம் ஆறு வகைச் சமயங்களின் தலைவனே போற்றி போற்றி
ஓம் ஆறு கழுத்துக்களையுடைய தலைவனே போற்றி போற்றி
ஓம் ஆறு கீரீடங்களை அணிந்துள்ள தலைவனே போற்றி போற்றி
ஓம் ஆறுகோண சக்கரத்தில் எழுந்தருளியுள்ள தலைவனே போற்றி போற்றி
ஓம் ஆறு தோத்திர நூல்களின் தலைவனே போற்றி போற்றி
ஓம் ஒன்பது வகை நிதிகளின் தலைவனே போற்றி போற்றி
ஓம் பேரின்ப முக்தி நிலையத் தலைவனே போற்றி போற்றி
ஓம் மன்னர் தலைவனே போற்றி போற்றி
ஓம் தேவர்களுடைய தலைவனே போற்றி போற்றி
ஓம் கூத்தபிரானான ஆறுமுகச் சிவனே போற்றி
ஓம் ஆறு எழுத்துடைய தலைவனே போற்றி போற்றி
ஓம் கவிராஜ தலைவனே போற்றி போற்றி
ஓம் தவம்புரிவோருக்கு அரசான தலைவனே போற்றி போற்றி
ஓம் இம்மைக்கும் மறுமைக்கும் தலைவனே போற்றி போற்றி
ஓம் திருப்புகழ் அருளிய அருணகிரியாரின் தலைவனே போற்றி போற்றி
ஓம் வெற்றி மிகுந்த தலைவனே போற்றி போற்றி
ஓம் நயமாகச் செய்யும் தலைவனே போற்றி போற்றி
ஓம் அழகு வடிவான தலைவனே போற்றி போற்றி
ஓம் தெய்வயானை அம்மையின் தலைவனே போற்றி போற்றி
ஓம் வள்ளி அம்மையின் தலைவனே போற்றி போற்றி

ஓம் மல்யுத்தத்தில் வலிமையுடைய தலைவனே போற்றி போற்றி
ஓம் வேல் முதலான தெய்வப்படைகளின் தலைவனே போற்றி போற்றி
ஓம் கைவிடாப் படைகளின் தலைவனே போற்றி போற்றி
ஓம் சஷ்டிதிதியின் கந்த விரதத் தலைவனே போற்றி போற்றி
ஓம் யாகத் தலைவனே போற்றி போற்றி
ஓம் பேதமற்ற தலைவனே போற்றி போற்றி
ஓம் மெய்யுணர்வு அருளும் தலைவனே போற்றி போற்றி
ஓம் படைகளின் அணிவகுப்புத் தலைவனே போற்றி போற்றி
ஓம் மயூர நாதனே போற்றி போற்றி
ஓம் பூதங்களின் தலைவனே போற்றி போற்றி
ஓம் வேதங்களின் தலைவனே போற்றி போற்றி
ஓம் புராணங்களின் தலைவனே போற்றி போற்றி
ஓம் உயிர்களுக்கெல்லாம் தலைவனே போற்றி போற்றி
ஓம் அடியார்களுக்கு தலைவனே போற்றி போற்றி
ஓம் முக்தி அளிக்கும் தலைவனே போற்றி போற்றி
ஓம் அகரத்துக்கு தலைவனே போற்றி போற்றி
ஓம் உகரத்துக்கு தலைவனே போற்றி போற்றி
ஓம் மகாரத்துக்கு தலைவனே போற்றி போற்றி

(ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் புரியும் அயன், அரன், அரி ஆகிய மும்மூர்த்திகளையும் உணர்த்துவோன் முருகனே என்று பொருள்).

ஓம் எங்கும் தலைவனே போற்றி போற்றி

## சண்முக நாமாவளி

வேல்முருகா மால்மருகா வாவா சண்முகா
கால்பிடித்தேன் காத்தருள வாவா சண்முகா

நால்வேதப் பொருளானாய் நாதா சண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா சண்முகா
செல்லமாகச் சிவை அணைக்கும் சேயே சண்முகா
செங்கதிர் வேல் தாங்கிஎன் தேவா சண்முகா (வேல்)

ஆறுபடை வீடுடைய ஆண்டவா சண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா சண்முகா
தேறுதலைத் தருபவனே தேவா சண்முகா
சிங்கார ஓங்கார சீலனே சண்முகா (வேல்)

நாறுமாலை அணிமார்பா நாயகா சண்முகா
நால்வேதப் பொருளான நாயகா சண்முகா
ஏறுமயில் வாகனனே ஏந்தலே சண்முகா
நீறணிந்தார் வினைபோக்கும் நீதனே சண்முகா (வேல்)

பாடும்பணி தந்திடுவாய் பண்டிதர் சண்முகா
பக்தருடன் கூட்டிடுவாய் முக்தனே சண்முகா
ஆடும்சேவற் கொடியழகா ஆண்டவா சண்முகா
அடியாருள்ளக் குகையமர்ந்த ஆனந்தா சண்முகா (வேல்)

வீடும் நாடும் நின் திருத்தாள் வேண்டினேன் சண்முகா
வீரன் சூரன் உடல் கிழிந்த வேலனே சண்முகா
ஓடும் மனம் உன்னை நாட ஆடிவா சண்முகா
ஒருவனே என் வினையழித்த உத்தமா சண்முகா (வேல்)

எல்லையில்லா ஆனந்தனே ஏகாந்தா சண்முகா
எங்கும் நிறை அன்புருவே என்முருகா சண்முகா
தில்லையிலே ஆடும்தேவி பாலகா சண்முகா
திருட்டுத்தனமாய்க் குறக்கொடியைக் கொண்டவா சண்முகா
(வேல்)

தொல்லை எலாங் கடந்தபதம் தந்திடுவாய் சண்முகா
தோத்தரித்தோம் எங்கள் முன்னேவந்திடாய் சண்முகா
கல்லையொத்த மனமுருகக் கருணைசெய் சண்முகா
கல்லெனச்சிலம் பொலிக்க ஓடிவா சண்முகா (வேல்)

# முருக நாமாவளி

| | |
|---|---|
| அன்பருக்கு அன்பனே நீ | வா வா முருகா |
| ஆறுபடை வீடுடையாய் | வா வா முருகா |
| இன்பமய சோதியே நீ | வா வா முருகா |
| ஈசனுமை பாலகனே | வா வா முருகா |
| உலக நாதன் மருகனே நீ | வா வா முருகா |
| ஊமைக் கருள் புரிந்தவனே | வா வா முருகா |
| எட்டுக்குடி வேலவா நீ | வா வா முருகா |
| ஏறுமயில் ஏறிவா நீ | வா வா முருகா |
| ஐங்கரனுக் கிளையவனே | வா வா முருகா |
| ஆறுமுக வேலவனே | வா வா முருகா |
| ஒய்யாரி வள்ளி லோலா | வா வா முருகா |
| ஓங்காரத் தத்துவமே | வா வா முருகா |
| ஔவைக் குபதேசித்தவா | வா வா முருகா |
| அகில லோக நாயகனே | வா வா முருகா |
| ஓடிவா நீ ஓடிவா நீ | வா வா முருகா |
| ஆடிவா நீ ஆடிவா நீ | வா வா முருகா |

## பச்சைமா மலைபோல் மேனி

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்க் கமலச்செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தம் கொழுந்தே இன்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே
கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோனணி அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே.

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே.

## ஜெய ரகுபதி ராமர்

ஜெய ரகுபதி ராமா ஜெய புகழ் பரந்தாமா
மனமிரங்காயோ சுவாமி வரம் தருவாயோ //

சங்கு வாகனா நீ வந்தருள்வாயே
ஜென்ம நிலை பாவமெல்லாம் போக்கிடுவாயே
பண்டரி நாதனே இராமா இராம ஜெயம் அறிவோமா
சீவினைப் போக்கிடுவாய் என்னையேன் சீவினைப் போக்கிடுவாய்
(ஜெய ரகுபதி ராமா)

நீலவண்ணமே வைகுந்த வாசனே
ஆதி மூலமே கைலாச வாசனே
பத்தொன்பதாம் நூற்று தொண்ணூற்று ஒன்பது
பகலும் மார்கழி மாதம்

சித்த முனிவர்கள் அத்தி செய்யும் எங்கள் தேசிக மலர்ப்பாதம்
(சீவினைப் போக்கிடுவாய்)

பச்சை மேனி என் ராமர் மச்சை உதாரன்
எங்கும் நிறைந்தவன் என் ராமன் பரம தயாளன்
(ஜெய ரகுபதி ராமா)

## கண்ணன் பாடல்

கோகுலத்திலே வளர்ந்தாய் கண்ணா கண்ணா
ஆகுலம் தவிர்க்க வந்தாய் கண்ணா கண்ணா
யோகு செய்யும் சிந்தையர் கண்ணா கண்ணா
நோகுமுன் களைவாய் துயர் கண்ணா கண்ணா

அஞ்ச லென்றே யுரைப்பாய் கண்ணா கண்ணா
சஞ்சலமே தீர்த்து வைப்பாய் கண்ணா கண்ணா
பஞ்சைப் போல் உள்நினைப்பாய் கண்ணா கண்ணா
தஞ்ச மென்றே என்னைவைப்பாய் கண்ணா கண்ணா

தேவர்களும் இன்புறவே கண்ணா கண்ணா
தவசியர் குறையறவே கண்ணா கண்ணா
தேவகியின் அன்புருவே கண்ணா கண்ணா
அவனியின் சத்குருவே கண்ணா கண்ணா

இன்பமனம் கோகுலமே கண்ணா கண்ணா
அன்பருள்ளம் கோகுலமே கண்ணா கண்ணா
தூயமனம் கோகுலமே கண்ணா கண்ணா
சேயருள்ளம் கோகுலமே கண்ணா கண்ணா

♦♦♦♦

கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார்மேக வண்ணனாம்
வெண்ணெய் உண்ட கண்ணனாம்
மண்ணை உண்ட கண்ணனாம்

குழலினாலே மாடுகள்
கூடச் செய்த கண்ணனாம்
கூட்ட மாகக் கோபியர்
கூட ஆடும் கண்ணனாம்

மழைக்கு நல்ல குடையென
மலை பிடித்த கண்ணனாம்
நச்சுப் பாம்பு மீதிலே
நடன மாடும் கண்ணனாம்

கொடுமை மிக்க ஹம்சனைக்
கொன்று வென்ற கண்ணனாம்
தூது சென்ற பாண்டவர்
துயரம் தீர்த்த கண்ணனாம்

# ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ, நேரிழையீர்
சீர்மல்கும் ஆயர்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,
ஏரார்ந்த கன்னி யசோதை இளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே, நமக்கே பறைதருவான்,
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். 1

வையத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்குச்
செய்யுங் கிரிகைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்யுண்ணோம், பாலுண்ணோம் நாட்காலை நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். 2

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். 3

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,
தாழாதே சாரங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 4

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை,
தூய பெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை,
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசுஆகும் செப்பேலோ ரெம்பாவாய். 5

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு,
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி,
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை,
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 6

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்தத் தயிரரவம் கேட்டிலையோ
நாயகப் பெண்பிள்ளாய் நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ
தேசமுடையாய் திறவேலோ ரெம்பாவாய். 7

கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்றோம், கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 8

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய,
தூமங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமன் மகளே மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர் அவளை எழுப்பீரோ உம்மகள்தான்
ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன், மாதவன், வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். 9

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கர்ணனும்
தோற்றம் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ
ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலா ரெம்பாவாய். 10

கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்
குற்றம் ஒன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே புற்று அரவு
அல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்து தோழிமார் எல்லாரும் வந்து நின் முற்றம் புகுந்து
முகில் வண்ணன் பேர் பாட
சிற்றாதே பேசாதே செல்வ பெண்டாட்டி நீ எற்றுக்கு உறங்கும்
பொருளேலோ எரெம்பாவாய் 11

கனைத்து இளம் கற்றெருமை கன்றுக்கு இரங்கி
நினைத்து முலை வழியே நின்று பால் சோர
நனைத்து இல்லம் சேறாக்கும் நற் செல்வன் தங்காய்
பனித் தலை வீழ நின் வாசற் கடை பற்றிச்
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானைப் பாடவும் நீ வாய் திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேர் உறக்கம்
அனைத்து இல்லத்தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய் 12

புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்ப்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பின காண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ. பாவாய். நீ நன் நாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். 13

உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண்
செங்கற் பொடிக் கூரை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதன்றார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். 14

எல்லே. இளம் கிளியே இன்னம் உறங்குதியோ
சில் என்று அழையேன் மின் நங்கையீர் போதருகின்றேன்
வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன் வாய் அறிதும்
வல்லீர்கள் நீங்களே நானே தான் ஆயிடுக
ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்து எண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். 15

நாயகனாய் நின்ற நந்தகோபன் உடைய
கோயில் காப்பானே. கொடி தோன்றும் தோரண
வாயில் காப்பானே. மணிக் கதவம் தாள் திறவாய்
ஆயர் சிறுமியரோமுக்கு அறை பறை
மாயன் மணி வண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயில் எழப் பாடுவான்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா. நீ
நேய நிலைக் கதவம் நீக்கேலோர் ரெம்பாவாய். 16

அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய்
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே குல விளக்கே
எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்
அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகு அளந்த
உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்
செம் பொற் கழலடிச் செல்வா பலதேவா
உம்பியும் நீயுன் உறங்கேலோ ரெம்பாவாய். 17

உந்து மத களிற்றன் ஓடாத தோள் வலியன்
நந்தகோபன் மருமகளே நம்பிள்ளாய்
கந்தம் கமழும் குழலி கடை திறவாய்
வந்து எங்கும் கோழி அழைத்தன காண் மாதவிப்
பந்தல் மேல் பல் கால் குயிலினங்கள் கூவின காண்
பந்து ஆர் விரலி உன் மைத்துனன் பேர் பாடச்
செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 18

குத்து விளக்கெரிய கோட்டுக் கால் கட்டில் மேல்
மெத்தென்ற பஞ்சயனத்தின் மேல் ஏறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பினை கொங்கை மேல்
வைத்துக் கிடந்த மலர் மார்பா வாய் திறவாய்
மைத் தடம் கண்ணினாய் நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய் காண்
எத்தனையேலும் பிரிவு ஆற்றகில்லாயால்
தத்துவம் அன்று தகவேலோ ரெம்பாவாய். 19

முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே துயில் எழாய்
செப்பம் உடையாய் திறல் உடையாய் செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா துயில் எழாய்
செப்பென்ன மென் முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயில் எழாய்
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். 20

ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே அறிவுறாய்
ஊற்றம் உடையாய் பெரியாய் உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே துயில் எழாய்
மாற்றார் உனக்கு வலி தொலைந்து உன் வாசற் கண்
ஆற்றாது வந்து உன் அடி பணியுமாற் போலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். 21

அம் கண் மா ஞாலத்து அரசர் அபிமான
பங்கமாய் வந்து நின் பள்ளிக் கட்டிற் கீழே
சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப் போலே
செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ
திங்களும் ஆதித்தனும் எழுந்தாற் போல்
அம் கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்
எங்கள் மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். 22

மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்காசனத்து இருந்து யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோ ரெம்பாவாய். 23

அன்று இவ் உலகம் அளந்தாய் அடி போற்றி
சென்றங்குத் தென் இலங்கை செற்றாய் திறல் போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி
கன்று குணில் ஆவெறிந்தாய் கழல் போற்றி
குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி
என்றென்றும் உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய். 24

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே., உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 25

மாலே. மணிவண்ணா. மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப் பாடுடையனவே
சாலப் பெரும் பறையே பல்லாண்டு இசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலின் இலையாய் அருளேலோ ரெம்பாவாய். 26

கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா உந்தன்னைப்
பாடிப் பறை கொண்டு யாம் பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள் வளையே தோடே செவிப் பூவே
பாடகமே என்றனைய பலகலனும் யாம் அணிவோம்
ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற் சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழி வாரக்
கூடி இருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 27

கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம்
அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க் குலத்து உந்தன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்
குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா உந்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உந்தன்னை
சிறு பேர் அழைத்தனமும் சீறி அருளாதே
இறைவா நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். 28

சிற்றம் சிறு காலே வந்து உன்னை சேவித்து உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்று ஏவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். 29

வங்கக் கடல் கடைந்த மாதவனை கேசவனை
திங்கள் திருமுகத்து சேய் இழையார் சென்று இறைஞ்சி
அங்கப் பறை கொண்ட ஆற்றை அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர் பிரான் கோதை
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமற் சொன்ன
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரை தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவ ரெம்பாவாய். 30

## ஆஞ்சநேய நாமாவளி

ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
மாருதி ராயா ஜய ஹனுமான்
ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
வாயு குமாரா ஜய ஹனுமான்
ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
அஞ்ஜனை புத்ரா ஜய ஹனுமான்
ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
ஸ்ரீராம தூதா ஜய ஹனுமான்
ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
மஹானு பாவா ஜய ஹனுமான்



## நாமாவளி

அஞ்சனை செல்வ போற்றி
அநும! எம் ஐய போற்றி
நெஞ்சினில் இராம நாமம்
நிறைந்திடும் நமல போற்றி
சஞ்சலம் தவிர்ப்பாய் போற்றி
சற்குரு நாதா போற்றி
தஞ்சமென் றடைந்த பேரை
முப்போதும் காப்பாய் போற்றி

## விருத்தம்

அஞ்சிலே ஒன்று பெற்றான்
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றா றாக
ஆருயிர் காக்க ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான்
அவன்எம்மை அளித்துக் காப்பான்.

## ஸ்லோகம்

ராம ராம நமோஸ்துதே
ஜெய ராம பத்ரா நமோஸ்துதே
ராம ராம நமோஸ்துதே
ஜெய வீர ராம நமோஸ்துதே
ஆஞ்சநேய நமோஸ்துதே ஜெய
வைண தேய நமோஸ்துதே

## நாமாவளி

ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெய ஜெய ராம் ஓம்

## நாமாவளி

ஜெய அநுமான் ஜெய அநுமான்
மாருதி ராய ஜெய அநுமான்
அஞ்சலி புத்ர ஜெய அநுமான்
அதிபலவந்தா ஜெய அநுமான்
ராமதூதா ஜெய அநுமான்
வாயு குமார ஜெய அநுமான்
வானர வீரா ஜெய அநுமான்
மகானுபாவா ஜெய அநுமான்

## நாமாவளி

ராம லட்சுமண ஜானகி ஜெய்போலோ அனுமானுகி
நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராம வென்றிரண்டெழுத்தினால்!

அந்திமாலை உச்சிமூன்றும், ஆடுகின்ற தீர்த்தமும்
சந்தி தர்ப்பணங்களும் தபங்களும், செபங்களும்
சிந்தை மேவு ஞானமும் தினம் செபிக்கும் மந்திரம்
எந்தை ராம ராம ராம வெனும் நாமமே!
கார கார கார கார காவல் ஒழி காவலன்
போர போர போர போர போரில் நின்றபுண்ணியன்
மார மார மார மார மார மரங்களேழும் எய்தஸ்ரீ
ராம ராம ராம ராம ராம என்னும் நாமமே.

## ஸ்ரீ ஹனுமந்த்யான மந்திரம்

ஓம் நமோ ஹரி ராம தூத ஆஞ்சநேய
அதிபல பராக்கிரமா சூரா அண்டரண்ட பகிரண்ட
சண்டப் பிரசண்ட உத்தண்ட கோராகிலா

அகோர சத்ரு சம்ஹாரா வரமருள் க்ருபாகரா!
தயாளா சிவசிவ யோக ஜனப்பிரியா!
வாயுகுமாரா சீதாலெக்ஷ்மிஸீத ஸுதா! சாயப்
பராக்கிரம விஸ்வரூபா!
ஓம் கால ஆங்கார ஹரிம்காரா, சஞ்சீவிராயா! சர்வ மோட்சா!

கரணா, சமஸ்ர நாம அலங்கிருத பூஷணா
ப்ரும்ம, வரப்பிரகாச நீக்ஷலா பிருண்டகால ருத்ரா
அம்ருத் கலைஞான, பரமாதமா பாப விமோசனா
பம் பம் பம் ரரர ரிரிரி நமசி வாய ஹனுமந்த
மம வசி வசி ஸ்வாஹா!
ஓம் பூர் புவஸ் ஸ்வாஹா ஓம் தத்ஸ விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ஸ தீமஹிதீ யோ யோன பிரசோதயாத்

## ஹனுமான்

ஜெயஹனுமான் ஜெயஹனுமான் மாருதிராயா (ஜெயஹனுமான்)
ஜெயஹனுமான் ஜெயஹனுமான் ராமதூதா (ஜெயஹனுமான்)

வானரவீரா வாயுகுமாரா மகானுபாவா ஹனுமந்தா
ஹனுமந்தா ஹனுமந்தா அஞ்சனைபுத்ரா ஹனுமந்தா
ஹனுமந்தா ஹனுமந்தா ஆஞ்சநேயா ஹனுமந்தா
ராமலக்ஷ்மண ஜானகி ஜெய்போலோ ஹனுமானுகி ஜெய்!

ஜெய் வீரதீரசூர ஹனுமந்தனுக்கு ஜெய்!

## அஞ்சநேய மூர்த்தி

ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்திக்கு - ஜெய்
ஓம் வீர பராக்கிரம ஆஞ்சநேய ஸ்வாமிகி - ஜெய்
ஜானகி காந்தஸ்மரணம் ஜெய் ஜெய் ராம ராம்
ஸ்ரீ ராஜா ராம சந்தர மூர்த்திக்கு - ஜெய்
ஓம் சீதா லக்ஷமண பரத சத்ருக்ன ஹனுமத்
சமேத ஸ்ரீ ராம சந்தர மூர்த்திக்கு - ஜெய்

## காயத்ரி

ஓம் தத் புருஷாய வித்மஹே
வாயு புத்ராய தீமஹி
தன்னோ மாருதிப் ப்ரசோதயாத்!



# ஐயப்பன் 108 சரணங்கள்

| | | |
|---|---|---|
| ஓம் | கன்னிமூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அன்னதான பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆபத்தில் காப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இன்தமிழ்ச் சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உண்மைப் பரம் பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊழ்வினை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எங்கள் குலதெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏழைப் பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐயமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒளிதரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓங்காரப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஔடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கலியுக வரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவன்மால் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவவைணவ ஐக்கியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அச்சங் கோயில் அரசே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆரியங்காவு ஐயாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குளத்துப் புழைப் பாலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பொன்னம்பல வாசனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வில்லாளி வீரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வீரமணி கண்டனே | சரணம் ஐயப்பா |

| | | |
|---|---|---|
| ஓம் | உத்தரத்தில் உதித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்தமனே சத்தியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பையிலே பிறந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பந்தள மாமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சகலகலை வல்லோனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சாந்தம் நிறை மெய்ப்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருமகனின் குறை தீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருதட்சணை அளித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | புலிப்பாலைக் கொணர்ந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வன்புலியின் வாகனனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தாயின் நோய் தீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருவின் குருவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வாபரின் தோழனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | துளசிமணி மார்பனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தூயவுள்ளம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இருமுடிப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எருமேலி சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நித்திய பிரம்மச்சாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நீலவஸ்திர தாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேட்டை துள்ளும் பேரருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பெரும் ஆணவத்தை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சாஸ்தாவின் நந்தவனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சாந்திதரும் பேரழகே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேரூத்தோடு தரிசனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேதமையை ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காளை கட்டி நிலையமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அதிர்வேட்டுப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அழுதமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆனந்தமிகு பஜனைப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கல்லிடும் குன்றே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உடும்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இஞ்சிப்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரியிலந் தோடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரிமலை இறக்கமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பெரியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிறியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பா நதி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |

| | | |
|---|---|---|
| ஓம் | பாவமெல்லாம் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | திருவேணி சங்கமமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஸ்ரீ இராமர் பாதமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சக்தி பூஜை கொண்டவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிக்கு அருள் செய்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தீப ஜோதித் திரு ஒளியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தீராத நோய் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பா விளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பழவினைகள் ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தென்புலத்தார் வழிபாடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | திருபம்பையின் புண்ணியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நீலிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நிறைவுள்ளம் தருபவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அப்பாச்சி மேடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இப்பாச்சிக் குழியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிபீடமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சரங்குத்தி ஆலே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உரல்குழி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கருப்பண்ண சுவாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கடுத்த சுவாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பதினெட்டாம் படியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பகவானின் சந்நிதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பரவசப் பேருணர்வே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பசுவின் நெய் அபிஷேகமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கற்பூரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நாகராசப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மாளிகைப் புறத்தம்மனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மஞ்சமாதா திருவருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அக்னிக் குண்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அலங்காரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பஸ்மக் குளமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சற்குரு நாதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மகரஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மங்கள மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஸ்வாமியே | சரணம் ஐயப்பா |

சாமியே சரணம் ஐயப்பா

# ஐயப்பன் கவசம்

## காப்பு

அரிஹர புத்திரனை, ஆனந்த ரூபனை
இருமூர்த்தி மைந்தனை,ஆறுமுகன் தம்பியை
சபரி கிரீசனை, சாந்த சொரூபனை
தினம் தினம் போற்றிப் பணிந்திடு வோமே.

ஐயப்ப தேவன் கவசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினம் தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே.

## நூல்

மண்ணுல கெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக
புலி வாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக
பூத நாயகா வருக வருக
புஷ்களை பதியே வருக வருக
பொன்னம் பலத் துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக
வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக
ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனையாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக

பதினெண்படியை மனதில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே.
சபரிகிரீசனை நினைத்தே நீறிடத்
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர்கள் எல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடிபணிந் தேத்துவர்
சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்

## வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க
இருமூர்த்தி மைந்தன் என் இருசெவி காக்க
வாபரின் தோழன் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முகன் பூஜ்யன் நாவினைக் காக்க
கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களைக் காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையைக் காக்க
வீரமணிகண்டன் விரல்களைக் காக்க
மணிகண்ட தேவன் மார்பினைக் காக்க
கயிலை மைந்தன் கைகளைக் காக்க
மணிகண்டதேவன் மார்பினைக் காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க

முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப்பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்களைக் காக்க
தர்ம சாஸ்தா துடையினைக் காக்க
முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜயகுமாரன் விரல்களைக் காக்க
அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
கட்டாளரூபி காலையில் காக்க
நவக்கிரஹநாதன் நடுப்பகல் காக்க
மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க
அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்புறம் காக்க
காக்கக் காக்கக் கருணையால் காக்க
பார்க்கப் பார்க்க என் பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழிந்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க
கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலைதனைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திடக் கருணை புரிவாய்
பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய்ப் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய்
வாதம் பித்தம் சிலேட்சுமத் துடனே
வாந்தியும் பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணு காமல்
என்றுமே காப்பாய் எருமேலி தேவா
கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்

நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனதுடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரி கிரீசா
காமம், குரோதம், லோபம், மோஹம்
மதமாச்சர்யமெனும் ஐம்பெரும் பேய்கள்
என்றுமே என்னை அணுக விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய்
சூது, பொறாமை, பொய், கோபமில்லாமல்
சோரம், லோபம், துன்மார்க்கம் கல்லாமல்
வேத நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணிகண்டா வரமெனக் கருள்வாய்
மூப்பும், பிணியும் வறுமையும், பசியும்
வந்தெனை வாட்டி வதைசெய் யாமல்
உள்ளன் புடனே உன் திரு நாமம்
அனுதினம் சொல்ல அருள் தருவாயே.

## நமஸ்ஹாரம்

அரிஹர புத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ
பொன்னம் பலத்துறை புண்ணியா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்ணியா நமோ நமோ
சுரிகா யுதமுடைச் சுந்தரா நமோ நமோ
மஹிஷி மர்த்தனா மணிகண்டா நமோ
சரணம் சரணம் சபரிகிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்

# வழிநடைச் சரணம்

| | | |
|---|---|---|
| சாமியே | - | ஐயப்போ |
| ஐயப்போ | - | சாமியே |
| சாமி சரணம் | - | ஐயப்ப சரணம் |
| ஐயப்ப சரணம் | - | சாமி சரணம் |
| பள்ளிக்கட்டு | - | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | - | பள்ளிக்கட்டு |
| கல்லும் முள்ளும் | - | காலுக்கு மெத்தை |
| காலுக்கு மெத்தை | - | கல்லும் முள்ளும் |
| குன்றும் குழியும் | - | கண்ணுக்கு வெளிச்சம் |
| கண்ணுக்கு வெளிச்சம் | - | குன்றும் குழியும் |
| ஏத்தி விடப்பா | - | தூக்கி விடப்பா |
| தூக்கி விடப்பா | - | ஏத்தி விடப்பா |
| சாமியே | - | ஐயப்போ |
| ஐயப்போ | - | சாமியே |
| வில்லாளி வீரனே | - | வீரமணிகண்டனே |
| வீரமணிகண்டனே | - | வில்லாளி வீரனே |
| ராஜாதி ராஜனே | - | ராஜகுமாரனே |
| ராஜகுமாரனே | - | ராஜாதி ராஜனே |
| பூலோக நாதனே | - | பூமிப்பிரபஞ்சனே |
| பூமிப்பிரபஞ்சனே | - | பூலோக நாதனே |
| யாரைக் காண | - | சாமியைக் காண |
| சாமியைக் கண்டால் | - | மோட்ஷம் கிட்டும் |
| தேவனே | - | தேவியே |
| தேவியே | - | தேவனே |
| தேவன் பாதம் | - | தேவி பாதம் |
| தேவன் சரணம் | - | தேவி சரணம் |
| பகவானே | - | பகவதியே |
| பகவதியே | - | பகவானே |
| பகவான் சரணம் | - | பகவதி சரணம் |
| பகவதி சரணம் | - | பகவான் சரணம் |
| ஈஸ்வரனே | - | ஈஸ்வரியே |
| ஈஸ்வரியே | - | ஈஸ்வரனே |
| ஈஸ்வரன் பாதம் | - | ஈஸ்வரி பாதம் |

| | | |
|---|---|---|
| சாமியே | - | ஐயப்போ |
| ஐயப்போ | - | சாமியே |
| வாறார் | - | ஐயா வாறாரு |
| வாபரோடு | - | வாறாரு |
| வாறார் | - | ஐயா வாறாரு |
| பேட்டைத் | - | துள்ளி வாறாரு |
| சாமியே | - | ஐயப்போ |
| ஐயப்போ | - | சாமியே |
| நெய் அபிஷேகம் | - | சாமிக்கே |
| சுவாமிக்கே | - | நெய் அபிஷேகம் |
| பால் அபிஷேகம் | - | சாமிக்கே |
| சாமிக்கே | - | பால் அபிஷேகம் |
| கற்பூர தீபம் | - | சாமிக்கே |
| சாமிக்கே | - | கற்பூர தீபம் |
| மணிகண்டா | - | ஐயப்பா |
| மாமலைவாசா | - | ஐயப்பா |
| மோகினிசுதனே | - | ஐயப்பா |
| மோகனரூபா | - | ஐயப்பா |
| ஹரிஹரபுத்ரா | - | ஐயப்பா |
| எங்களைக்காப்பாய் | - | ஐயப்பா |
| முன்னும் பின்னும் | - | ஐயப்பா |
| பின்னும் முன்னும் | - | ஐயப்பா |
| இடமும் வலமும் | - | ஐயப்பா |
| வலமும் இடமும் | - | ஐயப்பா |
| ரக்ஷிகனும் | - | ஐயப்பா |
| காடுமலை கடினம் | - | ஐயப்பா |
| கடினம் கடினம் | - | ஐயப்பா |
| பம்பையின் பாலா | - | ஐயப்பா |
| பந்தள வேந்தா | - | ஐயப்பா |
| பாபவிநாசா | - | ஐயப்பா |
| ஜகத் ரக்ஷா | - | ஐயப்பா |
| சாமியே | - | ஐயப்போ |
| ஐயப்போ | - | சாமியே |

சாமியே சரணம் ஐயப்பா

## அச்சன் கோவில் அரசே

அச்சன் கோவில் அரசே என் அச்சம் தீர்க்கவா
பச்சை மயில் ஏறும் பன்னிரு கையன் சோதரா
இச்சைகொண்டேன் உந்தன் முன்னே ஈஸ்வரன் மைந்தா
பச்சை வண்ணம் பரந்தாமன் மகிழும் செல்வா

சுவாமி பொன் ஐயப்பா சரணம் பொன் ஐயப்பா
சபரிகிரி நாயகனே சரணம் ஐயப்பா (சுவாமி)

ஆரியங் காவில் வாழும் ஆண்டவனே வா
பார்வதியால் அகமகிழும் பாலகனே வா
எருமேலி வீற்றிருக்கும் இறைவன் நீ வா
தர்மஞான சாஸ்தாவே தயவுடனே வா

மலைவீடும் சபரிமலை மன்னவனே நீவா
குறைதீர்க்கும் குளத்துப் புழைப் பாலகனே
மன்னவனே மணிகண்டனே மகிழ்வுடன் வா
வன்புலிமேல் காட்சி தரும் வள்ளலே நீ வா

தேவர்களும் உனைப்பணிய காந்த மலையிலே
நீ ஆவலுடன் காட்சி தந்தாய் ஜோதி உருவிலே
காவலனே கண்ணாரக் கண்டோமே ஜோதிமலை
நாவார உனை அழைத்தோம் சுவாமியே சரணம் ஐயப்பா.

## சாமி திம்தகத்தோம்

சாமி திந்தகத்தோம், தோம் தோம் ஐயப்பன் திந்தகத்தோம்
ஐயப்பன் திந்தகத்தோம், தோம் தோம் சுவாமி திந்தகத்தோம்
திந்தக திந்தக திந்தக திந்தக திந்தக தோம், தோம், தோம், தோம்

மகிஷியைக் கொன்றவனே ஐயப்பனே - திம்தோம்
மனசார நினைத்து ஆராதித்தோம் - திம்தோம்
கன்னிசாமி கூட்டமும் குருசாமி கூட்டமும்
பம்கை கொட்டி மேளம் தட்டி பேட்டை துள்ளும்
(சாமி திந்தகத்தோம்)

வாபரின் சந்நிதியில் காணிக்கை போட்டு - திம்தோம்
வாபரை நம்முடைய துணையாய் மாற்றி - திம்தோம்
அம்பலப் புழை கிருஷ்ணனை சாட்சி வைத்து
கூட்டம் செம்பருந்தினைப் பார்க்கும் போது தொடங்கிடும் துள்ளல்
(சாமி திந்தகத்தோம்)

அப்பனாம் சிவபெருமான் கண்கள் திறக்க
உச்சிவேளை நட்சத்திரம் பூத்துக்குலுங்க
ஐயப்ப சுவாமியின் அபிஷேகம் காண
ஆடி வரும் கூட்டமதை ஏற்றிச்செல்வோம்
(சாமி திந்தகத்தோம்)

# ஸ்ரீ வைரவப் பெருமான் 108 அர்ச்சனை

## தியானம்

செஞ்சடாதரன் சிவமகன் உலகருள்
பஞ்சபூதத்தன் பரசுபாசம் துடி
விஞ்சு சூலத்தன் வீரக பாலத்தன்
மஞ்சு மேனியன் வடுகனைப் போற்றுவாம்.

ஓம் ஆதி வைரவ மூர்த்தியே போற்றி
ஓம் ஆனந்த நர்த்தனம் ஆடுவாய் போற்றி
ஓம் சோதியே ஆசீதாங்கனே போற்றி
ஓம் சூரசங்கார குரு நாதனே போற்றி 4

ஓம் ஓங்கார ஹூம்க்ரீம் சண்டனே போற்றி
ஓம் ஓங்கிய தியான உன்மத்தனே போற்றி
ஓம் தீங்கிடர் நீக்கும் குரோதனே போற்றி
ஓம் சிவதத்துவ பீஷணனே போற்றி 8

ஓம் தண்ணருள் செயும் பீங்களனே போற்றி
ஓம் சாடும் சத்துரு சங்காரனே போற்றி
ஓம் கண்ணருள் கபாலக் கையனே போற்றி
ஓம் கடைவாய் எயிற்று (உ)க்கிரனே போற்றி 12

ஓம் அக்கினி மின் ஜடாமுடியனே போற்றி
ஓம் ஆடற் குதூகல வடுகனே போற்றி
ஓம் தக்கவர்க்கு அருள்தரு ஹரனே போற்றி
ஓம் தவநெறி உணர்த்தும் வரதனே போற்றி 16

ஓம் பொலிவளம் தரும் உத்தண்டனே போற்றி
ஓம் பொங்கிய கீர்த்திப் பினாகனே போற்றி
ஓம் சிவையொடு வாழ் வன வாசனே போற்றி
ஓம் திகம்பர ஷேத்திர பாலனே போற்றி 20

ஓம் மிளிர்கலா விச்சுவ ரட்சனே போற்றி
ஓம் வித்துவாகர சந்துஷ்டனே போற்றி
ஓம் வளர்சுக புருஷ தேவனே போற்றி
ஓம் மகாவிறல் பீம ரூபனே போற்றி 24

ஓம் மனாகர பீத வர்ணனே போற்றி
ஓம் வழங்கும் பிட்சா கரனே போற்றி
ஓம் தனாகர தான்ய மார்த்தாண்டனே போற்றி
ஓம் சாந்த விமல விஜயனே போற்றி 28

ஓம் தண்ட பாணித் திவாகரா போற்றி
ஓம் தான வார தயாபரா போற்றி
ஓம் அண்ட ரட்சக புண்ணியா போற்றி
ஓம் அபயப் பிரதாப அண்ணலே போற்றி 32

ஓம் மோக மன்மத ராசனே போற்றி
ஓம் முனீஸ்வர மதமாலயனே போற்றி
ஓம் வேக கண்ட பரசவே போற்றி
ஓம் வேடுவ கங்காள தரா போற்றி 36

ஓம் பொல்லாக்கலி தோஷகரா போற்றி
ஓம் புனித கபால கலபாந்தனே போற்றி
ஓம் எல்லாக் கலைக்கும் பகவதே போற்றி
ஓம் எதிர்வரு கால காலாந்தகா போற்றி 40

ஓம் சித்தி சுரக்கும் திவ்யனே போற்றி
ஓம் செழிதீர்த்த கரவிமலனே போற்றி
ஓம் அத்திர பாசாங்குசனே போற்றி
ஓம் அணி அலங்கிருத அபயா போற்றி 44

ஓம் ஆதவ வடிவுடை அழகா போற்றி
ஓம் ஆஞ்ஞா சக்கரத்து அரசே போற்றி
ஓம் ஜோதீஸ்வர ஆகாசனே போற்றி
ஓம் தொடர் பாதாள வாசனே போற்றி 48

ஓம் அஷ்ட புயகரப் பெருமான் போற்றி
ஓம் அரவாபரண இறைவா போற்றி
ஓம் துஷ்ட நிக்கிரகத் துரையே போற்றி
ஓம் சுவர்ண ரக்த ரூபனே போற்றி 52

ஓம் பரம சிவாம்ச பாலனே போற்றி
ஓம் பசுங்கார் நீல சீலனே போற்றி
ஓம் கயசெம் மஞ்சட் கண்ணா போற்றி
ஓம் கதிர்செவிக் குண்டலத் திண்ணா போற்றி 56

ஓம் திரள்நீள் சடாமுடி உடையாய் போற்றி
ஓம் சிலம்பொலி புலம்பும் நடையாய் போற்றி
ஓம் அருள்செய மயானம் வாழ்வாய் போற்றி
ஓம் ஆதியும் அந்தமும் இல்லாய் போற்றி 60

ஓம் பஞ்ச பூதத் தலத் திருப்பாய் போற்றி
ஓம் பயில்பூதம் படை புரப்பாய் போற்றி
ஓம் வெஞ்சின சுவான வாகனா போற்றி
ஓம் வீர மாகாளி மோகனா போற்றி 64

ஓம் வானமே ஆடையாய்ப் புனைந்தாய் போற்றி
ஓம் மன்னுயிர் துயரம் களைந்தாய் போற்றி
ஓம் ஞான யோகனாய் இருந்தாய் போற்றி
ஓம் நமசிவாயப் பெரு மருந்தே போற்றி 68

ஓம் தூய சுழிமுனைச் சுடரே போற்றி
ஓம் தொடரூழிக்கொரு முதலே போற்றி
ஓம் மாய வஞ்சனைகள் அறுப்பாய் போற்றி
ஓம் வணங்கிடுவார் பிழை பொறுப்பாய் போற்றி 72

ஓம் பசுக்களுக்கு இனிய பதியே போற்றி
ஓம் பரவிக சுக தயா நிதியே போற்றி
ஓம் திசைமுகன் சிரத்தைக் கிள்ளினாய் போற்றி
ஓம் தேவரின் குருதியேற்று அடக்கினாய் போற்றி 76

ஓம் பிணங்கை ஏந்திய பித்தனே போற்றி
ஓம் பெரும்பறை உவக்கும் சித்தனே போற்றி
ஓம் கணம்பேய் பூதரின் மன்னவா போற்றி
ஓம் களித்தார்ப்பரிக்கும் முன்னவா போற்றி 80

ஓம் 'சரமா' எனும்நாற் கண்ணுடை நாயாய்த்
தருமன் யமனுடன் வருவாய் போற்றி
ஓம் தரும அதர்ம வைத்தியா போற்றி
ஓம் விரவிய அசுரரை அழித்தவா போற்றி
ஓம் விபூதி அணிந்தார்க்கு இனித்தவா போற்றி 84

ஓம் ஒண்டலை மாலைத் தோளனே போற்றி
ஓம் ஊர்த்துவ தாண்டவத் தாளனே போற்றி
ஓம் மிண்டு நிர்வாண அகோரா போற்றி
ஓம் வேண்டிய வடிவுறும் குமாரா போற்றி 88

ஓம் காலனாய்க் காலம் புரிவாய் போற்றி
ஓம் காஷ்டமுமாகி நின்று எரிவாய் போற்றி
ஓம் சூல முச்சக்தியை இயக்குவாய் போற்றி
ஓம் சுரதி ஆகமவிதி விளக்குவாய் போற்றி 92

ஓம் ஆர்க்கும் கரித்தோல் போர்த்தாய் போற்றி
ஓம் அட்ட வீரத் தலக் கூத்தாய் போற்றி
ஓம் நோற்கும் விரதியர் துணைவா போற்றி
ஓம் யோகினீ சக்திகள் கணவா போற்றி 96

ஓம் கோணங்கள் எல்லாம் நின்றாய் போற்றி
ஓம் குளிர் வேள்வியெலாம் கொண்டாய் போற்றி
ஓம் சேணுயர் சூலம் பிடித்தாய் போற்றி
ஓம் திகழுருத் திரளாய் நடித்தாய் போற்றி 100

ஓம் ஆறா தாரமும் இயக்குவாய் போற்றி
ஓம் அறம்பொரு ளின்ப வீடருள்வாய் போற்றி
ஓம் ஆறாப் பவப்பழி தீர்ப்பாய் போற்றி
ஓம் அடியரின் துணைவனாய்க் காப்பாய் போற்றி 104

ஓம் சக்தி பராக்ரம தேவா போற்றி
ஓம் சர்வ வீரப் பிரதாபா சாரா போற்றி
ஓம் சிற்பர வியோம நாதா போற்றி
ஓம் ஸ்ரீகால பைரவ ராயா போற்றி 108

## தோத்திரம்

காவலா காளி பங்கா ககன அண் டங்கள் மேவும்
ஆவிகள் துணைவா நின்னை அணிமலர் தூபம்தீபம்
நாவிசை புனைந் தர்ச்சித்தோம் நமக்கிடர் வாரா வண்ணம்
பூவடிக் கருணை செய்வாய் புண்ணியா போற்றி போற்றி

## வைரவ அஷ்டகம்

தனந்தரும் வயிரவன் தளிரடி பணிந்திடின்
தளர்வுகள் தீர்ந்து விடும்
மனந் திறந் தவன்பாதம் மலரிட்டு வாழ்த்திடின்
மகிழ்வுகள் வந்து விடும்
சினந்தவிர்த் தன்னையின் சின்மயப்புன்னகை
சிந்தையில் ஏற்றவனே
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான். 1

வாழ்வினில் வளந்தர வையகம் நடந்தான்
வாரியே வழங்கிடுவான்
தாழ்வுகள் தீர்ந்திட தளர்வுகள் மறைந்திட
தானென வந்திடுவான்
காழ்ப்புகள் தீர்த்தான் கானகம் நின்றான்
காவலாய் வந்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான். 2

முழுநில வதனில் முறையொடு பூஜைகள்
முடித்திட அருளிடுவான்
உழுதவன் விதைப்பான் உடைமைகள் காப்பன்
உயர்வுறச் செய்திடுவான்
முழுமலர்த் தாமரை மாலையை ஜெபித்து
முடியினில் சூடிடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான். 3

நான்மறை ஓதுவார் நடுவினில் இருப்பான்
நான்முகன் நானென்பான்
தேனினில் பழத்தைச் சேர்த்தவன் ருசிப்பான்
தேவைகள் நிறைத்திடுவான்
வான்மழை எனவே வளங்களைப்பொழிவான்
வாழ்ந்திட வாழ்த்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான். 4

பூதங்கள் யாவும் தனக்குள்ளே வைப்பான்
பூரணங்கள் நான் என்பான்
நாதங்கள் ஒலிக்கும் நால்வகை மணிகளை
நாணினில் பூட்டிடுவான்
காதங்கள் கடந்து கட்டிடும் மாயம்
யாவையும் போக்கிடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான். 5

பொழில்களில் மணப்பான் பூசைகள் ஏற்பான்
பொன்குடம் ஏந்திடுவான்
கழல்களில் தண்டை கைகளில் மணியணி
கனகனாய் இருந்திடுவான்
நிழல்தரும் கற்பகம் நினைத்திடபொழிந்திடும்
நின்மலன் நானென்பான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான். 6

சதுர்முகன் ஆணவத்தலையினைக் கொய்தான்
சத்தொடு சித்தானான்
புதரினில் பாம்பைத் தலையினில் வைத்தான்
புண்ணியம் செய்யென்றான்
பதரினைக் குவித்து செம்பினை எரித்தான்
பசும்பொன் இதுவென்றான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான். 7

ஜெய ஜெய வடுக நாதனே சரணம்
வந்தருள் செய்திடுவாய்
ஜெய ஜெய க்ஷேத்திர பாலனே சரணம்
ஜெயங்களைந் தந்திடுவாய்
ஜெய ஜெய வயிரவா செகம் புகழ் தேவா
செல்வங்கள் தந்திடுவாய்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான். 8

## ஸ்ரீ வைரவர் காயத்ரி

ஓம் ஸ்வானத்வஜாய வித்மஹே!
ஸுலஹஸ்தாய தீமஹி!
தந்நோ வைரவ: ப்ரசோதயாத்!!

## அஷ்ட வைரவர் போற்றி

| | | |
|---|---|---|
| ஓம் | கால வைரவா | போற்றி |
| ஓம் | கல்பாந்த வைரவா | போற்றி |
| ஓம் | குரோத வைரவா | போற்றி |
| ஓம் | கபால வைரவா | போற்றி |
| ஓம் | சம்ஹார வைரவா | போற்றி |
| ஓம் | உன்மத்த வைரவா | போற்றி |
| ஓம் | கண்ட வைரவா | போற்றி |
| ஓம் | உக்கிர வைரவா | போற்றி |

## வைரவர் போற்றி

கறையணி கண்டத் தம்மான்
கருத்தினிலே தோன்றி னானை
மறையனி பூணு வானை
மழுவொரு சூலத் தானை
குறையணி அகந்தை யாளர்
குணத்தினை அடக்கு வானை
சிறையறு வடுகன் தாளைச்
சிந்தையில் வாழ்த்து வோமே!

திருவுறைச் சொல்லு மாகித்
தெறிமனம் பொருளு மாகி
வருபொருட் செல்வம் ஞானம்
வளர்புகழ் தானே யாகிப்

பெருவினை அகல நாளும்
பிதற்றுவார் உள்ளே தோன்றும்
திருவினை வயிரவந் தேவை
திருந்தடி வாழ்த்து வோமே!

புலரிதன் கதிர்க ளாகிப்
புவிக் கெலாம் ஒளியா னானை
மலரினை மலர்த்து வானை
உலகெலாம் ஆகி வேறாய்
உயிருடன் ஒன்று வானை
நிலமதில் வயிரவன் தாள்
நினைந்துநாம் வாழ்ந்து வோமே!

## ஸ்ரீ மஹாவைரவர்

ஒளி பொருந்திய உக்கிரமும், எண் கரங்களில் சர்ப்பம், டமருகம், அங்குசம், கட்கம், அமிருத கபாலம், வரம், அபயம் ஆகியவற்றைத் தாங்கியும் உள்ள மஹாபைரவர் மரகதம் போன்ற நிறமுடையவர். சந்திரனைச் சிரசில் கொண்டவர், ஜடாமுடியும், மூன்று கண்களும் உடையவர். இவரது வாகனம் நாய் (சுவாநம்)

**ஓம் ஸ்ரீ மஹாவைரவாய நமஹ.**

## ஸ்ரீ வைரவர் தியானம்

ஓம் ரக்த ஜ்வால ஜடாதரம் சசிதரம்
ரக்தாங்க தேஜோமயம்
ஹஸ்தே சூல கபால பாச டமரும்
லோகஸ்ய ரக்ஷாகரம்
நிர்வாணம் ஸ்ுனவாகனம்
த்ரிநயனஞ்ச ஆனந்த கோலாகலம்
வந்தே பூத, பிசாச நாத வடுகம்
க்ஷேத்ரஸ்ய பாலம் சிவம்.

# வைரவர் துதி

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமரு கங்கை
உரித்துமை யஞ்சக் கண்டும் ஒண்டிரு மணிவாய் விள்ளத்
தரித்ததோர் கோல கால பைரவ னாகி வேழம்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே.

சாயாத சூலதண் டாயுத னேபச்சைச் சட்டையனே
வேயார்விண் ணோர்தொழு மேனிய னேயென் மிடிதவிர்ப்பாய்
வாயார வுன்னைத் துதிப்போர்க்கு வேண்டும் வரமளிப்பாய்
தாயா கியஅப்ப னேகாழி யாபதுத் தாரணனே.

அஞ்சுதலை நான்குதலை முத்தலை இருதலை ஒருதலைக்கே
அஞ்சுதலை நன்கறுத்து ஆறுதலை பெறவித்தாய்
பிஞ்சுதலை அரிசித்து மேற்பேறுதலைப் பெறவைத்தாய்
மிஞ்சுதலை விஞ்சையனே அம்பழைஅமர் சுந்தரனே.

வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம்.

எளியரை வலியர் வாட்டின் வலியரை யிருநீர் வைப்பி
னளியறத் தெய்வம் வாட்டு மெனுமுரைக் கமைய வன்றே
தெளியுமா வலியைச் சொற்றோற் செகுத்துரிக் கவயம்
வளியுளர் கச்சி காவல் வைரவர்க் கன்பு செய்வோம்.

திருமேனிக் கவசமும் வாழ்க திரிநேத்ரமும் வாழ்க
திருக்கரச் சூலமும் வாழ்க திருக்கைத் தண்டம் வாழ்க
திருமருவு காஞ்சிபுர வயிரவரிணை மலரடி வாழ்க
திருவுள்ளங் கசிந்துருக வோதுவோர் வாழ்க.

# வீரபத்திரர் துதி

திரு மிகுந்துள கைலை மேவிய தேவதேவ கடாட்சமாய்
வரு மகதவ வீர பத்திர மகேசு வரங்க ளிலங்கவே
குரு மூர்த்தியவ தார மாகிக் குவல யத்தினி னிலைவதாம்
வரும லர்ப்பத சரண மேகதி சரண மேகதி சரணமே.

நீர துற்றிடும் நெடுஞ்சடை முடிகொள் நிமலன்
சீர துற்றிடச் செய்சிறு விதிமகம் சிதைக்கும்
போர துற்றிடப் புரிந்தபிற் குடந்தைமா மடம்வாழ்
வீர பத்திரன் விரைமலர்த் தாள்மிலைச் சிடுவாம்.

சார பத்திர மிக்கிலாத் தக்கனை
பார பத்திரம் பாணியிற் பற்றியே
கோர பத்திரம் கொண்டு வதைத்திடும்
வீர பத்திரர் மெய்ப்பத மேத்துவாம்.

வீர பத்திர வுருத்திரன் வேறுவே றளித்த
சார தர்க்குளங் கோர்சிலர் நீனிறந் தழைப்போர்
கோர பத்திர மணிக்கலன் மின்னுவிற் குலவக்
காரெ னப்பொலிந் துருமெனக் கழறுகின் றனரால்.


ஈட்டமிக் கெழுந்து செல்லு மின்னதோர் பூதர் தம்மின்
மோட்டிகற் பானு கம்பன் முதலிய கணங்கண் முத்தி
வீட்டுடைத் தலைவ னான வீரபத் திரன்முன் னாகி
யீட்டுடைப் பல்லி யங்கள் யாவையு மியம்பிச் சென்றார்.

# ஸ்ரீ ஞானபைரவர் 108 போற்றி

| | | | |
|---|---|---|---|
| ஓம் | ஞான பைரவனே | போற்றி | |
| ஓம் | பயநாசகனே | போற்றி | |
| ஓம் | அஷ்டரூபனே | போற்றி | |
| ஓம் | அஷ்டமித் தோன்றலே | போற்றி | |
| ஓம் | அயன்குருவே | போற்றி | |
| ஓம் | அறக்காவலனே | போற்றி | |
| ஓம் | அகந்தையழிப்பவனே | போற்றி | |
| ஓம் | அடங்காரின் அழிவே | போற்றி | |
| ஓம் | அற்புதனே | போற்றி | |
| ஓம் | அசிதாங்கபைரவனே | போற்றி | 10 |
| ஓம் | ஆனந்த பைரவனே | போற்றி | |
| ஓம் | ஆலயக் காவலனே | போற்றி | |
| ஓம் | இன்னல் பொடிப்பவனே | போற்றி | |
| ஓம் | இடுகாட்டுமிருப்பவனே | போற்றி | |
| ஓம் | உக்ரபைரவனே | போற்றி | |
| ஓம் | உடுக்கையேந்தியவனே | போற்றி | |
| ஓம் | உதிரங்குடித்தவனே | போற்றி | |
| ஓம் | உன்மத்த பைரவனே | போற்றி | |
| ஓம் | உறங்கையில் காப்பவனே | போற்றி | |
| ஓம் | ஊழத்தருள்வோனே | போற்றி | 20 |
| ஓம் | எல்லைத்தேவனே | போற்றி | |
| ஓம் | எளிதில் இரங்குபவனே | போற்றி | |
| ஓம் | கபாலதாரியே | போற்றி | |
| ஓம் | கங்காளமூர்த்தியே | போற்றி | |
| ஓம் | கர்வபங்கனே | போற்றி | |
| ஓம் | கல்பாந்தபைரவனே | போற்றி | |
| ஓம் | கதாயுதனே | போற்றி | |
| ஓம் | கனல்வீசுங்கண்ணனே | போற்றி | |
| ஓம் | கருமேகநிறனே | போற்றி | |
| ஓம் | கட்வாங்கதாரியே | போற்றி | 30 |
| ஓம் | களவைக்குலைப்போனே | போற்றி | |
| ஓம் | கருணாமூர்த்தியே | போற்றி | |
| ஓம் | காலபைரவனே | போற்றி | |
| ஓம் | காபாலிகர்தேவனே | போற்றி | |
| ஓம் | கார்த்திகையில் பிறந்தவனே | போற்றி | |

ஓம் காளாஷ்டமிநாதனே போற்றி
ஓம் காசிநாதனே போற்றி
ஓம் காவல்தெய்வமே போற்றி
ஓம் கிரோத பைரவனே போற்றி
ஓம் கொன்றைப்பிரியனே போற்றி 40
ஓம் சண்டபைரவனே போற்றி
ஓம் சட்டை நாதனே போற்றி
ஓம் சம்ஹார பைரவனே போற்றி
ஓம் சம்ஹாரகால பைரவனே போற்றி
ஓம் சிவத்தோன்றலே போற்றி
ஓம் சிவாலயத்திருப்போனே போற்றி
ஓம் சிக்ஷகனே போற்றி
ஓம் சீகாழித்தேவனே போற்றி
ஓம் சுடர்ச்சடையனே போற்றி
ஓம் சுதந்திர பைரவனே போற்றி 50
ஓம் சிவ அம்சனே போற்றி
ஓம் சுவேச்சா பைரவனே போற்றி
ஓம் சூலதாரியே போற்றி
ஓம் சூழ்வினையறுப்பவனே போற்றி
ஓம் செம்மேனியனே போற்றி
ஓம் க்ஷேத்ரபாலனே போற்றி
ஓம் தனிச்சன்னதியுளானே போற்றி
ஓம் தலங்களின் காவலனே போற்றி
ஓம் தீதழிப்பவனே போற்றி
ஓம் துஸ்வப்னநாதகனே போற்றி 60
ஓம் தெற்கு நோக்கனே போற்றி
ஓம் தைரியமளிப்பவனே போற்றி
ஓம் நவரஸரூபனே போற்றி
ஓம் நரசிம்மசாந்தனே போற்றி
ஓம் நள்ளிரவு நாயகனே போற்றி
ஓம் நரகம் நீக்குபவனே போற்றி
ஓம் நாய் வாகனனே போற்றி
ஓம் நாடியருள்வோனே போற்றி
ஓம் நிமலனே போற்றி
ஓம் நிர்வாணனே போற்றி 70
ஓம் நிறைவளிப்பவனே போற்றி
ஓம் நின்றருள்வோனே போற்றி

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பயங்கர ஆயுதனே | போற்றி | |
| ஓம் | பகையழிப்பவனே | போற்றி | |
| ஓம் | பரசு ஏந்தியவனே | போற்றி | |
| ஓம் | பலிபீடத்துறைவோனே | போற்றி | |
| ஓம் | பாபபக்ஷ்யனே | போற்றி | |
| ஓம் | பால பைரவனே | போற்றி | |
| ஓம் | பாம்பணியனே | போற்றி | |
| ஓம் | பிரளயகாலனே | போற்றி | 80 |
| ஓம் | பிரம்மசிரச்சேதனே | போற்றி | |
| ஓம் | பூஷண பைரவனே | போற்றி | |
| ஓம் | பூதப்ரேத நாதனே | போற்றி | |
| ஓம் | பெரியவனே | போற்றி | |
| ஓம் | பைராகியர் நாதனே | போற்றி | |
| ஓம் | மல நாசகனே | போற்றி | |
| ஓம் | மஹா பைரவனே | போற்றி | |
| ஓம் | மணி ஞாணனே | போற்றி | |
| ஓம் | மகர குண்டலனே | போற்றி | |
| ஓம் | மகோதரனே | போற்றி | 90 |
| ஓம் | மார்த்தாண்ட பைரவனே | போற்றி | |
| ஓம் | முக்கண்ணனே | போற்றி | |
| ஓம் | முக்தியருள்வோனே | போற்றி | |
| ஓம் | முனீஸ்வரனே | போற்றி | |
| ஓம் | மூலமூர்த்தியே | போற்றி | |
| ஓம் | யமவாதனை நீக்குபவனே | போற்றி | |
| ஓம் | யாவர்க்கும் எளியவனே | போற்றி | |
| ஓம் | ருத்ரனே | போற்றி | |
| ஓம் | ருத்ராக்ஷதாரியே | போற்றி | |
| ஓம் | வடுக பைரவனே | போற்றி | 100 |
| ஓம் | வடுகூர் நாதனே | போற்றி | |
| ஓம் | வடகிழக்கருள்வோனே | போற்றி | |
| ஓம் | வடை மாலைப்பிரியனே | போற்றி | |
| ஓம் | வாரணாசி வேந்தே | போற்றி | |
| ஓம் | வாமனர்க்கருளியவனே | போற்றி | |
| ஓம் | விபீஷண பைரவனே | போற்றி | |
| ஓம் | வீழாமல் காப்பவனே | போற்றி | |
| ஓம் | ஸ்வர்ண வயிரவனே | போற்றி | 108 |



ஸ்ரீ கால பைரவர்



ஸ்ரீ சொர்ண வைரவர்

# ஸ்ரீ காலவைரவ அஷ்டோத்ரம்

| | | |
|---|---|---|
| ஓம் | வைரவாய | நமஹ |
| ஓம் | பூதநாதாய | நமஹ |
| ஓம் | பூதாத்மனே | நமஹ |
| ஓம் | பூதபாவநாய | நமஹ |
| ஓம் | க்ஷேத்ரதாய | நமஹ |
| ஓம் | க்ஷேத்ரபாலாய | நமஹ |
| ஓம் | க்ஷேத்ரக்ஞாய | நமஹ |
| ஓம் | க்ஷத்ரியாய | நமஹ |
| ஓம் | விராஜே | நமஹ |
| ஓம் | ஸ்மசான வாஸிநே | நமஹ |
| ஓம் | மாம்ஸாசிநே | நமஹ |
| ஓம் | ஸர்ப்பராசஸே | நமஹ |
| ஓம் | ஸ்மராந்தக்ருதே | நமஹ |
| ஓம் | ரக்தபாய | நமஹ |
| ஓம் | பானபாய | நமஹ |
| ஓம் | ஸித்தாய | நமஹ |
| ஓம் | ஸித்திதாய | நமஹ |
| ஓம் | ஸித்தஸேவிதாய | நமஹ |
| ஓம் | கங்காளாய | நமஹ |
| ஓம் | காலசமனாய | நமஹ |
| ஓம் | கலாய | நமஹ |
| ஓம் | காஷ்டாய | நமஹ |
| ஓம் | தநவே | நமஹ |
| ஓம் | கவயே | நமஹ |
| ஓம் | த்ரிநேத்ரே | நமஹ |
| ஓம் | பஹுநேத்ரே | நமஹ |
| ஓம் | பிங்களலோசனாய | நமஹ |
| ஓம் | சூலபாணயே | நமஹ |
| ஓம் | கட்கபாணயே | நமஹ |
| ஓம் | கங்காளிநே | நமஹ |
| ஓம் | தூம்ரலோசனாய | நமஹ |
| ஓம் | அபீரவே | நமஹ |
| ஓம் | வைரவாய | நமஹ |
| ஓம் | நாதாய | நமஹ |
| ஓம் | பூதபாய | நமஹ |

| | | |
|---|---|---|
| ஓம் | யோகிநீபதயே | நமஹ |
| ஓம் | தநதாய | நமஹ |
| ஓம் | தநஹாரிணே | நமஹ |
| ஓம் | தநவதே | நமஹ |
| ஓம் | ப்ரீதிபாவனாய | நமஹ |
| ஓம் | நாகஹாராய | நமஹ |
| ஓம் | நாகபாசாய | நமஹ |
| ஓம் | வ்யோமகேசாய | நமஹ |
| ஓம் | கபாலப்ருதே | நமஹ |
| ஓம் | காலாய | நமஹ |
| ஓம் | கபாலமாலிநே | நமஹ |
| ஓம் | கமநீயாய | நமஹ |
| ஓம் | கலாநிதியே | நமஹ |
| ஓம் | த்ரிலோசனாய | நமஹ |
| ஓம் | ஜ்வலந்நேத்ராய | நமஹ |
| ஓம் | த்ரிசிகிநே | நமஹ |
| ஓம் | த்ரிலோகபாய | நமஹ |
| ஓம் | த்ரிநேத்ரதநயாய | நமஹ |
| ஓம் | டிம்பாய | நமஹ |
| ஓம் | சாந்தாய | நமஹ |
| ஓம் | சாந்தஜனப்ரியாய | நமஹ |
| ஓம் | வடுகாய | நமஹ |
| ஓம் | வடுவேஷாய | நமஹ |
| ஓம் | கட்வாங்க வரதாகரகாய | நமஹ |
| ஓம் | பூதாத்யக்ஷாய | நமஹ |
| ஓம் | பசுபதயே | நமஹ |
| ஓம் | பிக்ஷுதாய | நமஹ |
| ஓம் | பரிசாரகாய | நமஹ |
| ஓம் | தூர்தாய | நமஹ |
| ஓம் | திகம்பராய | நமஹ |
| ஓம் | சூராய | நமஹ |
| ஓம் | ஹரிணாய | நமஹ |
| ஓம் | பாண்டுலோசனாய | நமஹ |
| ஓம் | ப்ரசாந்தாய | நமஹ |
| ஓம் | சாந்திதாய | நமஹ |
| ஓம் | ஸித்தாய | நமஹ |
| ஓம் | சங்கராய | நமஹ |

| | | |
|---|---|---|
| ஓம் | ப்ரிய பாந்தவாய | நமஹ |
| ஓம் | அஷ்டமூர்த்தயே | நமஹ |
| ஓம் | நிதீசாய | நமஹ |
| ஓம் | க்ஞானசக்ஷுஷே | நமஹ |
| ஓம் | தபோமயாய | நமஹ |
| ஓம் | அஷ்டாதாராய | நமஹ |
| ஓம் | ஷடாதாராய | நமஹ |
| ஓம் | ஸர்ப்பயுக்தாய | நமஹ |
| ஓம் | சிகீஸகாய | நமஹ |
| ஓம் | பூதராய | நமஹ |
| ஓம் | பூதராதீசாய | நமஹ |
| ஓம் | பூபதயே | நமஹ |
| ஓம் | பூதராத்மஜாய | நமஹ |
| ஓம் | கங்காலதாரிணே | நமஹ |
| ஓம் | முண்டிநே | நமஹ |
| ஓம் | நாகயக்ஞோபவீதவதே | நமஹ |
| ஓம் | ஜ்ரும்பனோமோஹந: | நமஹ |
| ஓம் | ஸ்தம்பீ மாரண க்ஷோபணாய | நமஹ |
| ஓம் | ஸுத்தநீலாஞ்சன ப்ரக்யாய | நமஹ |
| ஓம் | நைத்யக்னே | நமஹ |
| ஓம் | முண்டபூஷிதாய | நமஹ |
| ஓம் | பலிபுஜே | நமஹ |
| ஓம் | பலிபுங்நாதாய | நமஹ |
| ஓம் | பாலாய | நமஹ |
| ஓம் | அபால விக்ரமாய | நமஹ |
| ஓம் | ஸ்ர்வாபத் தாரணாய | நமஹ |
| ஓம் | துர்க்காய | நமஹ |
| ஓம் | துஷ்டபூதநிஷேவிதாய | நமஹ |
| ஓம் | காமிநே | நமஹ |
| ஓம் | கலாநிதயே | நமஹ |
| ஓம் | காந்தாயய | நமஹ |
| ஓம் | காமிநீ வசக்ருதே | நமஹ |
| ஓம் | வசினே | நமஹ |
| ஓம் | ஸர்வ ஸித்திப்ரதாய | நமஹ |
| ஓம் | வைத்யாய | நமஹ |
| ஓம் | ப்ரபவே | நமஹ |
| ஓம் | விஷ்ணவே | நமஹ |

# ஞான வைரவர் துதி

| | |
|---|---|
| வல்லையூர்க் காவலனே | ஞான வைரவா |
| சந்நிதியில் வீற்றிருக்கும் | ஞான வைரவா |
| தெல்லிப்பழை ஊர்தனிலே | ஞான வைரவா |
| கவளாவத்தையில் பதியமர்ந்த | ஞான வைரவா |
| அருவுருவுமானவனே | ஞான வைரவா |
| அகிலமெல்லாம் காப்பவனே | ஞான வைரவா |
| அடியார் எம்மைக் காத்திடுவாய் | ஞான வைரவா |
| திரிசூல நாயகனே | ஞான வைரவா |
| ஐயா திருநடனம் ஆடிவந்து | ஞான வைரவா |
| திருவருளைத் தந்தருள்வாய் | ஞான வைரவா |
| கரிநாய் மீதிலே | ஞான வைரவா |
| வீதிவலம் வந்தருள்வாய் | ஞான வைரவா |
| எட்டுத் திக்கும் காவல் செய்து | ஞான வைரவா |
| ஏழை எம்மைக் காத்தருள்வாய் | ஞான வைரவா |
| வடைமாலைப் பிரியனல்லோ | ஞான வைரவா |
| சுடுகாடு காப்பவனே | ஞான வைரவா |
| உடுக்குப் பிரியரெல்லோ | ஞான வைரவா |
| வேதத்தின் காவலனே | ஞான வைரவா |
| மிளிர் யாக நாயகனே | ஞான வைரவா |
| பூதத்தின் முன்முதலே | ஞான வைரவா |
| பொழில் சூல நாயகனே | ஞான வைரவா |
| வரு வினைகள் தீர்ப்பவனே | ஞான வைரவா |
| மாகாளி பங்கினனே | ஞான வைரவா |
| ஆகமத்தின் வடிவோனே | ஞான வைரவா |
| வருஞ்சுணங்க வாகனனே | ஞான வைரவா |
| வலிமை எல்லாம் கொண்டவனே | ஞான வைரவா |
| பெருஞ் சுகங்கள் தருபவனே | ஞான வைரவா |
| பிழைகளைப் பொறுத்துக் காத்தருள்வாய் | ஞான வைரவா |
| சரணம் சரணம் சரணமையா | ஞான வைரவா |
| உங்கள் பாதமலர் சரணமய்யா | ஞான வைரவா |

## விநாயகர் நாமாவளி

சிவசிவ கஜமுக கணநாதா
சிவகண வந்தித குணனீதா
கெங்கா தரஹர கஜமுக வர்த்தன
மகா கணபதே ஆலயமாம்
ஆகு வாகன அம்பிகை நிர்த்தன
மகா கணபதே ஆலயமாம்
ஒருகொம் பிருசெவி மும்மதமோ
டோதொரு நால்வாய் ஐங்கரனே
ஆனந்த ஐங்கர வந்திடுவாய்
அந்தகன் வாராமற் காத்தருள்வாய்
அனுதின மும்மருள் ஐங்கரனே
ஆதி யனாதியோர் அட்சரமே
ஏழைக் கென்றும் அருள்புரிவாய்
ஈஸ்வரி பாலா ஏரம்பா
ஈஸ்வரி பாலா குருமணியே
உந்தன் அடைக்கலம் அடியேனே
வரதா வரதா நல்வரனே
வந்து நிதம்அருள் தந்திடுவாய்
சப்த சமுத்திர மொத்திடும் மும்மத
தந்தி தொந்தி வைத்தோனே
துளவணியோன் மருகா கணபதியே
சுந்தர மாமுகனே சரணம் சரணம்
சரணம் சரணம் தந்திமுகா
சரவண பவனார்க் குயர்துணைவா
சாம்ப சதாசிவ சாம்ப சதாசிவ
சாம்ப சதாசிவ சாம்பசிவா.

## நடராஜ நாமாவளி

சாம்ப சிவசிவ சங்கர நடனம்
பாம்பும் புலியும் பார்த்திடு நடனம்

வாரும் வாரும் தொண்டர்களே வாரும் வாரும்
நாளை காலனுக் காளாகப்போறீர் பாரும் பாரும்

பாவஞ் செய்யும் மூடர்களே வாரும் வாரும்
நாளை காலனுக் காளாகப்போறீர் பாரும் பாரும்

சிவசிவ என்றஒரு நாமம் சொல்லடா
கெட்ட பாமரனே உனக்கது பாரமல்லடா

அரகர என்ற ஒரு நாமம் சொல்லடா
கெட்ட பாமரனே உனக்கது பாரமல்லடா

யமன் வந்தால் பொல்லாதவன் விடமாட்டான்
சாம்பசிவ பத்தனென்றால் தொடமாட்டான்

காலன் என்றால் பொல்லாதவன் விடமாட்டான்
காலகால தொண்டனென்றால் தொடமாட்டான்

இக்கரை கடந்திடில் அக்கரையே
இருப்பது சிதம்பர சர்க்கரையே

என்னுயிர் உடம்பொடு சித்தமதே
இனிப்பது நடராசர் புத்தமுதே

சாம்ப சிவசிவ சங்கர நடனம்
பாம்பும் புலியும் பார்த்திடு நடனம்

சாம்ப சதாசிவ சாம்ப சதாசிவ
சாம்ப சதாசிவ சாம்பசிவா.

## சுப்பிரமணியர் நாமாவளி

அகண்ட பரசிவ ஆறுமுக குருபர
ஆனந்தம் பரமானந்தம்
அத்தா நித்தா அறுமா முகனே
சித்தா முத்தா சுடரே சரணம்

சூரர் பகைவா சுடர்வேலா
சுப்பிர மணியா குகசரணம்
அகண்டா னந்தா அத்வித போதா
அற்புத னேஉன் அடியிணை சரணம்

பூரண வந்தித புண்ணிய புனிதா
காரண கந்த கடம்பா சரணம்
புரந்தர னாதி புலவர்கள் போற்றும்
மருந்தே உந்தன் மலரடி சரணம்

பன்னிரு கரனே பரன்திரு மகனே
என்னிரு கண்ணே இறைவா சரணம்
தெய்வ யானை திருமண வாளா
தேவ தேவா திருவடி சரணம்

குறமகள் கணவா குழகா தேவா
குறிஞ்சி வேந்த குரைகழல் சரணம்
மால் மருகா முருகா தேவா
மயூர வாகன மலரடி சரணம்

சரணம் சரணம் சண்முகனே
சரவண பவனே சரணம் சரணம்
சாம்ப சதாசிவ சாம்ப சதாசிவ
சாம்ப சதாசிவ சாம்பசிவா.

# முருகன் பாடல்கள்

**ராகம் : பெஹாக்** **தாளம் : ஆதி**

கார்த்தி கேயா கலியுக வரதா கந்தா முருகா கதிர்வடி வேலா
தோத்திரஞ் செய்துனைத் துதித்தோம் காவாய்
தூய்மையும் அன்பும் துலங்கிடச் செய்வாய் (கார்த்தி)

சாத்திரக் கோத்திரச் சண்டையைத் தீர்ப்பாய்
சன்மார்க்க மொன்றே சகமிசைக் காப்பாய் (கார்த்தி)

பாரில் உனையே பணிந்திட வைப்பாய்
பக்தர்கள் கூட்டம் பரவிடப் பணிப்பாய் (கார்த்தி)

சீருடன் ஆத்ம சித்தியும் தருவாய்
பேரும் புகழும் பிணியாது காப்பாய் (கார்த்தி)

ஆர்வக் கனலை அடியார்க் கீவாய்
அவனியில் அமைதி ஆண்டிட அருள்வாய் (கார்த்தி)

கார்மழை போலநின் கருணையைப் பொழிவாய்
காங்கேயா சண்முகா கதிர்காமத் தேவே! (கார்த்தி)

---

**ராகம் : தேசிய தோடி** **தாளம் : ஆதி**

கந்தா கடம்பா கார்த்திகேயா
கலியுக வரதா கதிர்காமா

தேவர்கள் துயர்தனை நீக்கிடவே
திருஅவ தாரம் செய்தாயே
சங்கரன் மைந்தனாய் வந்துதித்தே
சரவண பொய்கையில் வாழ்ந்தாயே (கந்தா)

சூர பத்மனைச் சம்ஹரித்த
வீராதீரா வெற்றி வேலா
வள்ளிப் பெண்ணைத் தினைப்புனத்தில்
கொள்ளை கொண்ட கள்வனானாய் (கந்தா)

அருண கிரியுன் சரணெணவே
கருணை யுடனே ஆண்டுவந்தாய்
நக்கீரனுக்கு அருள் புரிந்தே
பக்தி யோடுனைப் பாடவைத்தாய் (கந்தா)

முருகா முருகா என்றிடவே
முருகனாய் வந்தருள் புரிவாய்
கதிர்கா மந்தனில் எழுந்தருளி
காந்தம் போலே கவருகின்றாய் (கந்தா)

## முருகன் துதி

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணை கூர் முகங்க ளாறும் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்கள் போற்றி
காஞ்சிமாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையும் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

அஞ்சு முகம்தோன்றில் ஆறு முகம்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்என வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகா என்றோதுவார் முன்.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

## முருகா சரணம்

வேலவனே வேலவனே வேலவனே வேல்முருகா
வெற்றிவடி வேலவனே பாலகனே வேல்முருகா
வேலைக்கையில் ஏந்தியாடும் வேலவனே வேல்முருகா
வினைகளெல்லாம் போக்கிவிடும் பாலகனே வேல்முருகா.

பச்சைமயில் வாகனனே பாலகனே வேல்முருகா
அச்சந்தீர்த்து எமையாளும் ஆண்டவனே வேல்முருகா
கண்ணிரண்டும் உன்வடிவே காணவேண்டும் வேல்முருகா
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும் வேல்முருகா.

குன்றிலாடும் குமரனுக்குக் கோடி கும்பிடு
குழந்தை வடிவேலனுக்குக் கோடி கோடி கும்பிடு
கந்தசாமி கடவுளுக்குக் கோடி கும்பிடு
கருணைவடி வேலனுக்குக் கோடி கோடி கும்பிடு.

அம்பிகையின் பாலனுக்குக் கோடி கும்பிடு
ஆறுமுக வேலனுக்குக் கோடி கோடி கும்பிடு
வள்ளி மணாளனுக்குக் கோடி கும்பிடு
வடிவேல் முருகனுக்குக் கோடி கோடி கும்பிடு
சரவணத்து ஐயனுக்குக் கோடி கும்பிடு
சண்முக வேலனுக்குக் கோடி கோடி கும்பிடு.

குன்றத்தில் குடியிருக்கும் தெய்வம் எங்கள் தெய்வம்
குறவள்ளி தனைமணந்த தெய்வம் எங்கள் தெய்வம்
சங்கரனின் மகனான சண்முகனாம் தெய்வம்
ஐங்கரனோ டுடன்பிறந்த ஆனந்தத் தெய்வம்.

தந்தைக்கு உபதேசம் தந்ததமிழ்த் தெய்வம்
தாருகா சுரனைவென்றை தனியான தெய்வம்
ஓங்காரப் பிரணவத்தின் உள்நின்ற தெய்வம்
உமையவளின் உரிமைகொண்ட உன்னதத் தெய்வம்.

தமிழ்வளர்க்கும் இதயத்தில் தான்வளருந் தெய்வம்
அமிழ்தினும் இனியசொல்லால் முருகனென்ற தெய்வம்
சொல்லுக்குப் பொருள்கூறிச் சுவைதந்த தெய்வம்
சொல்லாகிப் பொருளாகிச் சுவையான தெய்வம்

ஆறுபடை வீடுகொண்ட ஆறுமுகத் தெய்வம்
வேறுபடை தேவையற்ற வேலவனாம் தெய்வம்
யாருமற்ற அடியவரை ஆட்கொள்ளுந் தெய்வம்
கூறும்வேதப் பொருளாகிக் குளிர்ந்துநின்ற தெய்வம்

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைமேல்வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்த வேல் உண்டே துணை.

எம்தாயும், எனக்கு அருள் தந்தையும் நீ,
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்,
கந்தா! கதிர்வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை நாயகனே!

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்,
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்,
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறு செய்தனி வேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேல்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கும் வாழ்க
மாசில்லா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியார் எல்லாம்

# துர்க்கை துதிகள்

ஓரெட் டிதழ்வட்டத் துள்ளாய சட்கோணம்
பாரித்த முக்கோண வட்டப் பராபரையே
வாரிப் படுநஞ் சமுதாக்கும் வால்வளைக்கே
வேரிக் கரும்பேவித் தின்றிவிளை மூலமே.

தோன்று சராசரங்க ளெல்லாந் தொடர்விடா
தேன்ற சிவமயமு நின்னன்றி யில்லையால்
ஆன்ற விருப்பி னருந்துவன வின்றாமேல்
ஊன்று சுவையுளவோ நந்தா வொளிவிளக்கே.

முச்செயலுங் காட்டி யவைபுரக்கு மூவரைத்தன்
இச்சையிற் காட்டி யவருளத்து மெட்டாயாற்
பச்சை யிளங்குதலைக் கிள்ளாய் பரையேநின்
விச்சையிவை யென்றால் விடுத்துணர வல்லாரார்

எங்கு மெரியக் கிரிகள் பொடிபட வெண்பகைஞர்
அங்கம் பிளந்திட விண்மண் கிழிந்திட வார்த்தெழுந்து
பொங்குங் கடல்கள் சுவறிடச் சூலத்தைப் போகவிட்டுச்
சிங்கத்தின் மீது வருவாள் வராகி சிவசக்தியே.

சிவஞான போதகி செங்கைக் கபாலி திகம்பரிநற்
றவமாரு மெய்யன்பர்க் கேயிடர் சூழுந் தரியலரை
அவமானஞ் செய்யக் கணங்களை யேவு மகோரியிங்கு
நவமாக வந்தெனைக் காக்குந் திரிபுர நாயகியே.

# அம்பாள் துதிப்பாடல்

அம்மா அம்மா என் தாயே
ஆறுதல் தந்தெமைக் காப்பாயே
இம்மாநிலத்தில் நீதானே
எங்கள் துர்க்கை தாய்தானே (அம்மா அம்மா)

இங்கே நாம்படும் வேதனைகள்
எல்லாம் உனக்குத் தெரியாதோ
எல்லாம் நீயே அறிந்திருந்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய் (அம்மா அம்மா)

எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா
தாயே எம்மைக் காத்திடம்மா
பொல்லாப் பெல்லாம் போக்கிடவே
புதுமை ஒன்றைச் செய்திடம்மா (அம்மா அம்மா)

அல்லும் பகலும் அழுகுரல்கள்
எல்லாத் திசையும் வேதனைகள்
பொல்லா வினைகள் சூழ்ந்தெம்மை
புழுவாய்த் துடிக்க வைக்குதம்மா (அம்மா அம்மா)

சொல்லால் வடிக்கமுடியாத
துயரம் எமக்கு ஏனம்மா
எம்மால் தாங்க முடியாது
தாயே எம்மைக் காப்பாற்று (அம்மா அம்மா)

ஒன்றா இரண்டா நாம் சொல்ல
உள்ளத்து வேதனை தீராயோ
என்றும் உன்னை நாம் துதித்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய் (அம்மா அம்மா)

நின்றால் நடந்தால் உன் நினைவு
எங்கும் எதிலும் உன் காட்சி
துன்பம் வராமல் காத்தெமக்கு
துணையாய் என்றும் வந்திடம்மா. (அம்மா அம்மா)

# அம்மன் பஜனாவளி

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்
சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்

சத்தியஞான தர்மசக்தி சாந்தசக்தி ஓம்சிவம்
சச்சிதானந் தாத்மசக்தி சர்வசக்தி ஓம்சிவம் (சு)

வேதசாஸ்த்ர சகலகலா வித்யாசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம்சிவம் (சு)

நாதகீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்
மஹாமந்த்ர யந்த்ர - தந்த்ர வச்யசக்தி ஓம்சிவம் (சு)

யோகபோக த்யாகசக்தி லோகசக்தி ஓம்சிவம்
தாகமோஹ சோகரஹித தபோசக்தி ஓம்சிவம் (சு)

துஷ்டசத்ரு நாச சக்தி துர்க்கா சக்தி ஓம்சிவம்
அஷ்டலக்ஷ்மி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம் (சு)

குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபல தாயகம்
குருபரசிவ ஹரஹர நடராஜ சுத்த சக்தி ஓம்சிவம் (சு)

## இலக்குமி துதிகள்

கொழுதிசை யளிமுரலுந் தாமரைமென்
பொகுட்டிலுறை கொள்கை போல
மழையுறழுந் திருமேனி மணிவண்ண
னிதயமலர் வைகு மானே
முழுதுலகு மினிதீன்ற வருட்கொம்பே
கரகமல முகிழ்ந்தேந் நாளுங்
களிபெருங்கா தலிற்றொழுவோர் வினைதீர
வருள்கொழிக்குங் கமலக் கண்ணாய்.

கமலைதிரு மறுமார்பன் மனைக்கிழத்தி
செங்கமலக் கையாய் செய்ய
விமலைபசுங் கழைகுழைக்கும் வேனிலான்
றனையீன்ற விந்தை தூய
அமுதகும்ப மலர்க்கரத்தாய் பாற்கடலு
ளவதரித்தோ யன்பர் நெஞ்சத்
திமிரமகன் றிடவொளிருஞ் செழுஞ்சுடரே
யெனவணக்கஞ் செய்வாம் மன்னோ.

பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிருபொற் றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

## சரஸ்வதி துதிகள்

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந் - துடியிடையும்
அல்லும் பகலு மநவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போலே அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

## திருமால் துதி

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துஉன் பவளவாய்க் காண்பேனே.

ஊனின் மேய ஆவிநீ உறக்கமோ டுணர்ச்சி நீ
ஆனில் மேய ஐந்தும்நீ அவற்றுள் நின்ற தூய்மைநீ
வானி னோடும் மண்ணும்நீ வளங்கடற் பயனும் நீ
யானும் நீய தன்றியெம் பிரானும் நீ இராமனே.

அத்தனாகி அன்னையாகி ஆளும்எம் பிரானுமாய்
ஒத்தொவ்வாத பல்பிறப் பொழிந்துநம்மை ஆட்கொள்வான்
முத்தனார் முகுந்தனார் புகுந்துநம்முன் மேவினார்
எத்தினார் இடர்க்கடல் கிடத்தியேழை நெஞ்சமே.

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர் தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே.

அன்பே தகளியா ஆர்வமே மெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் - தாரணர்க்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

# பட்டணத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

# உடற்கூற்று வண்ணம்

தனதன தான தனதன தான
தந்த தனந்தன தந்த தனந்த
தனன தனந்த தனன தனந்த
தானன தானன தானனதந்
தந்ததன தான தனதானா

ஒருமட மாது மொருவனு மாகி
யின்ப சுகந்தரு மன்பு பொருந்தி
யுணர்வு கலங்க யொழுகி யவிந்து
வூறுசு ரோணித மீதுக லந்து -

பனியிலொர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்துபு குந்து திரண்டு
பதும வரும்பு கபடமி தென்று
பார்வைமெய் வாய்செவி கால்கைக ளென்ற -

உருவமு மாகி யுயிர்வளர் மாத
மொன்பது மொன்று நிறைந்து மடந்தை
யுதர மகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமு நாளு மறிந்து -

மகளிர்கள் சேனை தரவணை யாடை
மண்பட வுந்தியு தைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை யமுத மருந்தி
யோரறி வீரறி வாகிவ ளர்ந்து -

ஒளிநகை யூற லிதழ்மட வாரு
வந்துமு கந்திட வந்து தவழ்ந்து
மடியி லிருந்து மழலை மொழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப -

உடைமணி யாடை யரைவட மாட
வுண்பவர் தின்பவர் தங்களொ டுண்டு
தெருவி லிருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரொ டோடி நடந்து -
அஞ்சுவய தாகி விளையாடியே.

உயர்தரு ஞான குருவுப தேச
முந்தமி ழின்கலை யுங்கரை கண்டு
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதி னாறு பிராயமும் வந்து -

மயிர்முடி கோதி யறுபத நீல
வண்டிமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொ னிலங்கு பணிக ளணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க -

மதன சொரூப னிவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழியவெ றிந்து
மாமயில் போலவர் போவது கண்டு -

மனது பொறாம லவர்பிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவ மயங்கி யிதழமு துண்டு
தேடிய மாமுதல் சேரவ ழங்கி -

ஒருமுத லாகி முதுபொரு ளாயி
ருந்த தனங்களும் வம்பி லிழந்து
மதன சுகந்த விதனமி தென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து -

வளமையு மாறி யிளமையு மாறி
வன்பல் விழுந்திரு கண்க ளிருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாத விரோத குரோத மடைந்து -
செங்கை யினிலோர் தடியு மாகியே.

வருவது போவ தொருமுது கூனு
மந்தியெ னும்படி குந்தி நடந்து
மதியு மழிந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல் விடாமன் மொழிந்து -

துயில்வரு நேர மிருமல் பொறாது
தொண்டையு நெஞ்சுமு முலர்ந்து வறண்டு
துகிலு மிழந்து சுணையு மழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு -

கலியுக மீதி லிவர்மரி யாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச
சலகல வென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து -

தெளிவு மிராம லுரைதடு மாறி
சிந்தையு நெஞ்சமு முலைந்து மருண்டு
திடமு முலைந்து மிகவு மலைந்து
தேறிந லாதர வேதென நொந்து -

மறையவன் வேத னெழுதிய வாறு
வந்தது கண்டமு மென்று தெளிந்து
இனியென கண்ட மினியென தொந்த
மேதினி வாழ்வுநி லாதினி நின்ற -

கடன்முறை பேசு மெனவுரை நாவு
றங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி யொழுகிட வந்து
பூதமு நாலுசு வாசமு நின்று -
நெஞ்சு தடுமாறி வருநேரமே.

வளர்பிறை போல வெயுறு முரோம
முஞ்சடை யுஞ்சிறு குஞ்சியும் விஞ்ச
மனது மிருண்ட வடிவு மிலங்க
மாமலை போல்யம தூதர்கள் வந்து -

வலைகொடு வீசி யுயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கின ரேயிவர் கால மறிந்து -

பழையவர் காணு மெனுமய லார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்த
ரிடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியு மென்று -

பலரையு மேவி முதியவர் தாமி
ருந்த சவங்கழு வுஞ்சில ரென்று
பணிதுகில் தொங்கல் களப மணிந்து
பாவக மேசெய்து நாறு முடம்பை -

வரிசை கெடாம லெடுமென வோடி
வந்திள மைந்தர்கு னிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை யடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து -

விறகிட மூடி யழல்கொடு போட
வெந்து விழுந்துமு றிந்து நிணங்க
ளுருகி யெலும்பு கருகி யடங்கி
யோர்பிடி நீறுமி லாத வுடம்பை -
நம்புமடி யேனை யினியாளுமே.

உ
சிவமயம்

# நவக்கிரக வழிபாடு

## சூரியன்

சீலமாய் வாழச் சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

## சந்திரன்

எங்கள் குறைக ளெல்லாந் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி.

## செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு.

## புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபக வானே பொன்னடி போற்றி
பதந்தந் தாள்வாய் பண்ணொலி யானே
உதவியே யருளும் உத்தமா போற்றி.

## வியாழன்

குணமிகு வியாழக் குருபக வானே
மணமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்
ப்ரகஸ்பதி வியாழப் பாகுரு நேசா
க்ரக தோஷமின்றிக் கடாக்ஷித் தருள்வாய்.

## வெள்ளி

சுக்ர மூர்த்தி சுபமிக ஈவாய்
வக்ர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே.

## சனீஸ்வரன்

சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்களம் பொங்க மனம்வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா.

## இராகு

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக வருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி.

## கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி

# கோளறு பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 01

என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 02

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 03

மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
கொதியுறு கால னங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 04

நஞ்சணி கண்ட னெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 05

வாள்வரி யதள தாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
கோளரி யுழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 06

செப்பிள முலைநன் மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 07

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரயன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 08

பலபல வேட மாகும் பரன் நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடெருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 09

கொத்தலர் குழலி யோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியு நாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
புத்தரோ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபு ரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள்
வானில் அரசாள்வர் ஆணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

தெல்லிப்பழை கிழக்கு - கவளாவத்தை

# அருள்மிகு ஞானவைரவ சுவாமி

# திருவூஞ்சற் பாக்கள்

## காப்பு

சீர்மேவும் யாழ்ப்பாணத் தெல்லி மேல்பால்
திகழ்கவளா வத்தைதனில் வாழ்வு செய்யும்
பேர்மேவு பிரமன்றன் சிரத்தைக் கொய்த
பெருமையுறு வயிரவர்மேல் ஊஞ்சல் பாட
வார்மேவு வனசரர்தம் வள்ளி மாது
வடிவேல னைத்தழுவ வைத்த செல்வன்
கார்மேவு கைலையுறை கௌரி யீன்ற
கணபதிதன் னிருசரணங் காப்ப தாமே.

## ஊஞ்சல்

பத்திசெறி செம்பவளத் தூண்கள் நாட்டிப்
பசியமர கதப்புதிய விட்ட மோடித்
துத்திபெறு மாணிக்கக் கயிறு பூட்டித்
தூயவயி டூரியத்தாற் பலகை மாட்டி
நித்திலஞ்சேர் பீடமது நிலவு மூஞ்சல்
நிறைகருணை யோடிவந்து நீடும் தெல்லி
அத்திமிகு சீர்கவளா வத்தை மேவும்
ஆதிவயி ரவதேவே ஆடீ ரூஞ்சல். 2

செய்யதிரு நாதவிந்து கால்க ளாகச்
சிறந்தசிவ சத்தியருள் விட்ட மாகத்
துய்யமறை யீரிரண்டுங் கயிற தாகச்
சுத்தசிவா கமமதுவே பலகை யாக
வையமகிழ் பிரணவமே பீட மாக
வகுத்ததிரு ஊஞ்சல்மிசை வைகி யார்க்கும்
ஐயமிகு நற்கவளா வத்தை மேவும்
ஆதிவயி ரவதேவே ஆடீ ரூஞ்சல். 3

இந்திரனும் நான்முகனும் வடந்தொட் டாட்ட
இன்னிசைதேர் கந்தருவர் யாழை மீட்டத்
தந்திரஞ்சேர் பாரதியின் னிசைகள் பாடத்
தனதன்கை யடைப்பையினைத் தாங்கி நிற்பச்
சந்திரனும் சூரியனும் கவிகை தாங்கச்
சாமரையா தியவருணன் வாயு வேந்த
அந்திசெறி சோலைநிறை கவளா வத்தை
ஆதிவயி ரவதேவே ஆடீ ரூஞ்சல். 4

மல்லல்செறி வான்புயத்துத் தொடைய லாட
மார்பிலங்கு கண்டிமணி மலர்ந்தே யாட
வல்லவினை யோட்டுதிரி சூல மாட
வரதமுட னபயமெனுங் கரங்க ளாட
நல்லருளைக் கூட்டுமலர்த் தாள்க ளாட
நாடுதிருச் சடைமுடியிற் கிரீட மாட
அல்லலிலா வான்கவளா வத்தை மேவும்
ஆதிவயி ரவதேவே ஆடீ ரூஞ்சல். 5

கொச்சைவளர் பிள்ளையழ அமுது மீந்த
கோமளவல் லியரீன்ற குமர தேவே
இச்சகத்தில் உருத்திரநற் றொழிலே பூண்டாய்
இறஞ்சினருக் கின்புதவும் இயல்பே கொண்டாய்
பிச்சைகொளப் பிரமன்றன் கபால மேந்திப்
பீடுசேர் நடுயாமம் பிரியம் கொண்டாய்
அச்சமிலா தொளிர்கவளா வத்தை மேவும்
ஆதிவயி ரவதேவே ஆடீ ரூஞ்சல். 6

கூடல்மிகு சோலைதனிக் குயில்கள் கூவக்
கொன்றைமா தெங்குபலா அளிகள் தாவப்
பாடல்மிகு மிசைவாணர் பண்கள் பாடப்
பத்திமிகு மடியரரோ கராவென் றாட
வாடலுறும் அறுபகையும் வதங்கி ஓட
வாழ்வுதரு சித்தாந்த நெறியே கூட
ஆடல்பயில் பதிகவளா வத்தை மேவும்
ஆதிவயி ரவதேவே ஆடீ ரூஞ்சல். 7

வறிஞருளம் மகிழவுறு பொருள்கள் ஈயும்
வள்ளியோர் தினம்பரவும் வடுக நாதன்
அறிஞர்புகழ் மணிமயிலோன் முன்னர்த் தோன்றி
அறம்பேணி மறந்தேய்த்தே யருளு முந்தன்
சிறியதொண்ட ரிடம்பிள்ளைக் கறியை வேட்டுச்
சிறந்தவரு ளீந்தருளுந் தேவ தேவன்
அறிஞர்மிக வளர்கவளா வத்தை மேவும்
ஆதிவயி ரவதேவே ஆடீ ரூஞ்சல். 8

மன்பதைக ளுக்கருளை வாரி நல்கும்
மறைச்சிரமும் காணாத மருந்தே போற்றி
துன்பமுறு மடியரிடர் துடைக்குஞ் செல்வா
தொல்லைமறை ஞாளிமிசைத் தோற்றங் கொண்டாய்
இன்பமுறு காடுகளா ஈந்த மைந்தா
ஏழையேன் உளங்கொள்ளும் இனிய தந்தாய்
அன்பர்மிக வாழ்கவளா வத்தை மேவும்
ஆதிவயி ரவதேவே ஆடீ ரூஞ்சல். 9

பணிகிளரும் மார்பினரே யாடீ ரூஞ்சல்
பாயுங்கார்ப் பரியினரே யாடீ ரூஞ்சல்
மணிகிளரும் மேனியரே யாடீ ரூஞ்சல்
மண்டலத்தைக் காப்பவரே யாடீ ரூஞ்சல்
திணிகிளரும் பூங்கழலோய் ஆடீ ரூஞ்சல்
திருந்தடியார் குடிவாழ்வே யாடீ ரூஞ்சல்
அணிகிளரும் அருங்கவளா வத்தை மேவும்
ஆதிவயி ரவதேவே ஆடீ ரூஞ்சல். 10

## வாழி

ஆக்களுடன் அந்தணரும் அறமும் வாழி
அருமறையா கமமடியார் அரசும் வாழி
பாக்களுறு தமிழ்கண்டி நீறும் வாழி
பரவிடுமைந் தெழுந்தெங்கும் பல்கி வாழி
நோக்கமிகு சித்தாந்த சைவம் வாழி
நூலிடையார் கற்பினொடு நோன்பும் வாழி
ஆக்கமிகு மருங்கவளா வத்தை வாழி
ஆதிவயி ரவரருளும் வாழி வாழி.

## பராக்கு

திங்களணி யெங்கள்பரன் சேயே பராக்கு
தேவர்கள் அகந்தையினைத் தீர்த்தாய் பராக்கு
மங்கையுமை கண்குளிர வருவாய் பராக்கு
வழிபடுவார் இடர்தீர்க்கும் வரதா பராக்கு.

கானநிறக் கஞ்சுகமெய் கவித்தாய் பராக்கு
கனகநிறத் திருமேனிக் கடவுள் பராக்கு
வேலையெரிந் தோன்மகனே விகிர்தா பராக்கு
வித்தகனே விண்ணவர்தம் வேந்தே பராக்கு.

## எச்சரீக்கை

திருவார்மலர்க் கண்ணர்முனந் தேடி யறியாத
தேவன்எமை யாள்வான் தருஞ் செல்வா எச்சரீக்கை
கருணாநிதி யருளியெமைக் காக்கும் பரஞ்சோதி
கவளாவத்தை மேவுமெங்கள் கடவுள் எச்சரீக்கை

பாவம்வினை யறுப்பார்தொழும் பரமா எச்சரீக்கை
பத்தர்க்கருள் புரியும்மலர்ப் பாதா எச்சரீக்கை
தேவர்பணிந் தேத்தும்க்ஷேத்ர பாலா எச்சரீக்கை
செங்கண்விடை யரனார்மகிழ் தேவா எச்சரீக்கை

## லாலி

ஈச லாலி வளர் தேச லாலி
வாசவன் வணங்கும்பரஞ் சோதி லாலி

மாலய னகந்தைகொளும் வரத லாலி
மாமணிநேர் கஞ்சுகனே லாலி லாலி - ஈச

கந்தமல ரோன்சிரங்கொய் காபாலி லாலி
கணபதி தனக்கிளைய கர்த்த லாலி
நந்தமனக் கோயில்கொள்ளும் நாத லாலி
நம்பினர்க் கருள்புரியும் நக்க லாலி - ஈச

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் நித்தியசுப - மங்களம்
சங்குகை தரித்தவர்க்குத் தண்டனை புரிந்தவர்க்கு
செங்கரத்திற் சூலருக்கு க்ஷேத்திரத்தின் காவலர்க்கு
- மங்களம்

முத்திதரும் நாதருக்கு முருவெல்வெம்படையினர்க்கு
சித்தியருள் முத்தருக்குச் செக்கரஞ் சடையினர்க்கு
- மங்களம்

கந்தருக்கு முன்னவர்க்குக் கபாலங்கை யேந்தினர்க்கு
முந்தைவினை தீர்ப்பவர்க்கு முக்கணனார் தந்தவர்க்கு
- மங்களம்

## எட்டிகுடியேசல்

**முருகன்:**

மாசின்முரு கேசருக்கும் மாதுதெய் வானைக்கும்
ஏசல்நே ரிட்டதையா னியம்பவே - காசினியில்
நெஞ்சடிலன் நின்றவெழிற் றிகழ்கயமா முகதேவன்
கஞ்சமலர்த் தாளிணையே காப்பு.

காசினியோர் புகழு மெட்டிக்குடி வேலவா
கதவைத் திறக்கு மேசற்பாட - எழில்
கதவைத் திறக்கு மேசற்பாட.

மூஷிக வாகன மீதேறும் விநாயகன்
முளரி மலரடியே காப்பு - எழில்
முளரி மலரடியே காப்பு.

செய்யவடி வேலேந்து முருகன் வருகுற
சேதியறிந் தாளந்த மாது - தெய்வ
யானையறிந் தாளப் போது.

பரிவுடன் வடிவேலர் முருகர் வாராரென்று
பருக்கென் றடைத்தா ளிப்போது - கதவை
பருக்கென் றடைத்தா ளிப்போது.

அடைத்த கதவுந் தெரியாமலே முருகர்
ஆசையி னாலே மதிமயங்கியே - அவன்
ஆசையி னாலே மதிமயங்கியே.

தடதட வென்று விரைவினி லேந்து
தட்டினார் கையினாற் றானே - கதவைத்
தட்டினார் கையினாற் றானே.

**தெய்வயானை:**

செண்பகவதியடி கதவைத் தட்டி யதட்டி
திறவென்று சொன்னவ ராரோ - இந்த
தெருவினில் வந்தவ ராரோ.

**முருகன்:**

எந்தன் கண்மணியே யறியாயோ நான்தான்
எட்டிகுடி வேலவ னானே - பெண்ணே
எட்டிகுடி வேலவ னானே.

**தெய்வயானை:**

எட்டி குடியைவிட்டு விரைவினி லிரவிலே
எப்படி வந்தீர் சொல்லுஞ் சுவாமி - நீர்
எப்படி வந்தீர் சொல்லுஞ் சுவாமி.

**முருகன்:**

மாதெனில் முகமதி யொளியைக் கண்டு
வந்தேனடி யிந்த வேளை - எழில்
மாதரசே யிந்த வேளை.

**தெய்வயானை:**

இந்த வேளையிரு காத வழிநடந்து
எவ்விதம் நடந்து வந்தீரோ - சுவாமி
எவ்விதம் நடந்து வந்தீரோ.

**முருகன்:**

கட்ட ழகி யுன்னை மனதில் நினைத்தபோதே
காத வழியுமரை நாழியே - இரு
காத வழியுமரை நாழியே.

**தெய்வயானை:**

அரைநாழி யும்மைவிட்டுப் பிரியாளே அந்தவள்ளி
அறியாம லோடிவந்தீரோ - அவளுக்குத்
தெரியாம லோடிவந்தீரோ?

**முருகன்:**

அந்த வள்ளியை விட்டு உந்தன் முகத்தைக் காண
ஆசை கொண்டு தேடிவந்தேன் - பெண்ணே
ஆசை கொண்டு காண வந்தேன்.

**தெய்வயானை:**

காணவந்ததி லென்ன வாயிர மாகவே
கைப்பொருள் கொண்டுவந் தீரோ - சுவாமி
காணிக்கை கொண்டுவந் தீரோ.

**முருகன்:**

வேணுமென்ற தெல்லாம் நானிங்கே தருகிறேன்
விரைவுடனே சொல்லுவாயே - பெண்ணே
விரைவுடனே சொல்லுவாயே.

**தெய்வயானை:**

சொல்லுவதுமில்லை யுமது பொருளும் வேண்டாம்
துரிதத்தில் போவாய் நேயாள் வீடே - சுவாமி
துரிதத்தில் போவாய் நேயாள் வீடே.

**முருகன்:**

நேசமில் லாதவள் போலேநீ பேசுகிறாய்
நித்திரை மயக்கமோ பெண்ணே - உனக்கு
நித்திரை மயக்கமோ பெண்ணே.

**தெய்வயானை:**

நித்திரையை விட்டுநீர் வருவீ ரென்று
நினைந்திருப்பாளே வள்ளி போம்போம் - சுவாமி
நினைந்திருப்பாளே வள்ளி போம்போம்.

**முருகன்:**

போமெனநீர் சொல்லஞாய மல்லவே நாம்
போனா லென்ன கெட்டுப் போகும் - பெண்ணே
போனா லென்ன கெட்டுப் போகும்.

**தெய்வயானை:**

கெட்டுப் போகா தந்தசட்டக் கல்விகளெல்லாம்
கேட்பவரார் நீர்சொல்லும் - சுவாமி
இங்கு கேட்பவரார் நீர்சொல்லும் சுவாமி.

**முருகன்:**

கேட்கச் சொல்லியேயுன்னை யாரடிக்கிறா ரிப்போ
    கேவல மெனை யிகழாதே - பெண்ணே
    கேவல மெனை யிகழாதே.

**தெய்வயானை:**

இகழவும் பேசவு மென்னாலாகா தந்த
    இனிய வள்ளிக்கே யொக்குந்தானே - சுவாமி
    இனிய வள்ளிக்கே யொக்குந்தானே.

**முருகன்:**

பக்க மெனையணைந்தா லுன்னை யினிப்பிரியேன்
    வுறுதி சொன்னேன் மண்டலமறிய - பெண்ணே
    வுறுதி சொன்னேன் மண்டலமறிய.

**தெய்வயானை:**

மண்டலம் புகழ்வடி வேலேந்து முருகரே
    வார்த்தை பழக்க வந்தீரோ - போம்போம்
    வார்த்தை பழக்க வந்தீரோ.

**முருகன்:**

வார்த்தை பழக்கிடநான் வல்லவ னல்லவுன்
    மனதிற் கோபஞ் செய்யாதே பெண்ணே - உந்தன்
    மனதிற் கோபஞ் செய்யாதே பெண்ணே.

**தெய்வயானை:**

போதும்போது மிந்த வுபசார வார்த்தை சொல்ல
    போதிக்க வந்தையோ நீர்சுவாமி - இப்போ
    போதிக்க வந்தையோ நீர்சுவாமி.

**முருகன்:**

கன்னி யுன்மன மிரங்காத தென்னவிரு
    காலும் நோகுதடி கண்ணே - யெந்தன்
    காலும் நோகுதடி பெண்ணே.

**தெய்வயானை:**

முள்மிதியடி முனைமேலே நிற்ப வர்க்குக்கா
லுறுத்துமோ வாயற் படிதானே - சுவாமி
உறுத்துமோ வாயற் படிதானே.

**முருகன்:**

மரகதமே நல்ல மயிலே குயிலேயினி
வந்து கதவைத் திறப்பாயே - விரைவாய்
வந்து கதவைத் திறப்பாயே.

**தெய்வயானை:**

கதவைத் திறவெனவே தொந்தரையேன் செய்வீர்
கனதன மென்ன கொண்டுவந்தீர் - சுவாமி
கனதன மென்ன கொண்டுவந்தீர்.

**முருகன்:**

கொண்ட குடியின் மாந்தர் காணிக்கை யாகவைத்த
கொலுசு இருக்கிறது தாறேன் - பெண்ணே
கொலுசு இருக்கிறது தாறேன்.

**தெய்வயானை:**

பஞ்சணை மெத்தையின் மேற் கொஞ்சாதே நினது
பாதத்தி லிட்டழகைப் பாரும் - சுவாமி
பாதத்தி லிட்டழகைப் பாரும்.

**முருகன்:**

தைப்பூசந் தனில்மாந்தர் காணிக்கையாக வைத்த
தண்டையுனக் கிப்போது தாரேன் - பெண்ணே
தண்டையுனக் கிப்போது தாரேன்.

**தெய்வயானை:**

வைப்பாட்டி யுனக்கெவ ளாகிலுந்தா னிருந்தால்
வைத்தவள் காலுக்குப் பாரும் - சுவாமி
வைத்தவள் காலுக்குப் பாரும்.

**முருகன்:**

சித்திரா பருவத்திற் சேர்த்துவைத் திருக்கிற
திகழுமணித் தாழ்வடந் தாரேன் - பெண்ணே
திகழுமணித் தாழ்வடந் தாரேன்.

**தெய்வயானை:**

தேவதேவனே யிந்த வழகிய நகைகளைத்
தேடி யெடுத்து வந்தீரோ - சுவாமி
தேடி யெடுத்து வந்தீரோ.

**முருகன்:**

இந்திர லோகத்து வெள்ளையானை வந்திருக்கிறது
இதனையுனது கண்ணாற் பாராய் - பெண்ணே
இதனையுனது கண்ணாற் பாராய்.

**தெய்வயானை:**

கண்ணினாற் பார்ப்பதென்ன வெள்ளையானை உம்மைப்போல்
காசினியிற் படைத்தோரார் சுவாமி - இக்
காசினியிற் படைத்தோரார் சுவாமி.

**முருகன்:**

இந்தக் கதவுதன்னைத் திறக்கவே மந்திர
மிருப்பதை என்னிடத்திற் பாராய் - பெண்ணே
யிருப்பதை என்னிடத்திற் பாராய்.

**தெய்வயானை:**

இக்கண மிக்கதவைத் திறப்பீரே யாகிலும்மை
இன்பமுட னணைவேன் சுவாமி - இன்று
இன்பமுட னணைவேன் சுவாமி.

**முருகன்:**

சிந்தையிற் பஞ்சாட்சரந் தன்னை நினைத்தவுடன்
திறந்தவக் கதவு தானே - அப்பா
திறந்தவக் கதவு தானே.

**தெய்வயானை:**

திறந்தவுடனே வானோர் பூமழை பெய்யவும்
தெய்வ யானையை யணைந்தாரே - சுவாமி
தெய்வ யானையை யணைந்தாரே.

## புராணம்

கல்லாப் பிழையுங் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும், நின்னஞ் செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையு
மெல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

## மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதும் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னா லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட்(டு) உண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்கும் தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

# வாழ்த்தொலி

1. நம பார்வதி பதையே
   - ஹர ஹர மகாதேவா
2. தென்னாடுடைய சிவனே போற்றி
   - எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
3. அண்ணாமலை எம் அண்ணா போற்றி
   - கண்ணாரமுதக் கடலே போற்றி
4. ஏகம்பத்துறை எந்தாய் போற்றி
   - பாகம் பெண்உரு ஆனாய் போற்றி
5. சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க
   - பக்தி வலையில் படுவோன் காண்க.
6. குவலைக் கண்ணி கூறன் காண்க
   - அவளும் தானும் உடனே காண்க.
7. பராய்த்துறை மேவிய பரனே போற்றி
   - சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
8. சிற்சபேசா
   - சிவ சிதம்பரம்
9. ஸ்ரீ வல்லிகாந்த ஸ்மரனே
   - சிவசுப்பிரமணியம்
10. ஸ்ரீ லெட்சுமிகாந்த ஸ்மரனே
    - ஜெய ஜெய ராம்
11. கோவிந்த நாம சங்கீர்த்தனம்
    - கோவிந்தா கோவிந்தா
12. இன்பமே சூழ்க ! × 3
    - எல்லோரும் வாழ்க

## மகேஸ்வர பூஜை - திருமுறை ஓதுதல்

திருச்சிற்றம்பலம்

அன்னம்பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை
என்னம்பாலிக்கும் மாறு கண்டின்புற
இன்னம்பாலிக்கும் மோஇப்பிறவியே.

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்மதி சூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையாமெனில் உலகர் முன் வருக என உரைப்பார்.

திருச்சிற்றம்பலம்



தெல்லிப்பழை கிழக்கு,
கவளாவத்தை
அருள்மிகு ஞானவைரவர் சுவாமி
தேவஸ்தான முகப்புத் தோற்றம்

Printed by: Anush Printers, Col-13 · 0777 072 893